


# தமிழரசு

ஆகஸ்ட் 1-15, 1999, ரூ. 5









**நமது அன்றாட பழக்கவழக்கங்களால், எய்ட்ஸ் வராது. அதற்கு நீங்களே ஒரு உதாரணம்.**

காலையில் எழுந்தது முதல் ராத்திரி படுக்கப் போகும் வரை நீங்கள் எத்தனையோ பேரைச் சந்திக்கிறீர்கள். ஓட்டலுக்குச் செல்கிறீர்கள், சினிமா பார்க்கிறீர்கள், நெரிசலான பஸ்ஸில் பயணம் செய்கிறீர்கள், பலருடன் கை குலுக்குகிறீர்கள்.

இவர்களில் யாருக்காவது எச்ஐவி/ எய்ட்ஸ் பாதித்து இருக்கலாம்.

**சாதாரண பழக்கவழக்கங்களின் மூலம் எய்ட்ஸ் பரவுவதாக இருந்தால், உங்களையும் எய்ட்ஸ் பாதித்திருக்க வேண்டும்.**

**ஆனால் அப்படி இல்லையே...**

ஏனெனில், கை குலுக்குவதாலோ, உணவைப் பகிர்ந்து கொள்வதாலோ, தொடுவதாலோ, தும்மலினாலோ, கழிப்பிடத்தை அனைவரும் உபயோகிப்பதாலோ, எய்ட்ஸ் பரவுவதில்லை.

எனவே எய்ட்ஸ் பாதித்தவரைக் கண்டு நீங்கள் ஒதுங்க வேண்டியதில்லை. உங்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை.


அவர்களும் நம்மைப் போன்றவர்கள்தான். அவர்களுக்கு எப்பொழுதும் போல நாம் அன்பும், ஆதரவும் காட்டுவோம்.

**சிறிதளவு ஆதரவு பெருமளவு சுமையைக் குறைக்கும்.**

**குழந்தை பிறப்பைத் தடுப்போம்**
**எய்ட்ஸ் வந்தோரைக் காப்போம்**

மேலும் விவரங்களுக்கு அணுக வேண்டிய முகவரி :
**தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு**
417, பாந்தியன் ரோடு, சென்னை - 600 008.
தொ.பே.: 8255467, 8255261, 8254917.
24 மணிநேர தொ.பே.: 8256882, 8256864.

Mudra:TNSACS:6259:98



## இந்த இதழில்...


★ ஊர் மெச்சும் ஊரக வளர்ச்சி ............ 2

★ கம்பன் விழாவில் கலைஞர் ............ 27

★ தியாக வேள்வியில் சுதந்திரம் ............ 30

★ அழகுக்கு அழகு சேர்க்கும் உவமைகள் ............ 34

★ உலக உணவுச் சூழல் ............ 38

★ மேல்மருத்துவத்தூர் மருத்துவமனை திறப்புவிழா .... 41

★ அருங்காட்சியகமாகும் சிறைச்சாலை ............ 43

★ இந்தியாவின் மீன் பொருள் ஏற்றுமதி ............ 44

★ காற்றுக்கு வேலி ............ 46



# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2030

ஆடி

ஆகஸ்ட் 1–15, 1999

இதழ் : 3

மலர் : 31

விலை ரூ. 5


### திருக்குறள்

***வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்***
***ஐந்தும் அகத்தே நகும்.***


ஒழுக்க சீலரைப் போல உலகத்தை ஏமாற்றும் வஞ்சகரைப் பார்த்து அவரது உடலில் கலந்துள்ள நிலம், நீர், தீ, காற்று, வெளி எனப்படும் பஞ்சபூதங்களும் தமக்குள் சிரித்துக் கொள்ளும்.

– கலைஞரின் திருக்குறள் உரையிலிருந்து...

# ஊர் மெச்சும் ஊரக வளர்ச்சி

கிராமப்புறங்களில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்களின் வருமானத்தைப் பெருக்கி, வறுமையை ஒழிப்பதை முக்கிய நோக்கமாகக் கொண்ட, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், கிராமப்புற இளைஞர்களுக்கான சுய வேலை வாய்ப்புப் பயிற்சித் திட்டம், மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம் போன்ற திட்டங்களை, தமிழக அரசு சிறப்பாக நிறைவேற்றி வருகிறது. வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்களின் வருமானத்தைப் பெருக்குவது வேலைவாய்ப்பினை உருவாக்குவதன் மூலமும் மற்றும் சுயவேலை வாய்ப்பை ஏற்படுத்துவதன் மூலமுமே சாத்தியமாகக் கூடும். எனவே, வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்கள், போதிய வருமானத்தைத் தரக்கூடிய தொழில்களில், தகுந்த சொத்துக் களை உருவாக்கி, சுயமாக வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள ஏதுவாக, அரசு மானியத்துடன் கூடிய கடனுதவி அளிக்கப்படுகிறது. தங்களது திறமையை மேம்படுத்திக்கொண்டு, வேலை வாய்ப்பு பெற ஏதுவாக இளைஞர்களுக்குத் தொழில் திறன் பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும், வருவாய் தரத்தக்க தொழில்களில் குழு செயல்பாட்டு முறையில் ஈடுபடும் மகளிர் குழுக்களுக்கு, சுழல் நிதி அளிக்கப்படுகிறது. இவை தவிர, கிராமப்புற கைவினைஞர்களுக்கு நவீன தொழில் கருவிகள் வழங்கப்படுகின்றன.

கிராமப்புற பகுதிகளில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் குடும்பங்களில், கடந்த மூன்று ஆண்டுகளில் 4,76,106 குடும்பங்களுக்கு, பயனுள்ள மற்றும் வருவாய் தரத்தக்க சொத்துக்களை உருவாக்கிக் கொள்வதற்காக ரூ.601.87 கோடி அரசு



மானியத்துடன் கூடிய கடனாக வழங்கப்பட்டுள்ளது. இதில், 2,26,978 குடும்பங்கள் ஆதிதிராவிடர் மற்றும் மலை சாதியினரைச் சார்ந்த குடும்பங்களாகும். அத்துடன் ரூ.19.89 கோடி செலவில், 44,737 இளைஞர்களுக்குத் தொழிற் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. வருவாய் தரத்தக்க தொழில்களில் குழு செயல்பாட்டு முறையில் ஈடுபட்டுள்ள 6,507 மகளிர் குழுக்களுக்குச் சுழல் நிதியாக ரூ.17.27 கோடி வழங்கப்பட்டுள்ளது. மேலும், ரூ.4.85 கோடி செலவில், 26,643 கைவினைஞர்களுக்கு நவீன தொழிற் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

மத்திய அரசின் 50ஆவது (1993-94) சுற்று, தேசிய மாதிரி கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டில் 34-38 சதவிகிதம் மக்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. வறுமை ஒழிப்புத் திட்டங்களைத் தமிழக அரசு முனைப்புடன் செயல்படுத்தி படிப்படியாக வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளவர்களின் சதவிகிதத்தையும் எண்ணிக்கையையும் குறைத்துள்ளது. தற்சமயம் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளவர்களின் கணக்கெடுப்பினைப் புதியதாக நடத்தி, வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளவர்களின் பட்டியல் தயாரிக்கப்பட்டு வருகிறது. இப்பணி முடிவுற்று கிடைக்கப்பெறும் புள்ளி விவரங்களை ஒப்பு நோக்குகையில், வறுமை ஒழிப்புத் திட்டங்களில் தமிழக அரசின் முனைப்பான செயல்பாட்டின் காரணமாக, தமிழகத்தில், வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளவர்களின் எண்ணிக்கை குறைக்கப் பட்டிருப்பது உறுதியாகும்.

1999-2000ஆம் ஆண்டு முதல், சுய வேலை வாய்ப்பின் மூலம் வறுமையை ஒழிப்பதை நோக்கமாகக் கொண்ட, மேற்கூறப்பட்ட ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டம், கிராமப்புற இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்புப் பயிற்சித் திட்டம், கிராமப்புற மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம், கிராமப்புற கைவினைஞர்களுக்கு நவீன தொழிற்கருவிகள் வழங்கும் திட்டம், கங்கா கல்யாண் திட்டம், மில்லியன் கிணறுகள் திட்டம் ஆகியவை அனைத்தும் ஒருங்கிணைக்கப்பட்டு, பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டம் என்ற ஒரே திட்டமாகச் செயல்படுத்தப்படும். ஆங்காங்கே கிடைக்கும் இயற்கை வளங்கள் மனித வளம், தொழில் திறமை மற்றும் விற்பனைக்கான சந்தை வசதிகள் ஆகியவற்றிற்கேற்ப நிரந்தரமாக வருமானம் தரக்கூடிய வேலைவாய்ப்பினை உருவாக்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். ஒவ்வொரு வட்டாரத்திலும், அந்தந்தப் பகுதிகளில், மேற்கொள்ளப்படக்கூடிய 5-10 வரையிலான தொழில்கள் கண்டறியப்படும். சுயவேலை வாய்ப்பினை நோக்கமாகக் கொண்ட பல்வேறு சாத்தியமான நடவடிக்கைகளைத் தொகுப்பாகச் செயல்படுத்தவும், ஒன்றுக்கொன்று தொடர்புள்ள வகையில் ஒருங்கிணைத்துச் செயல்படவும், உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை விற்பனை செய்யத் தேவையான சந்தை வசதிகளைக் கொண்டதாகவும் உள்ள தகுதியான இடங்களைத் தேர்வு செய்யப்படும். பயனாளிகளை சுய உதவி குழுக்களாக ஒருங்கிணைத்து தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில்களுக்கான நவீன தொழில் நுட்பத்தினை உரிய நிறுவனங்களிடமிருந்து பெற்று, பயிற்சி அளித்து, தரமான பொருட்களை உற்பத்தி செய்யப்படும். மேலும், உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களுக்கான சந்தை வசதிகள், போதுமான அளவில் மேம்பாடு செய்ய கிராம அங்காடிகள், முக்கிய நகரங்களில் விற்பனை நிலையங்கள், கிராமம் கிராமமாகச் சென்று விற்பனை செய்ய விற்பனை ஊர்திகள் போன்ற வசதிகள் ஏற்படுத்தப்படும். இத்திட்டத்திற்கென 1999-2000மாவது ஆண்டுக்கு மத்திய அரசு ரூ.46 கோடியும் மாநில அரசு ரூ.15.33 கோடியும், ஆகமொத்தம் ரூ.61.33 கோடி வழங்கும்.

## கிராமப்புறங்களில் முழுமையான சுகாதார வசதிகளை ஏற்படுத்துவதில் கீரப்பாளையம் ஊராட்சி ஒரு முன்னோடி கிராமம்

கீரப்பாளையம் கிராம ஊராட்சி, 3,350 மக்கள் தொகையைக் கொண்டு, கீரப்பாளையம் வட்டாரத்தில் அமைந்துள்ளது. 913 குடியிருப்பு வீடுகளில், ஆதிதிராவிடர் மக்கள் தொகை 1,492 (45%) ஆகும். முக்கியத் தொழில் விவசாயமாகும்.



நிதி வருவாய்க்காகச் சில குழுக்கள் நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.


இந்த ஊரின் ஊராட்சித் தலைவர் திரு.பன்னீர் செல்வம். இந்த ஊராட்சியில் 6 வார்டுகளில் ஆண் உறுப்பினர்களும், 2 வார்டுகளில் பெண் உறுப்பினர்களும் உள்ளனர். வளர்ச்சிப் பணிகளில் ஊராட்சித் தலைவர் செயல் திறனோடு முக்கிய பங்காற்றுகிறார்.

ஒரு ஆண்டுக்கு முன்பாக, 17% குடியிருப்புகள் கழிப்பிட வசதியைப் பெற்றிருந்தது. ஆண்களும், பெண்களும் இயற்கை உபாதைகளுக்காக ஆற்றங் கரையைப் பயன்படுத்தினர். வடிகால் வசதி கிடையாது. சுகாதாரக் கேடுகளுக்குக் காரணம் கழிவுநீர்களையும், கழிவுப் பொருட்களையும் முறையாக வெளியேற்றாததாகும்.

வீட்டுக் கழிப்பிடங்களைக் கட்டுவதற்கு அரசு 1997-ல் தேவை அடிப்படையில் பங்கு கொள்ளும் முறையிலான ''டானிடா'' திட்டத்தை அரசு துவக்கியது. இந்தத் திட்டம், கிராம ஊராட்சி மூலம் செயல்படுத்தப்படுகிறது. கிராம ஊராட்சித் தலைவரும், துணைத் தலைவரும் இணைந்து இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துகின்றனர். தேவை அடிப்படையிலான திட்டத்தை அறிமுகப்படுத்திய போது, திட்டம் செயல்பாடு பற்றி கிராம ஊராட்சித் தலைவர் ஐயப்பாடான நோக்கைக் கொண்டிருந்தாலும், பிறகு நடைபெறும் பணிகளை நேரடியாகப் பார்த்தபோது, இரண்டு மாதங்களில் அவர்களுடைய ஐயப்பாடு நீங்கியது. தனது கிராமத்தில் மட்டும் தண்ணீர் ஆதாரங்களையும் சுகாதார வசதிகளையும் மேம்படுத்துவ தோடல்லாமல், அருகில் உள்ள கிராமங்களிலும் இந்த வசதிகளை ஏற்படுத்துவதற்கு, தலைவர் முக்கிய பங்கு வகித்தார். மக்களுக்குச் சுகாதார வசதியை உணர்த்தியதால், அதிகமான கழிப்பிடங்களைக் கட்ட வேண்டிய தேவையேற் பட்டது.

தரமான கழிப்பிடங்கள் கட்டுவதற்கு, பெண்களுக்கும், இளைஞர்களுக்கும் கொத்தனார் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது. இந்த கிராமத்தில் வீட்டுக்கழிப்பிடம் கட்டுவதில் தொழில்நுட்பப் பயிற்சி அளித்ததன் மூலம், கொத்தனாரின் உதவியாளர் என்ற நிலையிலிருந்து திருமதி கமல் என்பவர் கொத்தனார் எனும் நிலைக்கு முன்னேற்றமடைந்தார். ''டானிடா'' உதவியுடன்

கூடிய தண்ணீர் வசதித் திட்டத்தின் மூலம், 1998 செப்டம்பர் வரை மொத்தம் 488 வீட்டுக் கழிப்பிடங்கள் கட்டப்பட்டன. அதே சமயம், சுகாதாரத்தின் பல அங்கங்களை "டானிடா" திட்டத்தின் மூலம் செய்ய இயலாது என்பதால் இதர திட்டங்கள் மூலம் செயல்படுத்தி "முழு சுகாதாரத் திட்டம்" கீழ், ஒரு, மாதிரி கிராமமாகக் கொண்டுவரப்படுகிறது. இதன்படி, சொந்த இடம் இல்லாத வீடுகளுக்குச் சமுதாயக் கழிப்பிடங்கள் மத்திய ஊரக சுகாதாரத் திட்டத்தின் கீழ் கட்டிக் கொடுக்கப்பட்டன. இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளுடன், 75க்கு மேற்பட்ட கழிப்பிடங்கள் மத்திய ஊரக சுகாதாரத் திட்டத்தில் கட்டப்பட்டது. ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஒரு பள்ளிக் கழிப்பறை மற்றும் 2 கி.மீ. நீளத்திற்கு வடிகால் வசதியும் செய்யப்பட்டது. திடக் கழிவுகளை அகற்றுவதற்கு 50 குப்பைத் தொட்டிகளும், இந்தக் கழிவுகளை அகற்றுவதற்குப் பயன்படும் தள்ளு வண்டிகளும், உள்ளூரில் உள்ள தன்னார்வத் தொண்டு நிறுவனம் வழங்கியது. இதே ஆண்டில் வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ், இரண்டு ஏரிகள் தூர் வாரப்பட்டு, கரைகள் பலப்படுத்தப்பட்டன. ரூ.4.10 இலட்சம் செலவில் இந்த ஏரிகளில் குளியல் துறை கட்டப்பட்டது. 1998-99ஆம் ஆண்டில் வடிகால் கால்வாய்கள், ஊராட்சி ஒன்றியப் பொது நிதியில் கட்டப்பட்டன. ஊராட்சித் தலைவர் முயற்சி செய்து, தெருக்களுக்குச் சிமெண்ட் நடைபாதைகளைக் கிராம ஊராட்சி பொது நிதியிலிருந்து அமைத்துள்ளார்.



1998 செப்டம்பரில் தமிழ்நாட்டிலேயே "முழு சுகாதார வசதி பெற்ற கிராமம்" என்று அறிவிக்கப்பட்டது.


## இதனை எப்படி சாதிக்க முடிந்தது?

இந்தக் கிராமத்தில் மக்கள் விழிப்புணர்ச்சி திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. பலதரப்பட்ட ஐயப்பாடுகளை நீக்கியதால், கழிப்பிடங்களைக் கட்டுவதற்கு பொதுமக்கள் முன்வந்தார்கள். இந்த கிராமத்தில் கழிப்பறை தேவையைப் பூர்த்தி செய்வதற்கு பெண்களுக்கும் இளைஞர்களுக்கும் கொத்தனார் பயிற்சி அளிக்கப்பட்டது. இதனால் இந்தக் கிராமத்தில் அவர்கள் கழிப்பறைகள் கட்டுகிறார்கள். இந்தத் திட்டம், தேவை அடிப்படையிலான திட்டமாகும். 1998 செப்டம்பரில் ஒவ்வொரு வீட்டிலும் கழிப்பறை வசதியும், போதுமான சொந்த இடமில்லாத வீடுகளுக்கு இரண்டு சமுதாயக் கழிப்பறைகளும் அமைக்கப்பட்டன. இந்த கிராமத்தில் ஏற்பட்ட விழிப்புணர்வால் பிற கிராமங்களிலும் இதுபோன்ற பணி செய்ய கோரிக்கை வந்தால், கடலூர் மாவட்டம் முழுமைக்கும் முழு சுகாதார வசதி ஏற்படுத்த திட்டங்கள் தயாரித்து மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இதே போல், தமிழகத்தில் உள்ள பிற ஊராட்சித் தலைவர்களும் முழுமையான கிராம சுகாதாரத்திற்கு கவனம் செலுத்தி பாதுகாப்பான குடிநீர் தனிநபர், சமூக மற்றும் பள்ளிகளில் கழிப்பிட வசதிகள், வடிகால் வசதி, குப்பைகள் அறவே இல்லாத தூய கிராமம், சுற்றுச்சூழல் மேம்பாடு போன்றவை மூலம் கிராமப்புறத்தில் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த வேண்டும். இதுவே இவர்களின் முக்கிய கடமையும் கூட.

**கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள்**

திட்டத்தை, தொடர்ந்து செயல்படுத்துவதற்குத் தேவையை உணரச் செய்யவும், பயனீட்டாளர் களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் அவசியமாகிறது.



திட்ட செயலாக்கத்தில், அனைத்து நிலைகளிலும் பயனீட்டாளர்கள் ஈடுபட்டால், தரமான முறையில் கட்டுவதையும், ஒரு வெளிப்படையான தன்மையையும் உறுதி செய்யும்.

பாதுகாப்பான குடிநீர், தனிநபர், சமூக மற்றும் பள்ளிகளில் கழிப்பிட வசதிகள், வடிகால் வசதி, குப்பைகள் அறவே இல்லாது தூய கிராமம் சுற்றுச் சூழல் மேம்பாடு போன்றவை கிராமப்புறத்தில் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த வேண்டும். இதுவே இவர்களின் முக்கிய கடமையும்கூட.

பெண்களுக்கான முக்கியத்துவம் காரணமாகவும் தனிமை அவசியம் கருதியும் கழிப்பிடத் தேவை அசியம் என்பதை உணர்த்த வேண்டும்.

பெண்களுக்கான பல திட்டங்களாலும், அறிவொளி இயக்க மூலமாகவும் சுகாதாரம் குறித்து விளக்குவதற்கு இடமுள்ளது. இவை சுலபமான வழிமுறைகளாகும்.

கிராமங்களையும், கிராம அளவிலான தலைவரையும் சுகாதாரப் பணிகளில் பங்கு கொள்ளச் செய்வதற்கும், அறிந்து கொள்வதற்கும் மக்கள் பங்கு கொண்டு அறிதல் அல்லது ஒட்டு மொத்த சமுதாயத்தை ஈடுபடுத்துவதன் உபயோகமாகும்.

வீட்டுக் கழிப்பிடங்களைச் சுலபமாக அமைக்கலாம். இதர கூறுகளான வடிகால் வசதி மற்றும் கழிவுகளை அகற்றுதல் போன்றவைகளை பல்வேறு நடைமுறையில் உள்ள திட்டங்களின் நிதியை ஒருங்கிணைத்து உரிய-தொழில்நுட்ப உதவியுடன் மேற்கொள்ளலாம். உள்ளூர் பொதுமக்களின் ஈடுபாடு இல்லாமல், பொதுச்

சொத்துக்களைப் பராமரிப்பது என்பது மிகவும் கடினமானதாகும்.

### ஊரகப் பகுதிகளில் வேலை வாய்ப்புத் திட்டம்

கிராமப்புறங்களில் உள்ள மக்களின் வாழ்க்கை அநேகமாக விவசாயத்தை மட்டுமே மையமாகக் கொண்டு அமைந்துள்ளது. வருடம் முழுவதும் விவசாயப் பணிகள் நடைபெறுவதில்லை மற்றும் ஊரகப் பகுதிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளான இருப்பிடம், குடிநீர், சாலை வசதி, கல்வி வசதி போன்றவற்றை மேம்படுத்தினால்தான், ஊரக மக்களின் உண்மையான வாழ்க்கைத்தரம் உயரும்.

இதனை மையமாகக் கொண்டு, ஊரகப் பகுதியிலுள்ள வேலையில்லாதவருக்கும், குறைந்த வேலை வாய்ப்புள்ளவர்களுக்கும் வேலை வாய்ப்பினை ஏற்படுத்தவும், நிரந்தர பொதுச் சொத்துக்கள் உருவாக்கும் விதத்தில், மைய அரசும் மாநில அரசும் இணைந்து கீழ்க்கண்ட திட்டங்களை நிறை வேற்றுகின்றன.

1. இந்திரா நினைவுக் குடியிருப்பு - ஏழைகளுக்கு இலவச வீடுகள்
2. ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம்
3. வேலை வாய்ப்பு உறுதி அளிப்புத் திட்டம்
4. மில்லியன் கிணறு திட்டம்

மேலும், சுயவேலை வாய்ப்புத் திட்டங்களான ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டம், ஊரக இளைஞர் சுயவேலை வாய்ப்புப் பயிற்சித் திட்டம் போன்றவற்றையும் வேலை வாய்ப்பினை அதிகரித்துள்ளன. இவை தவிர, மாநில அரசின் சிறப்புத் திட்டங்களான "அண்ணா மறுமலர்ச்சித் திட்ட"த்தையும், "நமக்கு நாமே திட்ட"த்தையும் நடைமுறைபடுத்தியுள்ளது. கடந்த மூன்றாண்டுகளில் வேலை வாய்ப்பினை அதிகரிக்கும் நோக்கத்துடனும் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் ஊரக வளர்ச்சித்துறை மூலம் செய்து கொடுக்கப் பட்டுள்ளன.


இவை தவிர, பயணிகள் நிழற்குடை, சமையற் கூடங்கள், கழிவு நீர்க்கால்வாய் வசதிகள் போன்ற மற்ற சிறுபணிகளும் இத்திட்டங்கள் மூலம் செயல்படுத்தப்பட்டன. இதன் பயனாக, அதிக அளவு வடிகால் பகுதிகளில் வேலை வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டதுடன் அடிப்படை வசதிகளுக்குப் பொதுச் சொத்துக்கள் உருவாக்கப்பட்டு கிராமப்புற வேலைவாய்ப்பை ஏற்படுத்தி அவர்களுடைய வாழ்க்கைத்தரம் மேம்படுத்தப்பட்டு வருகிறது.

### ஊரகப் பகுதிகளில் நீர் ஆதாரப் பணிகள்

பல ஆண்டுகளாக நிலத்தடி நீரை, விவசாயத்திற்காகவும், குடிநீர் வசதிக்காகவும், தொழிற்சாலைகளுக்காகவும் அளவுக்கு அதிகமாக வெளிக்கொணர்ந்து பயன்படுத்தி வருவதாலும், ஆண்டுதோறும் தேவை அதிகரித்துக் கொண்டே வருவதாலும், நாளுக்கு நாள் நிலத்தடி நீரின் மட்டம் குறைந்து வருகிறது. பல இடங்களில், நீர்வற்றி, பாசனக் கிணறுகள் வறண்டு போகின்றன.

எனவே, மழைக் காலங்களில் கிடைக்கக் கூடிய மழை நீரை வழிந்தோடாமல் பலவிதங்களில் சேகரித்தும் நில அரிப்பைத் தடுத்து, மண் வளத்தைப் பாதுகாக்கவும் செய்யக்கூடிய பணிகளில் முதன்மையாகக் கருத்தில் கொண்டு புதிய கசிவு நீர்க்குட்டைகள் அமைத்தல், பல ஆண்டுகளாக முறையாகச் செப்பனிடப்படாமல் உள்ள சிறுபாசன ஏரிகளை ஆழப்படுத்தி சீர்செய்து வரவுக் கால்வாய்கள், பாசனக் கால்வாய்களைப் பழைய நிலைக்குக் கொண்டு வருதல், ஏற்கெனவே

மக்களுக்குப் பயன்படும் குளம், குட்டை ஆகியவற்றை தரப்படுத்துதல் போன்ற பணிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகிறது. வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம், மில்லியன் கிணறு திட்டம் ஆகியவை மூலம் இப்பணிகள் கடந்த மூன்றாண்டுகளில் மேற்கொண்டதில், மழை நீர் முறையாகத் தேக்கப்பட்டு, ஏரிகள் குளங்களின் ஆழம் மற்றும் கரைகள் மேம்படுத்தப்பட்டன. 1998-99-ஆம் ஆண்டில் ஒரு ஊராட்சிக்கு ரூ.1 இலட்சம் செலவில்



நீர் ஆதாரப் பணிகள் என்ற மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பின் அடிப்படையில், இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

மேலும் மரங்கள் நடுதல், நிலை நீர் மேம்பாட்டுப் பணிகளால் நிலவளம் பெருகுவதுடன் நீர் வழிந்தோடாமல் தடுக்கப்பட்டுச் செல்வதால் பூமிக்கடியில் நீர் இறங்கி நீர்மட்டம் உயர்வதுடன் சுற்றியுள்ள பாசனக் கிணறுகளில் நீர்மட்டம் கணிசமாக உயர்ந்துள்ளது.


**ஊரகப் பகுதிகளில், ஏழைகளுக்கு இலவச தொகுப்பு வீடுகள்**

ஊரகப் பகுதிகளில் உள்ள தாழ்த்தப்பட்ட வகுப்பினர்/மலைச் சாதியினர், கொத்தடிமையிலிருந்து மீட்கப்பட்டவர் மற்றும் இதர வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள மற்ற பிரிவினருக்கும் இலவசமாக வீடு கட்டித் தருவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இதில், தமிழ்நாடு அரசு மற்ற மாநிலங்களைக் காட்டிலும் முன்னோடியாக, தீ பிடிக்காத நீண்ட நாள் உழைக்கக் கூடிய "சிமெண்ட் கான்க்ரீட்டுடன்'' கூடிய கூரைத்தளம் அமைத்த வீடுகளை வழங்க வேண்டும் என்ற கருத்தோடு மத்திய அரசு ஒரு வீட்டிற்கு நிர்ணயித்துள்ள அலகுத் தொகையுடன் கூடுதலாக ரூ.12,000 வழங்குகிறது. எனவே, சாதாரணப் பகுதிகளில் ஒரு வீட்டின் மதிப்பு ரூ.32,000 எனவும், மலைப்பிரதேசம் மற்றும் களிமண் அடங்கிய பகுதிகளில் ரூ.34,000 எனவும் நமது அரசு நிர்ணயித்துள்ளது.

இதில் ஒவ்வொரு வீட்டிற்கும் ஒரு சுகாதாரக் கழிப்பறையும், ஒரு புகையில்லா அடுப்பும் சேர்த்து வழங்கப்படுகின்றன.

1996-ஆம் ஆண்டு, இந்த அரசு பொறுப்பேற்றபோது அதற்கு முன்பு நிலுவையாக வைக்கப்பட்டு விடப்பட்டிருந்த 83,487 வீடுகளுடன் கடந்த மூன்றாண்டுகளில் 1,69,566 வீடுகள் இத்திட்டத்தில் எடுக்கப்பட்டன. இதில் 31.5.99 வரை 2,46,941 வீடுகள் முடிக்கப்பட்டுள்ளன. இவை தவிர, அடிப்படைத் தேவைத் திட்டத்தில் 1998-99-ல் 4,688 வீடுகள் தனியாக கட்டப்பட்டு வருகின்றன.

13.5.96-ல் நிலுவையில் இருந்த பணிகள் 83,487. 1996-97ஆம் ஆண்டு 71,615 வீடுகள் ரூ.193.320 கோடியிலும், 1997-98ஆம் ஆண்டு 56,621 வீடுகள் 151.20 கோடியிலும், 1998-99ஆம் ஆண்டு 41,330 வீடுகள் 132.100 கோடியிலும், ஆகமொத்தம் 2,53,053 வீடுகள் 476.620 கோடியில் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.



13.5.96-ல் நிலுவையில் இருந்த பணிகள் 83,487. 1996-97ஆம் ஆண்டு 71,615 வீடுகள் ரூ.193.320 கோடியிலும், 1997-98ஆம் ஆண்டு 56,621 வீடுகள் 151.20 கோடியிலும், 1998-99ஆம் ஆண்டு 41,330 வீடுகள் 132.100 கோடியிலும், ஆகமொத்தம் 2,53,053 வீடுகள் 476.620 கோடியில் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

அடிப்படைத் தேவைத் திட்டத்தின்கீழ், 4,688 வீடுகள் 15 கோடி செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

ஒவ்வொரு வீடும் 201 சதுர அடிக்குக் குறையாமல் கட்டப்படுகிறது.

சிறப்பு அம்சமாக இந்த வீடுகளில் வெளியில் சுமார் 6' நீளமுள்ள திண்ணையும், சமையலறையைப் பிரிக்கும் வகையில் ஒரு குறுக்குச் சுவர் அமைத்து, அதில் இருபக்கங்களிலும் சிறிய அலமாரிகள் பொருத்தப்படுகின்றன.

"வீட்டுக்கொரு விளக்கு"-த் திட்டத்தில், இலவசமாக ஒரு மின்விளக்கு பொருத்தப்பட்டு மின் இணைப்பு வழங்கப்படுகிறது.

இந்த வீடுகளுக்கு அடிப்படைத் தேவையான சாலை வசதி, குடிநீர் வசதி இவையும் மற்ற திட்டங்கள் மூலம் செய்து கொடுக்கப்படுகின்றன.

1999-2000மாவது ஆண்டில் 46,768 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

இந்த நிதியாண்டில், கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி ஒன்றியம், ஒருங்கிணைந்த குடியிருப்புத் திட்டத்தில், மாதிரி திட்டம் நிறைவேற்றப்பட உள்ளது. இதனால், இந்த ஒன்றியத்தில் அனைத்து கிராமங்களிலும் வீடுகள் கட்டப்படுவதுடன் சுற்றுச்சூழல் மேம்பாட்டிலும்

கவனம் செலுத்தப்படும். மேலும் வறுமைக்கோட்டுக்கு மேலுள்ள குடும்பங்களுக்கு வீடுகள் கட்டிக்கொள்ள ஒரு வீட்டிற்கு ரூ.10,000 மானியத்துடன் கடன் வழங்க ரூ.5 கோடி செலவிடப்படும். இதனால், 5,000 குடும்பங்கள் பயன்பெறும் இத்திட்டங்களில், மத்திய-மாநில அரசு. செலவை 75 : 25 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்கிறது.

## கிராம சபையும் மக்களாட்சியும்

மக்களாட்சி தத்துவத்தின் அடிப்படையே, மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற அமைப்புடன் மக்கள் பங்கு கொண்டு செயல்பட வேண்டும் என்பதே ஆகும். நம் நாட்டின் வரலாற்றைப் பின்னோக்கிப் பார்ப்போமேயானால், ஆங்கிலேயர்களின் ஆக்கிரமிப்புகளுக்கு முன், பல பகுதிகளில் மன்னராட்சி முறை இருந்து வந்தது. அனேகமாக எல்லாப் பகுதிகளிலுமே, மாறி, மாறி பல மன்னர்கள் ஆண்டு வந்தனர்.

அன்றைக்கு, தொலைத் தொடர்பு வசதிகள், சாலை வசதிகள், போக்குவரத்து வசதிகள் இல்லாத காரணத்தால், அனேகமாக அனைத்து அடிப்படைத் தேவைகளையும் கிராமங்களில் வாழும் மக்கள் தாங்களே ஒருங்கிணைந்து பூர்த்தி செய்து கொள்ள வேண்டிய கட்டாயத்தில் இருந்தனர். ஆதிக்க அரசுகளின் மையம், வெகு தொலைவில் இருந்தாலும் மக்களின் அடிப்படைத் தேவைகளை அவர்களிடம் முறையிட்டுப் பெறுவது கடினமாக இருந்தது.

## தமிழ்நாட்டில் கிராம சபை

தமிழ்நாட்டில், பண்டைக் காலத்திலேயே சுயசார்பு உள்ளாட்சி அமைப்புகள் கிராமங்களில் இருந்தன என்பதற்கு வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள உத்திரமேரூரில் காணப்படும் தொன்மையான கல்வெட்டுகள் மூலமாக "சபா" என்ற அமைப்பு இருந்துள்ளது. "சபா"வின் கீழ், பல சமுதாய குழுக்கள் "வாரியங்கள்" ஏற்படுத்தப்பட்டு ஒவ்வொரு வாரியமும் ஒரு பணியை ஆற்றி வந்துள்ளது. இம்முறை பத்தாம் நூற்றாண்டில் சோழர்களின் ஆட்சிக் காலத்தில் நடைமுறையில் இருந்துள்ளது. இவ்வாறு நன்கு பணியாற்றி வந்த உள்ளாட்சி அமைப்பு முறைகள், ஆங்கிலேயர்களின் ஆட்சிக் காலத்தில் சீரழிக்கப்பட்டது. உள்ளாட்சி அமைப்பு முறை நன்கு செயல்படுமானால், எல்லா கிராமங்களிலும், சமுதாயத் தலைவர்கள் தோன்றி, மக்களை விழிப்புறச் செய்துவிடுவர் என்ற ஐயத்தின் காரணமாக, திட்டமிட்டு உள்ளாட்சி அமைப்பு முறையை அழிக்கத் துவங்கினர்.

சுதந்திரத்திற்குப் பின்னர், உள்ளாட்சி அமைப்புகளின் தன்னாட்சி கோட்பாடு முக்கியத்துவம் அடைந்தது. 1952-ஆம் ஆண்டில், சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் நடைமுறைபடுத்தப்பட்டதன் மூலம் உள்ளாட்சி அமைப்புகளின் தன்னாட்சி கோட்பாட்டுக்கு மேலும் வலுவூட்டப்பட்டது. மாவட்ட அளவில் ஜில்லா போர்டும், தாலுகா அளவில் தாலுகா போர்டும் கிராம அளவில் ஊராட்சி மன்றமும் ஏற்படுத்தப்பட்டு, செயலாற்றி வந்தன. பின்னர், ஜில்லா போர்டுகள் கலைக்கப்பட்டு, மாவட்ட வளர்ச்சி மன்றம் என மாற்றப்பட்டது. அனைத்து சமுதாய வளர்ச்சி வட்டாரங்களும் ஊராட்சி ஒன்றியங்களாக, வலுவான அமைப்பாக மாற்றப்பட்டது. கிராம அளவில் ஊராட்சி மன்றம், தொய்வின்றி, அடிப்படைப் பணிகளையும், குடிமராமத்துப் பணிகளையும் ஆற்றி வந்தது.

இருந்த போதிலும், இவ்வுள்ளாட்சி அமைப்புகளில் தொடர்ந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் பதவிகளில் இல்லாத காரணத்தாலும், உள்ளாட்சி அமைப்புகளின்

சொந்த வருவாய் மிகவும் குறைந்து, முழுவதுமே அரசின் மானியங்களையே நம்பி பணியாற்ற ஆரம்பித்த காரணத்தாலும், நிறைவேற்றப்படும் திட்டங்களில் மக்களின் ஈடுபாடு, பங்கேற்பு குறைந்தது அல்லது இல்லாமல் போனது என்றே கூறலாம்.

### கிராம சபை - சட்ட பூர்வமான அமைப்பு

1992-ஆம் ஆண்டில் அரசியலமைப்பு 73ஆவது சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டது. இச்சட்டத் திருத்தத்தில் மிக முக்கியமான அம்சம், அனைத்து கிராம ஊராட்சிகளிலும் 'கிராம சபை' என்ற அமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்பதாகும். 'கிராம சபை' ஏற்படுத்தியதின் மூலம் உள்ளாட்சி அமைப்புகளின் செயல்களை வெளிப்படையாக அனைத்து மக்களும் அறிந்து கொள்வதற்கு வசதியாக உள்ளது. கிராம சபை மக்களாட்சியின் அடித்தளமாகும். அது எவ்வாறு வலுவானதோ அந்த அளவே மக்களாட்சியும் வலுவுள்ளதாக அமையும். கிராம சபையின் குரலே கிராமங்களின் குரல். எனவே, கண்ணியம், கட்டுப்பாட்டோடு சமூக விவாதத்தின் மூலம் துடிப்புள்ள உயிரோட்டமான கிராமசபை உருவாகி மக்களாட்சி மேன்மைக்கு வழிவகுக்கும்.

மேலும், உள்ளாட்சி அமைப்புகள் பல்வேறு துறைகளின் நிர்வாகத்தினை, கண்காணித்து அதில் உள்ள குறைபாடுகளை அவ்வப்போது ஆங்காங்கே களைவது என்பது அரசு இயந்திரத்தால் மட்டும் செய்துவிட முடியாது. எனவே, விழிப்புணர்வு பெற்ற சமுதாயம், கிராம சபை மூலம் தவறுகளைக் கடிந்து, அவ்வப்போது களைவதே நடைமுறைக்கு ஏற்ற ஒன்று. அதுவே நேர்மையான, வெளிப்படையான, பொறுப்பான நிர்வாக அமைப்பு நாட்டில் உருவாக வழிவகுக்கும்.

1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 3-ன்படி ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும், அக்கிராமத்தில் உள்ள வாக்காளர்களை உறுப்பினர்களாகக் கொண்டு கிராம சபை அமைக்கப்பட்டுள்ளது. இச்சட்டத்தில் முதலில், ஒவ்வொரு கிராம சபைக் கூட்டத்திலும் மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் கலந்து கொள்ள வேண்டுமென இருந்தது. பல பெரிய கிராம ஊராட்சிகளில் இது நடைமுறைக்கு சாத்திய மில்லாமல் இருப்பதைஉணர்ந்த இந்த அரசு, பொறுப்பேற்றவுடன், உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேர்தல்கள் நடத்தப்பட்டதோடு மட்டுமல்லாமல், கிராம சபை ஒரு உயிரோட்டமாக செயல்படக்கூடிய அமைப்பாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்தில், கிராம சபைக் கூட்டங்களில், பத்தில் ஒரு பங்கு உறுப்பினர்கள் கலந்து கொண்டால் போதுமென சட்டத் திருத்தம் செய்யப்பட்டது.

கிராம சபைக் கூட்டங்கள் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை கூடினால் போதுமென இருந்தபொழுதும், ஒவ்வொரு கிராம ஊராட்சியும், ஒரு ஆண்டில் நான்கு முறையாவது குறிப்பாக ஜனவரி 26, மே 1, ஆகஸ்டு 15 மற்றும் அக்டோபர் 2 ஆகிய தேதிகளில் நடத்தப்பட வேண்டும் என முதலமைச்சர் கலைஞர் அறிவுரை வழங்கியுள்ளார். இந்த நாட்களில் தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் கிராம சபை சிறப்பாக நடைபெற்று, அனைத்து மக்களும் கலந்து கொண்டு, மேலும் பணிகள் சிறப்பாக நடைபெற பல முயற்சிகள் அரசு எடுத்து வருகின்றது.

### கிராம சபையின் அவசியம்

கிராம சபை மூலம், கிராமத்தில் உள்ள ஏழைகள், தாழ்த்தப்பட்டவர்கள், பெண்கள் என அனைவரும் நேரடியாக அடித்தள நிர்வாகத்தை நடத்த வாய்ப்பு ஏற்படும். இதனால், உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை



மக்கள் நேரடியாக நுகர முடியும். உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாடு மற்றும் அரசின் பல்வேறு திட்டங்களின் செயல்பாட்டைக் கண்காணிக்கும் ஒரு விழிப்பு அமைப்பாக கிராம சபை இயங்கி, ஒரு வெளிப்படையான நிர்வாகம் ஏற்படும்.

மேலும், திட்டங்களின் செயல்பாட்டில் ஏற்படும் குறைகள் அவ்வப்போது களையப்பட்டு திட்டத்தின் முழுப்பயனும் மக்களுக்குச் சென்றடைய வாய்ப்பு ஏற்படும். அனைத்து நிலைகளிலும் உள்ள மக்களின் அனுபவங்கள் தேவைகளை ஒருங்கிணைத்து விவாதித்து, திட்டமிட்டுச் செயல்படுவதால் கிராம ஊராட்சிகளுக்கு ஒரு வழிகாட்டும் அமைப்பாக இருப்பதுடன், கண்காணிக்கும் அமைப்பாகவும் செயல்படுகிறது. இதனால் மக்களுக்குத் தேவையான,பொறுப்பான நிர்வாகம் ஏற்பட வாய்ப்புகள் உருவாகும். கிராம சபை மூலம் மக்களாட்சியின் மாண்பை மக்கள் நேரடியாக நுகரவும், கிராம சபையிலிருந்து நாடாளுமன்றம் வரை, பரவலாக, பரதரப்பட்ட மக்களை இணைத்து அவர்களுடைய முன்னேற்றத்திற்காக அவர்களையே நேரடியாக திட்ட செயலாக்கத்தில் பங்கு கொள்ளச் செய்யும் வாய்ப்பு ஏற்படும்.

### கிராம சபையை நடத்தும் முறை

ஊராட்சியின் தலைவர் கிராம சபையைக் கூட்ட வேண்டும். கிராம ஊராட்சித் தலைவரே கிராம சபையின் கூட்டத்திற்குத் தலைமை தாங்கி நடத்த வேண்டும். ஊராட்சித் தலைவர் வராதபோது துணைத் தலைவரும், தலைவர் மற்றும் துணைத்தலைவர் ஆகிய இருவருமே வராத போது கூட்டத்திற்கு வந்துள்ள உறுப்பினர்களாலே தேர்வு செய்யப்படுகின்ற உறுப்பினர் ஒருவர் தலைமை வகித்தல் வேண்டும்.

கிராம ஊராட்சித் தலைவர் கிராம சபையைக் கூட்டத் தவறினால்,ஆய்வாளர் என்ற முறையில் மாவட்ட ஆட்சியர் கிராம சபையைக் கூட்ட வேண்டும். மாவட்ட ஆட்சியரால் கூட்டப்படும் கூட்டத்திற்கு வட்டார வளர்ச்சி அலுவலர் தகுதிக்குக் குறையாத ஓர் அலுவலரைப் பார்வையாளராக மாவட்ட ஆட்சியர் நியமிப்பார். அவர் கிராம சபைக்

கூட்டம் முடிந்த 72 மணி நேரத்திற்குள், மாவட்ட ஆட்சியருக்கு அறிக்கை அனுப்பட வேண்டும்.

**கிராம சபையின் கடமைகள்**

கிராம ஊராட்சியின் ஆண்டு வளர்ச்சித் திட்டத்திற்கும், வருடாந்திர வரவு செலவுத் திட்டத்திற்கும் ஒப்புதல் அளித்தல்.

தனிநபர் பயன்பெறும் அரசு திட்டங்களில் கிராம ஊராட்சியரால் தேர்வு செய்யப்பட்ட பயனாளிகள் பட்டியல் மற்றும் சமுதாயச் சொத்துக்கள் உருவாக்க,தேர்வு செய்யப்பட்ட ஒப்புதல் செய்தல்.

கிராம ஊராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட வளர்ச்சித் திட்டங்களின் செயல்பாடு மற்றும் முன்னேற்றத்தினை ஆய்வு செய்து ஆலோசனை வழங்குதல்.

உள்ளாட்சி அமைப்புகள் மூலம் செயல்படுத்தப்பட்டு முடிவுற்ற பணிகள் மற்றும் நடைபெற்று வரும் பணிகள், பிற துறைகள், நிறுவனங்கள் மூலம் நிறைவேற்றப்படும் திட்டங்களைக் கண்காணித்து ஆய்வு செய்தல்.

சமூக நலப் பணிகள் மற்றும் வளர்ச்சித் திட்டப் பணிகளைச் சிறப்பாகச் செயல்படுத்த, பொதுமக்களை ஒன்று திரட்டி,உழைப்பு, நிதி, பொருளுதவி போன்றவற்றை வழங்கி, திட்டத்தைத் தாங்களே செயல்படுத்த ஊக்குவித்தல்.

சாதி, மத நல்லிணக்கத்தையும், சமூக ஒற்றுமையையும் கிராம ஊராட்சியின் பல்வேறு பிரிவு மக்களிடையே வளர்த்தல்.

கிராம ஊராட்சியின் ஆண்டு வரவு செலவு கணக்குகளையும், தணிக்கை அறிக்கையையும் பரிசீலனை செய்து சமூகத் தணிக்கை முறையை நடைமுறைப்படுத்துதல்.

**கிராம சபையைக் கூட்டும் முறை**

கிராம சபைக் கூட்டம், கிராம ஊராட்சியின் எல்லைக்குட்பட்ட ஏதாவது ஒரு பொது இடத்தில் நடத்தப்பட வேண்டும்.

கிராம சபைக் கூட்டத்தை நடத்த உரிய அறிவிப்பை ஊராட்சித் தலைவர் வெளியிடுவார். கூட்டம் நடைபெற உத்தேசித்துள்ள தேதிக்கு குறைந்தபட்சம் 7 நாட்களுக்கு முன்னரே அறிவிப்பு செய்யப்பட வேண்டும்.


கூட்ட அறிவிப்பினை கிராம ஊராட்சி அலுவலகம், முக்கிய பொது இடங்களான பள்ளிகள், சத்துணவு மையம், தொலைக்காட்சி அறை, கோவில், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி என பொது மக்கள் கூடும் அனைத்து இடங்களிலும் ஒட்ட வேண்டும்.

கூட்டம் நடைபெறும் இடம், நாள், நேரம் மற்றும் விவாதிக்கப்படும் பொருட்கள் குறித்து ஊராட்சியில் உள்ள எல்லா குடியிருப்புகளிலும் விளம்பரப் படுத்த வேண்டும்.

இது குறித்த பிரசுரங்களையும் எல்லா வீடுகளுக்கும் வழங்கலாம்.

மாவட்ட நிர்வாகமும், செய்திகள் வெளியிடலாம். விழிப்புணர்வு முகாம்கள் நடத்தலாம். திரைப்பட சிலைடுகள், பிரசுரங்கள் மூலம் பொதுமக்களை கிராம சபையில் கலந்து கொள்ள வேண்டுகோள் விடுக்கலாம். தன்னார்வத் தொண்டு நிறுவனங்களையும் மக்களைத் திரட்டும் பணியில் ஈடுபடுத்தலாம்.

கூட்ட அறிவிப்பையும், கூட்ட விவாதப் பொருட்களையும், கூட்டம் நடைபெற உள்ள நாளுக்கு ஏழு நாட்கள் முன்னரே ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சியருக்கு அனுப்ப வேண்டும்.



சென்ற கிராம சபைக் கூட்டங்களில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து விவாதித்தல்

உள்ளாட்சி அமைப்புகள், அரசு துறைகளின் செயல்பாடு மற்றும் அவற்றின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களில் உள்ள குறை, நிறை பற்றி விவாதித்தல்.

கிராம சபைக் கூட்டத்திற்கு, மொத்த வாக்காளர்களில் குறைந்தபட்சம் பத்தில் ஒரு பங்காவது வருகை தர வேண்டும். இதற்குக் குறைவான எண்ணிக்கையில் வருகை இருந்தால் மறு தேதிக்கு கிராமசபைக் கூட்டம் ஒத்தி வைக்கப்பட வேண்டும்.

முன்னேற்பாடு நடவடிக்கையாக ஊராட்சித் தலைவர்களுக்கும், ஊக்குவிப்பாளர்களுக்கும் உரிய பயிற்சி நடத்துவது அவசியம். பிறதுறை சம்பந்தப்பட்ட விவரங்களை, கிராம வாரியாகத் திரட்டி,ஊக்குவிப்பாளர் மூலம் கிராம ஊராட்சிக்குத் தெரியப்படுத்தலாம்.

## கிராம சபையின் கூட்டப் பொருட்கள்

கூட்டப் பொருட்கள் ஊராட்சியின் இசைவோடு ஊராட்சித் தலைவரால் தயாரிக்கப்பட வேண்டும்.

கிராம சபையின் ஒவ்வொரு கூட்டத்திலும் கீழ்க்கண்ட பொதுவான விவாதப் பொருட்களை இடம் பெறச் செய்யலாம்.

கிராம வளர்ச்சியில் பொதுமக்களே செய்து கொள்ளக்கூடிய பணிகள் பற்றியும் "நமக்கு நாமே திட்ட'' அடிப்படையில் அரசின் உதவியுடன் செயல்படுத்த வேண்டிய பணிகள் பற்றியும் விவாதித்தல்

இவைதவிர, ஒவ்வொரு கூட்டத்திலும் கீழ்க்கண்ட குறிப்பிட்ட பொருட்கள் பற்றி தவறாது விவாதிக்க வேண்டும்.

## ஜனவரி 26

ஜனவரி 26ஆம் தேதி நடக்கும் கிராம சபைக் கூட்டத்தில் ஊராட்சியின் வளர்ச்சிப் பணி தொடர்பாக அடுத்து வரும் நிதி ஆண்டிற்கான திட்ட அறிக்கையையும் உத்தேச வரவு செலவு அறிக்கையையும் கிராம சபைக் கூட்டத்தில் வைத்து ஒப்புதல் பெறுதல் வேண்டும்.

## மே 1

அரசின் பல்வேறு திட்டங்களில் பயன்பெற தேர்வு செய்யப்பட்ட பயனாளிகள் பட்டியல் மற்றும்

ஊராட்சியில் ஒப்புதல் செய்யப்பட்ட திட்டப் பணிகள் பட்டியல் ஆகியவற்றை விவாதித்து ஒப்புதல் செய்தல் வேண்டும்.

**ஆகஸ்டு 15**

வறுமை ஒழிப்புத் திட்டம் உட்பட அனைத்துத் துறைகளிலும் நிறைவேற்றப்படும் திட்டங்கள், பயன்பெறும் தன்மை பற்றி எடுத்துரைக்க வேண்டும்.

**அக்டோபர் 2**

ஊராட்சிகள் மற்றும் அரசின் இதர துறைகள் மேற்கொள்ளும் வளர்ச்சிப் பணிகள் குறித்து இடைநிலை ஆய்வு மேற்கொள்ள வேண்டும்.

ஊராட்சியின் முந்தைய ஆண்டிற்கான ஆண்டறிக்கை மற்றும் வரவு செலவு கணக்கின் மீதான தணிக்கைக் குறிப்புகளை சமர்ப்பிக்க வேண்டும்.

## கிராம சபைக் கூட்டத்தை நடத்தும் முறை

திட்டங்களை விளக்குவதற்கு ஏதுவாக, கரும்பலகை போன்ற பொருட்களைப் பயன்படுத்தலாம்.

கூட்டத் தலைவர் ஒவ்வொரு பொருளாக எடுத்துரைக்க, அதன் மீது விவாதித்து உரிய தீர்மானம் நிறைவேற்றி, பதிய வேண்டும்.

ஊராட்சித் தலைவர் மற்றும் ஊராட்சி நிர்வாகம் மீதான குறைகள், தவறுகளைப் பொதுமக்கள் சுட்டிக்காட்டினால், உரிய பதிலை, சம்பந்தப்பட்ட நபர் ஆதாரபூர்வமாகப் பொதுமக்களுக்கு விளக்க வேண்டும்.

விவாதம் சுமுகமாகவும், கண்ணியத்துடனும், கட்டுப்பாட்டுடனும் நடத்த உரிய நடவடிக்கைகளை எடுப்பது ஊராட்சித் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பொறுப்பு.

ஒவ்வொரு கிராமசபைக் கூட்டத்திலும் ஊராட்சியின் வரவு செலவு கணக்குகள், செலவுச் சீட்டுகள், ரசீது புத்தகங்கள், பதிவேடுகள் போன்றவை பாதுகாப்பான இடத்தில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டு, சமூகத் தணிக்கை முறையைச் செயல்படுத்த வேண்டும்.

கூட்டத்திற்கு வருகை தரும் உறுப்பினர்களின் கையொப்பங்களைக் கூட்ட நடவடிக்கைப் பதிவேட்டில் பெற வேண்டும். அதே பதிவேட்டில், பொருட்கள் வாரியாக இறுதியாக எடுக்கப்படும் முடிவுகளை, தீர்மான வடிவில் பதிவு செய்து ஊராட்சித் தலைவர் கையொப்பம் இட வேண்டும்.

கிராம சபைக் கூட்டம் நடந்த மூன்று நாட்களுக்குள் மேற்படி கூட்ட நடவடிக்கைகளை ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சியருக்கு அனுப்ப வேண்டும்.


## சிறு-குறு விவசாயிகளுக்கு இலவச பாசனக் கிணறுகள்

தேசிய வேலைவாய்ப்புத் திட்டம் மற்றும் ஊரக நிலமற்றோர் வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் துணைத் திட்டமாக 1988-89ஆம் ஆண்டு முதல், பத்து இலட்சம் கிணறுகள் திட்டம் செயல்படுத்தப்பட்டது. துவக்கத்தில், ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப் பட்டு வந்த இந்தத் திட்டம் பின்னர் 1.1.96 முதல் தனித்திட்டமாகச் செயல்படுத்தப்படுகிறது.

சிறு மற்றும் குறு ஏழை விவசாயிகள், கொத்தடிமையிலிருந்து மீட்கப்பட்டவர்கள் அவர்களது நிலங்களில் பாசனக் கிணறு வெட்ட இலவசமாக நிதியுதவி செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். தாழ்த்தப்பட்டோர்/பழங்குடியினர்

குடும்பங்களுக்கு இத்திட்டத்தில் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. இதற்கான செலவினத்தை மத்திய அரசும் மாநில அரசும் 80:20 என்ற விகிதத்தில் ஏற்றுக்கொண்டுள்ளன.

13.5.96 அன்று, இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்டபோது அதற்கு முந்தைய ஆண்டுகளில் எடுத்துக்கொண்டு, முடிக்கப்படாமல் நிலுவையில் இருந்த 5,839 கிணறு பணிகளையும் மேற்கொண்டு முடிக்கப்பட்டதுடன், கடந்த மூன்றாண்டுகளில், 14,132 ஜீவன்தாரா கிணறுகள் சிறு மற்றும் குறுவிவசாயிகளுக்கு வழங்கப்பட்டதில், மே 99 கூடிய 11,280 பணிகள் இதுவரை



முடிக்கப்பட்டுவிட்டன.

13.5.96-ல் நிலுவையில் இருந்த பணிகள் 5,839.

1996-97ஆம் ஆண்டு 5,235 பணிகள் ரூ.23.540 கோடியிலும், 1997-98ஆம் ஆண்டு 4,849 பணிகள் ரூ.21.590 கோடியிலும், 1998-99ஆம் ஆண்டு 4,048 பணிகள் ரூ.21.280 கோடியிலும் மேற்கொள்ளப் பட்டன.

மேற்கண்ட திட்டத்தில் கட்டி முடிக்கப்பட்ட கிணறுகள் மூலம், மழையை மட்டுமே எதிர்பார்த்திருந்து காத்திருந்த விவசாயிகள், தங்கள் நிலங்களில், நெல், நிலக்கடலை, கம்பு, சோளம், காய்கறி வகைகள் போன்றவற்றைப் பயிரிட்டு நல்ல முன்னேற்றமடைந்துள்ளனர்.

இந்த விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பு முன்னுரிமை அடிப்படையில் ஆண்டுதோறும் தனி ஒதுக்கீடு செய்து வழங்கப்படுகிறது. அதற்குத் தேவையான மின் மோட்டார்கள் மானியத்துடன் கூடிய கடன் வசதி திட்டத்தின் மூலம் தனியாக வழங்கப்படுகின்றன.

**ஊரகப் பகுதிகளில் வீடுகளுக்கு குடிநீர்க் குழாய் இணைப்புகள்**

ஊராட்சிப் பகுதிகளில் குடிநீர் வசதி செய்து கொடுப்பது, கிராம ஊராட்சியின் கடமைகளில் ஒன்றாகும். இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவில், தமிழக அரசின் புதிய கொள்கை முடிவின்படி, தமிழ்நாட்டிலுள்ள அனைத்து ஊரகக் குடியிருப்புகளுக்கும், நகர்ப்புறத்தில் உள்ளது போல் வீட்டுக் குழாய் இணைப்பு வழங்குவதற்கும், தமிழ் நாட்டிலுள்ள 66,631 ஊரகக் குடியிருப்புகளில், நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் அளவுக்கு மேல் குடிநீர் வழங்க தற்போது நீர் ஆதாரம் உள்ள அனைத்து ஊரகக் குடியிருப்புகளுக்கும் குழாய் மூலம் வீடுகளுக்கு இணைப்பு வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

அனைத்து ஊரகக் குடியிருப்புகளுக்கும் தேவைப்படும் வீட்டுக் குழாய் இணைப்புகள் குறித்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் கணக்கெடுக்கும்.


ஊராட்சிகள் குடிநீர் இணைப்புக் கொடுப்பதற்கு, மாதந்தோறும் ஒரு இணைப்பிற்கு ரூ.30 செலுத்த வேண்டும்.

ஒவ்வொரு வீட்டுக் குழாய் இணைப்பிற்கும் இணைப்புக் கட்டணமாக ரூ.1,000 வைப்புத் தொகையாக வசூலிக்கப்படும்.

ஏற்கெனவே உள்ள வீட்டுக் குழாய் இணைப்புகளுக்கு மேல், கூடுதல் இணைப்பு வழங்க வேண்டுமென்றால், ஊராட்சிகள் அதனை ஆராய்ந்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திலும் முன் அனுமதி பெற வேண்டும்.

கூடுதல் நீராதாரம் மற்றும் நீராதாரத் திட்டங்களை மேம்படுத்தி, ஊராட்சிகள் புதிய வீட்டுக் குழாய் இணைப்புகள் கொடுக்கலாம்.

அனுமதிக்கப்பட்ட அளவுக்கு மேலாக, பொது குழாய்களிலிருந்து வீட்டுக் குழாய் இணைப்பு கொடுக்கப்பட்டு, அது பொது குடிநீர் விநியோகத்திற்கு இடையூறாக அமைந்தால் அது போன்ற இணைப்புகளைச் சட்ட விரோதமானது என அறிவித்து அவற்றை ஊராட்சிகள் துண்டிக்கும்.




**"நமக்கு நாமே திட்டம்"- வளர்ச்சிப் பணியில் மக்கள் சக்தி**


இத்திட்டம், மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் 1997-98ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. பொதுமக்களின் நலனுக்கு வேண்டிய அனைத்திற்கும் அரசாங்கத்தையே எதிர்பார்த்

திருக்காமல் பொதுமக்களின் பங்குடன் கிராமத்திற்குத் தேவையான வசதிகளை, இத்திட்டத்தின் மூலம் பூர்த்தி செய்து கொள்ளலாம். ஊர் மக்கள் ஒன்று கூடி, மேற்படி கிராமத்திற்குத் தேவையான இன்றியமையாத பணிகளை முன்னுரிமைப்படுத்தி அதற்கான மதிப்பீட்டில் 25 விழுக்காடு தொகையினை விடுவிக்கும். மக்களின் பங்கு, நிதி உதவியாகவோ, பொருளாகவோ அல்லது உழைப்பாகவோ இருக்கலாம். ஒரு குறிப்பிட்ட பணியைத்தான் எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற நிபந்தனைகள் ஏதும் இத்திட்டத்தில் இல்லை.

ஒவ்வொரு வேலையிலும் மக்கள் பங்கு இருப்பதற்குக் காரணமான பணிகள் தரமானதாக இருப்பதற்கு வழிவகுக்கிறது. மேலும், கிராம சொத்தினைப் பாதுகாத்துப் பராமரிக்கும் மனப்பாங்கும் ஏற்படுகிறது. ஏற்கெனவே, கிராமங்களில் குடிமராமத்துத் திட்டம் விவசாயிகளின் பங்குத் தொகையுடன் வாய்க்கால்கள் சீரமைப்புப் பணிகள் செயல்பட்டன. அதே போன்று இத்திட்டமும் பொதுமக்களின் தேவைகள் அவர்களுடைய பங்குடன் செயல்படுத்தப்பட்டு பூர்த்தி செய்யப்படுகின்றன.

### நமக்கு நாமே திட்டத்தின் நோக்கம்

இத்திட்டத்தின் மூலம், சமுதாயத்திற்குத் தேவையான அனைத்துப் பணிகளும் கிராம சபையில் முன்னுரிமை அடிப்படையில் எடுக்கப்பட்டவாறு செயல்படுத்தவும், சிறு பாலங்கள், சாலைகள், பள்ளிக் கட்டடங்கள் முதல் பெரிய பாலங்கள் வரை எடுத்துச் செய்யலாம். இவற்றில், பள்ளியில் சமுதாய கூட்டமைப்பு, கல்வி முகாம்கள், சுகாதார, சுற்றுச்சூழல் விழிப்புணர்ச்சி முகாம்கள் போன்ற சொத்துக்கள் ஏற்படாத இனங்களும் இடம் பெறும். ஆரம்பத்தில் இத்திட்டம் கிராம ஊராட்சிப் பகுதிகளில் செயல்படுத்தப் பட்டது. 1999-2000ஆம் ஆண்டு முதல் நகரப்பகுதிகளுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. மாவட்டங்களில், மாவட்ட ஆட்சித் தலைவரும், சென்னை மாநகராட்சிக்கு மாநகர ஆணையாளரும் இத்திட்டம் செயல்பட பொறுப்பாக்கப் பட்டுள்ளார்கள்.



### நடைமுறைப்படுத்துதல்

இத்திட்டத்தின் செயல்பாடுகள் கீழ்க்கண்டவாறு செயல்படுத்தப்படும்.

அரசு சாரா தொண்டு நிறுவனங்கள், தொண்டுள்ளம் கொண்டவர்கள் நமக்கு நாமே திட்ட முகாம் நடத்தி நமக்கு நாமே திட்டம் குறித்து கிராம சமுதாய மக்களிடையே ஓர் உணர்வினை ஏற்படுத்துதல்

கிராம சபை மூலம் பொதுமக்களுக்குத் தேவையான பணிகள் குறித்து தேர்வு செய்தல், முன்னுரிமை படுத்துதல், திட்டமிடுதல், நன்கொடை பெறுதல் மற்றும் மாவட்ட நிர்வாகத்திற்குத் திட்டத்தினை சமர்ப்பித்தல்.

மாவட்ட நிர்வாகம், திட்டத்தினை பரிசீலித்து அனுமதியளித்தல்.

திட்டத்தினை செயல்படுத்துதல், கண்காணித்தல் திட்டத்தினை இதர பகுதிகளில் செயல்படுத்த ஒருங்கிணைத்தல்.

**நிதி**

பொதுமக்கள் மொத்த மதிப்பீட்டில் 25 விழுக்காடு தொகையினைப் பணியாகவோ பொருளாகவோ அல்லது உழைப்பாகவோ வழங்கலாம். மாவட்ட நிர்வாகம் இதற்கென ஒரு கணக்கினைப் பராமரித்து நன்கொடையினைப் பெற்று, பின்பு தேவைக்கேற்ப விடுவிக்கப்படும்.

1997-98ஆம் ஆண்டில் ரூ.10 கோடியும் 1998-99ஆம் ஆண்டில் ரூ.14 கோடியும் அரசு சிறப்பு நிதியாக விடுவித்துள்ளது. இவையெனில் ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம், வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் ஆகியவற்றுடன் நமக்கு நாமே திட்டம் பொதுமக்கள் பங்குத் தொகையினை ஒருங்கிணைத்து, தேவையான பணிகள் எடுத்துச் செய்யவும் ஊராட்சிகள் ஊக்கப்படுத்தப்பட்டு வருகின்றன.

**சாதனைகள்**

1997-98ஆம் ஆண்டில், ரூ.6.90 கோடி பொதுமக்கள் பங்குத் தொகையாக மாற்றப்பட்டன. அரசு மானியம் மற்றும் இதர திட்டங்களுடன் ஒருங்கிணைப்பு வாயிலாக ரூ.17.78 கோடி மதிப்பீட்டில் 4,932 பணிகள் எடுத்துக்கொள்ளப் பட்டன.

1998-99ஆம் ஆண்டில், பொதுமக்களின் ஆர்வம் காரணமாக நன்கொடை ரூ.12.59 கோடிக்கு உயர்ந்தது. அத்துடன் அரசு மானியத்தையும் சேர்த்து ரூ.30.20 கோடி மதிப்பீட்டில் 4,805 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன.


**மதிப்பீடு மற்றும் கணிப்பாய்வு**

கிராமத்திற்குத் தேவையான வளர்ச்சிப் பணிகளில் சமுதாயத்தினர் அனைவரும் பங்கேற்பதை உறுதி செய்து, அனைவரும் அறியச் செய்தல் அடிப்படையிலேயே இத்திட்டம் உருவாக்கப்படுவதால், ஒளிவு மறைவு இன்றி செயல்படுதல் மற்றும் திறமையான நல்ல முறையில் திட்டம் செயலாக்கம் உறுதி செய்யப்படுகின்றன.

பொது மக்களின் வரவேற்பு அதிக அளவில் பல பகுதிகளில் உள்ளன. மற்ற இடங்களில் வரவேற்பு சிறிது சிறிதாக உயர்ந்து வருகிறது. இத்திட்டத்திற்கு நகரப்பகுதிகளில் குறிப்பாக குடிசைப் பகுதிகள் மற்றும் வளர்ச்சியடையாத பகுதிகளில் நல்ல வரவேற்பு உள்ளது. நமக்கு நாமே திட்டம் ஆண்டுதோறும் உயர்ந்து வருவதால் மாநில அரசும் அதன் பங்குத் தொகையை ஆண்டுதோறும் உயர்த்தி வந்துள்ளது.

**சாதனைத் துளிகள்**

கிராமத்திற்கு இணைப்புச் சாலை (நாமக்கல் மாவட்டம்) வெண்ணந்தூர் ஊராட்சி ஒன்றியத்தைச்



கோழித் தீவனங்கள் எடுத்து செல்ல வழி ஏற்படுத்தியுள்ளது.

சேர்ந்த மாகாளிப்பட்டி ஊராட்சியின் கிராம சபா மசானிப்பட்டி முதல் கோரைகாடு வரை1.2 கி.மீ. இணைப்புச் சாலை அமைத்து, நீண்ட நெடுங்காலமாக இல்லாத போக்குவரத்தினை ஏற்படுத்திட முடிவு செய்தனர்.

இதற்கான மக்கள் பங்குத் தொகை ரூ.5.20 இலட்சம் உழைப்பாகவும், பொருளாகவும் பெறப்பட்டு அரசு மானியம் ரூ.2.40 இலட்சத்துடன் சேர்த்து ரூ.7.60 இலட்சம் மதிப்பீட்டில் இந்த இணைப்புச் சாலை அமைக்கப்பட்டது. இதன் மூலம், 5 கிராமங்களில் உள்ள 7,710 மக்கள் பயன்பெறுகின்றனர். இச்சாலைப்பணி 18.9.97 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.

இச்சாலை அமைத்ததின் பலனாக 5 குடியிருப்புகளுக்கு இணைப்புச் சாலையாக அமைந்ததோடு தேசிய நெடுஞ்சாலையை் அடைய உள்ள 10 கிலோ மீட்டர் தூரம் 3 கிலோ மீட்டர் தூரமாகக்குறைக்கப்பட்டு விவசாயப் பொருள்கள்,

**வரத்து வாய்க்கால் மற்றும் குளம் சீரமைப்பு - கன்னியாகுமரி மாவட்டம்**

1911ஆம் ஆண்டு திருவாங்கூர் மகாராஜா அவர்களால் கட்டப்பட்டு பகவதி அம்மன் கோவில் குளம் கன்னியாகுமரி நகரப்பகுதிக்குள் உள்ளது. இக்குளத்து நீர் சமய சடங்குகள் செய்வதற்குப் பயன்பட்டதோடு நகரத்திற்குத் தேவையான நீர் ஆதார குளமாகவும் உள்ளது. மனச்சிபாறை கடைமடை பகுதியும் பொதுப்பணிக்குச் சொந்தமான குமரீசல் குளத்துடன் இக்கோவில் குளம் இணைக்கப்பட்டுள்ளது. கடைமடைபகுதிக்குத் தண்ணீர் செல்ல, குமரீசல் குளம் நிரப்பப்பட வேண்டுமென்பதை மகாராஜா உறுதி செய்து வந்தார். இதன் காரணமாக, அணைக்கட்டு தண்ணீர் வரத்து இல்லாத நிலையில், கோவில் குளம் நீர்மட்டம் முழுமையாக இருக்கும். திறந்த வாய்க்கால் 2.3 கி.மீ. தூரமும், பாதாள குழாய் 0.4 கி.மீ. தூரமும் நீர்வரத்துக்கான ஏற்பாடு செய்யப்பட்டு குமரீசல் குளம் மற்றும் கோயில் குளம் இணைக்கப்பட்டுள்ளன. எனவே, நகரப்பகுதிக்கு இக்குளம் நீர் ஆதார குளமாக அமைந்து, தண்ணீர் பற்றாக்குறை ஏற்படாது இருந்து வந்துள்ளது.

பின்பு, கோயில் குளம் சரிவர பராமரிக்கப்படாமல் இருந்து வந்ததால்,

1975-ஆம் ஆண்டு பயன்படுத்துவது கைவிடப் பட்டதோடு அல்லாமல், குமரீசல் குளத்திலிருந்து நீர் வரத்தும் இல்லாமல் போய்விட்டது. இக்குளத்தினை புதுப்பிக்க அதிக செலவு ஏற்படும் என்பதாலும் நகரப்பகுதியில் இருந்தமையாலும் கடந்த 23 ஆண்டுகளாக தண்ணீர் இன்றி இக்குளம் இருந்தது.


எனவே, ஒவ்வொரு சட்டமன்ற நாடாளுமன்ற தேர்தலின் போதும் போட்டியிடும் வேட்பாளரின் உறுதிமொழியாக இருந்து வந்தது. ஆனால், எவராலும் பிரச்சனையை நிவர்த்தி செய்ய இயலவில்லை. தற்சமயம் நமக்கு நாமே திட்ட செயலாக்கத்தின் மூலம் பொதுமக்கள் ரொக்கமாகவும், உழைப்பாகவும் பங்குத் தொகை அமைத்து இப்பணியை செய்து முடிக்க கன்னியாகுமரி நகர மக்கள் முன் வந்துள்ளனர்.

**கன்னியாகுமரி**

நகரத்தலைவர் தலைமையில் ஐவர் குழு அமைக்கப்பட்டு இப்பணியினை எந்த வகையில் செய்து முடிக்கலாம் எனப் பரிந்துரைக்கக் கோரியுள்ளார். தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ரூ.3 இலட்சமும், ராஜ்ய சபா உறுப்பினர் ரூ.4 இலட்சமும் நன்கொடை வழங்க முன்வந்துள்ளனர். நமக்கு நாமே திட்டத்தின்கீழ் ரூ.2.50 இலட்சம் அரசு அனுமதி அளித்துள்ளது. கன்னியாகுமரி நகர பொதுமக்களின் பங்கேற்பின் காரணமாக, அகஸ்தீஸ்வரம் வட்டார அலுவலர்கள், கன்னியாகுமரி நகர அலுவலர்கள் ஆகியோர் இப்பணியினை விவேகானந்தா கேந்திர (அரசு சார்பு நிறுவனம்) மூலமாக செய்து முடிக்க ஏற்பாடு செய்தனர். இப்பணி ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் இரு மாதங்களில் செய்து முடிக்கப்பட்டது.

தற்சமயம் இக்குளத்தில், கோவில் சடங்குகள் செய்யப்படுகின்றன. சுற்றுப்புறத்தில் அமைந்துள்ள தங்குமிடங்கள், வீடுகள் ஆகியவை நீண்ட தூரம் சென்று தண்ணீர் எடுத்து வராமல் கிணறுகளில் ஏற்படும் ஊற்று மூலம் தண்ணீர் வசதியினைப் பெறுகின்றனர்.

இதேபோன்று பெரிய பாலங்கள், சாலைகள், பள்ளி வட்டாரங்கள், தளவாட சாமான்கள், பள்ளிகளுக்கு மென்பொருள் இயந்திரங்கள், பொது மக்கள் நன்கொடை மூலம் செய்யப்பட்டுள்ளன.




**"அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்"**

"அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்" மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞரால் 1997-98-ஆம்

ஆண்டில் துவங்கப்பட்டது. கிராம ஊராட்சியின் அனைத்து அடிப்படை வசதிகளை ஒருங்கிணைத்து மேம்பாடு செய்தல், மற்றும் கிராமப்புறங்களில் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதன் மூலம் சமூக-பொருளாதார தரத்தினை உயர்த்துதல் ஆகியவை இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டமானது, மற்ற வளர்ச்சிப் பணிகளின் முயற்சிகளை ஒருங்கிணைப்பதன் மூலம் ஒரு புதிய முயற்சியை உருவாக்குகிறது. ஒவ்வொரு ஆண்டும், இத்திட்டத்தின் கீழ், சட்டமன்ற உறுப்பினரால் ஊரகத் தொகுதிகளில் ஒரு கிராமம் தேர்ந்தெடுக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.


இத்திட்டத்தில், தற்போது நிலவும் சூழ்நிலையை மதிப்பீடு செய்து, முன்னேற்றம் காண வேண்டிய அடிப்படை வசதிகளை பட்டியலிட்டு, கிராம வளர்ச்சி அறிக்கை தயாரிக்கப்படுகின்றன. ஆரம்பக் கல்வி, சுகாதாரம், குடிநீர், சத்துணவு, சாலைகள், பொது விநியோகம் மற்றும் தெருவிளக்கு ஆகிய ஏழு அடிப்படைத் தேவைகளுக்கு முக்கியத்துவம் தரப்படுகின்றன. மேற்கண்ட ஏழு அடிப்படை வசதிகளுக்கும், குறைந்த சேவை அளவு நிர்ணயம் செய்யப்படுகிறது. உதாரணமாக குடிநீர் விநியோகத்தில், ஒரு நபருக்கு 40 லிட்டருக்குக் குறையாமல் வழங்க அளவீடு நிர்ணயம் செய்யப்படுகிறது. அதேபோல், சாலைகளை பொறுத்தவரை, முக்கிய இணைப்புச் சாலைகள் தார் சாலைகளாகவும், மற்ற சிறு இணைப்புச் சாலைகள், தெருக்கள், சந்திப்புகள் ஆகியவற்றின் தரம் உயர்ந்ததாகவம் மாற்றப்படுகின்றன. ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் ஆரம்பக் கல்வி அதன் எல்லைக்குள்ளேயே தரப்படுகிறது. இந்த கிராம வளர்ச்சிப் பணியானது திட்டமிட்டு தயாரிக்கப்பட்ட கிராம- சபையினால் அங்கீகரிக்கப்படுகிறது. முகாம் மற்றும் பிரச்சாரம் மூலம் கல்வி, சுகாதாரம் போன்றவற்றில் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதும் இத்திட்டத்தின் அங்கமாகும். மேலும், கல்வி சார்ந்த பிரச்சாரம், சுகாதார முகாம், கால்நடை கண்காட்சி, பெண்கள் மாநாடு, விவசாயிகள் கருத்தரங்கு போன்றவையும் இதற்காக நடத்தப்படுகின்றன.



### நிதி

மாநில அரசானது, 1997-98ஆம் ஆண்டில், குடிநீர் விநியோகத்திற்கான சிறப்பு மானியம் தவிர, ரூ.51.85 கோடி அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்காக அனுமதி அளித்துள்ளது. அதேபோல், 1998-99ஆம் ஆண்டில் குடிநீர் விநியோகத்திற்காக ரூ.68.94 கோடி தவிர,

ரூ.75 கோடி அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்காக வழங்கியுள்ளது.. மீதி நிதித்தேவை மற்ற வளர்ச்சிப் பணிகளை ஒருங்கிணைப்பதன் மூலம் செய்யப் படுகின்றன.



இத்திட்டத்திற்காக தேர்ந்தெடுக்கப் படும் கிராமத்தை அனைத்து அடிப்படைத் தேவைகள் கொண்டதாகவும், நகரப் புறங்களுக்கு நிகராக அனைத்து வசதிகள் கொண்டதாகவும் உள்ள மாதிரி கிராமமாக மாற்றுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். மேலும், இத்திட்டத்திற்காக திட்டமிடுதல் மற்றும் பங்குபெறுதல் மூலம் மக்களிடையே சமுதாய ஒத்துழைப்பை மற்றும் கிராம உள்கட்டமைப்பு பராமரித்து வளர்ப்பதும் இதன் கொள்கையாகும்.

## சாதனைத் துளிகள்

காஞ்சிபுரம் மாவட்டத்தில் 1997-98-ஆம் ஆண்டில் 9 கிராம ஊராட்சிகள் இத்திட்டம் நிறைவேற்று வதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டன. காஞ்சிபுரம் தொகுதியில் தாமல் என்ற ஊராட்சி தேர்வு செய்யப்பட்டது. 1991 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி அக்கிராமத்தின் மக்கள் தொகை 7,159 ஆகும். இக்கிராமத்தின் வளர்ச்சிக்காக மாநில அரசு ரூ.24.68 இலட்சம் அண்ணா மறுமலர்ச்சித் திட்ட மானியமாகவும், ரூ.27 இலட்சம் குடிநீர் விநியோகத்திற்காகவும், ரூ.40.87 இலட்சம் மற்ற சார்பு துறைகளிடமிருந்தும் செலவிடப்பட்டது. இதன் மூலம் 2 கிராம சாலைகள், 76 கட்டடங்கள், 9 குடிநீர் விநியோக வேலைகள், 50 தெருவிளக்குகள் மற்றும் 19 இதர வேலைகளும் எடுத்துக்கொள்ளப்பட்டன. இந்தத் திட்டத்தின் மூலம் தாமல் கிராமத்தின் அனைத்து மக்களும் அனைத்து வசதிகளைக் குடிநீர் விநியோகத்துடன் அனுபவித்து வருகின்றனர். தற்சமயம் இது, ஒரு மாதிரி கிராமமாகத் திகழ்கிறது.

## புல் வளர்ப்புப் பண்ணை

முப்பது ஆண்டுகளுக்கு முன்பு, இக்கிராமத்தில் பால் விநியோக கூட்டுறவு சங்கம் நிறுவப்பட்டு, அதற்காக 19 ஏக்கர் நிலம் மாதிரி புல் வளர்ப்புப் பண்ணை நிறுவுவதற்காக தாமல் கிராமத்தில் பொன்னியம் மண்பட்டறை என்ற இடத்தில் ஒதுக்கப்பட்டது. எனினும் அந்தக் கனவு நனவாகவில்லை.

1998-99-ல் ரூ.9.17 இலட்சம் ஐ.ஆர்.டி.பி. திட்டத்தில் உள் கட்டமைப்பு ஒதுக்கப்பட்டு,


அந்நிலத்தில் வேலி அமைப்பதற்காகவும், புல் மற்றும் கால்நடைத் தீவனங்கள் வளர்வதற்கு நீர் ஆதாரம் ஏற்படுத்தவும் வழிவகை செய்யப்பட்டது. இச்சங்கத்தைச் சார்ந்த 1,400 உறுப்பினர்கள் இதன் மூலம் தற்சமயம் பயன் அடைகிறார்கள். கால்நடைத் தீவனத்தின் வளர்ச்சி தவிர, அத்தீவனங்களை எவ்வாறு பயிரிட்டு, வளர்த்து, உபயோகிப்பது என்ற முறைகளைத் தெரிந்து கொள்ளுதல் முக்கிய பங்கு வகிக்கிறது. தற்போது, இக்கிராமமானது அருகிலுள்ள மாவட்டங்களிலிருந்து இப்படிப்பட்ட வெற்றிக் கதைகளைத் தெரிந்து கொள்ள வரும் நபர்களை மிகவும் வசீகரிக்கிறது.


வேலூர் மாவட்டத்தில் நாட்ராம்பள்ளி ஊராட்சி ஒன்றியத்தில் வெலக்கன் நத்தம் கிராமத்தில் சேறும் சகதியும் இல்லாத ஒரு சிமெண்ட் சாலை அமைக்கப்பட்டது.

வேலூர் மாவட்டத்தில் 377 குடிநீர் பணிகள் 25 ஊராட்சிகளில் எடுக்கப்பட்டு அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் முழு அளவில் வழங்கப் படுகிறது.

சேலம் மாவட்டம் அயோத்தியாப்பட்டிணம் ஊராட்சி ஒன்றியத்தில் அதிகாரிப்பட்டி கிராமத்தில் சொந்தக் கட்டடத்தில் அதுவும் காற்று வெளிச்சம் இல்லாத கட்டடத்தில் பள்ளி நடந்து வந்தது. வீட்டு சொந்தக்காரரும் சில ஆண்டுகளாக கட்டடத்தை காலி செய்ய வற்புறுத்தி வந்துள்ளார். அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைப் பயன்படுத்தி ரூ.7.50 இலட்சம் அளவில் மூன்று கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு, மாணவர்கள் மகிழ்ச்சியுடனும் மனநிறைவுடனும் படிக்கும் வகையில் புதிய கட்டடத்தில் கல்வி பயில்கின்றனர். இதே போன்று தொட்டிப்பாளையம் கிராமத்தில், பொதுமக்களால் பல ஆண்டுகளுக்கு முன் நன்கொடை வழங்கப்பட்ட பள்ளிக்கட்டடம் காற்று செல்லாத, வெளிச்சம் இல்லாத நிலையில் இருந்து வந்தது. தற்போது ரூ.2.59 இலட்சத்தில் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தில் உட்படுத்தி, ஒரு நல்ல கட்டடம் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் - மிகவும் தொலைவில் உள்ளதும் எளிதில் செல்ல முடியாததுமான “ஆரக்கோடு” கிராமத்தில் இதுவரை பாதுகாக்கப்பட்ட குடிநீர் எந்தத் திட்டத்தின் மூலமும் வழங்கமுடியாமல் இருந்தது. ஆனால், தற்போது குடிநீருக்குப் பஞ்சமில்லாமல் வழிந்தோடும் அளவுக்கு வழங்கப்படுகிறது.





நோய்த் தடுப்பு முகாம்கள், பள்ளிக் குழந்தைகளுக்கு சுகாதார ஆய்வு செய்தல்.

மக்கள் தரத்தை மேம்படுத்த பல துறை திட்டங்களுடன் ஒருங்கிணைத்து செயல்படுத்தப் பட்டுள்ளது.

சிக்கனம் மற்றும் சேமிப்பு பற்றி சுயஉதவி குழுக்கள் மூலம் போதிக்கப்படுகிறது.

## அண்ணா மறுமலர்ச்சித் திட்ட கிராமத்தின் சில சிறப்பு அம்சங்கள்

சுகாதார ஆய்வு எல்லா பள்ளிக்கூட மாணவர்களுக்கும் செய்யப்பட்டன.

தனி நபர் இல்லக் கழிப்பிடங்கள் கட்டப்பட்டுள்ளன.

புதிய குடியிருப்புகளுக்கு புதிதாகத் தெரு விளக்குகள் போடப்பட்டன.

ஒருநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு, கூடுதல் பள்ளிக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

பொதுவிநியோகக் கட்டடங்கள் மற்றும் மதிய சத்துணவு மையங்களுக்கு கட்டடம் கட்டப்பட்டுள்ளன.

அதிக பயிர் வளர்ப்பதற்கு வேளாண்மை பயிற்சி முகாம்கள், கால்நடைகளுக்கு செயற்கை மற்றும்

அனைத்து குடும்பங்களுக்கும் தொடர் வைப்புக் கணக்கு/சிறுசேமிப்புக் கணக்கில் சேர போதிக்கப்படுகிறது.

தற்போது, அண்ணா மறுமலர்ச்சித் திட்ட கிராமங்களில் மகளிர் சந்திப்பு, வேளாண்மை மன்றம், கால்நடை சுகாதார முகாம்கள் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இம்மாதிரியான முகாம்கள் அண்ணா மறுமலர்ச்சித் திட்ட கிராமங்களைப் பிற கிராமங்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுகின்றன.

1997-98ஆம் ஆண்டில் 212 கிராமங்களில் ரூ.172.77 கோடி மதிப்பில் 29,679 பணிகள் மேற்கொள்ளப்பட்டன. ரூ.56 கோடி மதிப்பில் 1,747 பணிகள் குடிநீர் வழங்குவதற்காக மட்டுமே மேற்கொள்ளப்பட்டன.

1998-99-ஆம் ஆண்டில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கு, மற்ற திட்டங்களை விட அதிக

**ஊரக வளர்ச்சித்துறை மூலம் கீழ்க்கண்ட அடிப்படைத் தேவை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன**


| | 1996-97 | | 1997-98 | | 1998-99 | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | பணிகள் | மதிப்பு | பணிகள் | மதிப்பு | பணிகள் | மதிப்பு | பணிகள் | மதிப்பு |
| | | (ரூ. கோடியில்) | | (ரூ. கோடியில்) | | (ரூ. கோடியில்) | | (ரூ. கோடியில்) |
| தொகுப்பு வீடுகள் | 71615 | 193.36 | 56621 | 152.88 | 41330 | 133.67 | 269566 | 479.91 |
| தார்சாலைப் பணிகள் | 5714 | 140.200 | 4888 | 137.200 | 6283 | 185.34 | 16888 | 462.74 |
| உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிக் கட்டடங்கள் | - | - | | - | 796 | 27.86 | 796 | 27.86 |
| நீர்பிடிப்புப் பணிகள் | 16785 | 113.000 | 7628 | 110.00 | 1157 | 155.36 | 36000 | 378.36 |
| நியாயவிலைக் கடைகள் | 263 | 3.500 | 1698 | 22.900 | 2996 | 44.940 | 4957 | 71.340 |
| ஆரம்பப் பள்ளிக் கட்டடங்கள் | 1893 | 37.860 | 929 | 23.225 | 1484 | 40.050 | 4306 | 101.135 |
| சத்துணவுக் கூடங்கள் | 422 | 4.200 | 345 | 3.795 | 387 | 3.630 | 1154 | 11.625 |
| ஊராட்சி அலுவலகக் கட்டடம் | 151 | 2.040 | 259 | 3.240 | 280 | 3.790 | 690 | 10.010 |
| ஜீவன் தாரா கிணறுகள் | 5235 | 23.54 | 4849 | 21.59 | 4048 | 24.280 | 14132 | 69.41 |
| தொலைக்காட்சிப் பெட்டி அறைகள் | 22053 | 35.29 | - | - | - | - | 22053 | 35.29 |
| | | | | | | | 270535 | 1647.74 |

ஒதுக்கீடாக ரூ.75 கோடி ஒதுக்கப்பட்டது. மொத்த மதிப்பீடான, ரூ.180.43 கோடியில், 23,910 பணிகள் 1998-99-ஆம் ஆண்டு எடுத்துக் கொள்ளப்பட்டன. இதில் ரூ.65.07 கோடி மதிப்பில் 1,462 குடிநீர் வழங்கும் பணிகளும், 1,392 தார்ச்சாலைப் பணிகளும், 938 பிற சாலைப் பணிகளும் மற்றும் 6,950 பள்ளிக் கட்டடங்கள் கட்டுதல் மற்றும் பொது விநியோகக் கட்டடங்கள் கட்டுதல் போன்ற பணிகளும் எடுத்துக்கொள்ளப்பட்டன.

1999-2000-மாவது ஆண்டில், 210 சட்டமன்றத் தொகுதியில் உள்ள 210 கிராம ஊராட்சிகளில், இத்திட்டத்தின் கீழ் பணிகளை எடுத்துக்கொள்ள ரூ.75 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு செயல்படுத்தும் இத்திட்டத்தின் கீழ் காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள ஆலந்தூர் சட்டமன்றத்தொகுதி மற்றும் சேலம் மாவட்டத்திலுள்ள ஒரு சட்டமன்றத் தொகுதியில் வரும் பஞ்சாயத்துக்களில், பணிகள் முன்னமேயே முடிக்கப் பட்டுவிட்டன. ஆகவே, இந்த ஆண்டு செயல் திட்டத்தில் இந்த இரண்டு தொகுதிகளும் இடம் பெறவில்லை.

கிராமசபை, சமூக ஆய்வு, ஒளிவுமறைவற்ற நிருவாகம் ஆகியவை மூலம் அடித்தள மக்களாட்சித் தத்துவத்தை வலுப்படுத்துவது மட்டுமல்லாமல், கல்வி, சுகாதாரம், துப்புரவு போன்ற பணிகளும் இதுபோன்ற திட்டங்களால் முக்கியத்துவம் பெறுகின்றன. இத்திட்டத்தில் அடங்கியுள்ள பல்வேறு பணிகளும் செய்து முடிக்கப்பட்டுவிட்டால், அந்தக் கிராமம், முழு வளர்ச்சி பெற்றதொரு மாதிரி கிராமமாக உருவாகி, மற்ற கிராமங்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்கும்.★

# கம்பன் விழாவில் கலைஞர்



**க**ம்பன் விழாவிற்கு நான் அழைக்கப்படுவதும், அதில் கலந்து கொள்வதும் வியப்புக்குரிய ஒன்றல்ல. ஏனென்றால் கம்பரடிப்பொடி என்று முத்திரை பொதித்த காரைக்குடி பெரியவர் சா.கணேசன் அவர்களே முன்னின்று நடத்திய காரைக்குடி கம்பர் விழாக்களுக்கு நான் இரண்டு அல்லது மூன்று முறை அழைக்கப்பட்டிருக்கிறேன். அப்படி அழைக்கப்பட்டு சென்றபோது, என்னைப் பலரும் ஆச்சரியத்தோடு பார்த்தார்கள். நான் அங்கே பேசும்போது, வந்த என்னை யாரும் ஆச்சரியத்தோடு பார்க்காதீர்கள். என்னையும் இந்த விழாவிற்கு அழைத்திருக்கிறார்கள் என்பதற்காக அழைத்தவர்களை ஆச்சரியத்தோடு பாருங்கள் என்று குறிப்பிட்டேன்.

### *இதுதான் மதநல்லிணக்கம்*

குலாம் காதருக்கும் கோகுலாஷ்டமிக்கும் என்ன சம்மந்தம் என்பது குக்கிராமத்திலே கூடப் பேசப்படுகின்ற பழமொழி. நான் கேட்கிறேன் - இஸ்மாயில் (கம்பன் கழகத்தின் தலைவர்) அவர்களுக்கும் இராமா யணத்திற்கும் என்ன சம்மந்தம் என்று கேட்கிறேன். இந்தக் கேள்விக்குப் பதில்தான் - இதுதான் மதநல்லிணக்கம் என்ற பதிலாகும். இந்த மத நல்லிணக்கம் நாட்டில் உருவாகவேண்டும் என்பதற் காகத்தான் நாம் பணியாற்றிக் கொண்டிருக்கிறோம்.

நம்முடைய் தவத்திரு பொன்னம்பல அடிகளாருடைய பேச்சைக் கேட்டோம். அவர் மறைந்தும் மறையாமல் இருக்கின்ற நம் நெஞ்சம் நிறைந்த குன்றக்குடி அடிகளாருடைய வழித்தோன்றலாக விளங்குகிறார் என்பதற்கு இன்றைய தினம் அவர் ஆற்றிய உரையே ஒரு சான்றாகும். இதை நான் எப்படிச் சொல்கிறேன் என்றால் இந்த விழாவிலே நான் கலந்து கொள்ளவேண்டுமென்று நம்முடைய நீதியரசர் அவர்கள் என்னை அழைத்தபோது எனக்குள்ள வேலைத் தொல்லைகளை, இன்றுள்ள அரசியல் சூழ்நிலைகளை அவரிடத்திலே எடுத்து விளக்கி இருந்தாலும் தொடங்கி வைத்துவிட்டுப் போனால் போதும், தொடர்ந்து உரை நிகழ்த்த வேண்டியது இல்லை என்று நீங்கள் உறுதி அளித்திருக்கின்ற காரணத்தால் அந்தப் பணியை மாத்திரம் ஆற்றிவிட்டுப் போகிறேன் என்று அவரிடத்திலே குறிப்பிட்டேன்.

### *குறிப்பெடுத்துச் சென்று பேசுவதுதான் வழக்கம்*

நான் பொதுவாக இலக்கிய விழாக்களிலே கலந்து கொள்ளும்போது, நிரம்ப தயார் செய்து கொண்டு பேசுவது வழக்கம். ஒரு புத்தக வெளியீட்டு விழாவாக இருந்தாலும் அல்லது நம்முடைய ஆர்.எம்.வீ. அவர்கள் முன்னின்று நடத்திக் கொண்டிருக்கின்ற ஆழ்வார் மையத்தின் விழாவாக இருந்தாலும் அந்த விழாக்களிலே உரையாற்றச் செல்லும் போது, அதற்குரிய நூல்களை, ஆதாரங்களைத் திரட்டி அவைகளை இரண்டு மூன்று நாள் படித்து, குறிப்பெடுத்துக் கொண்டு சென்று பேசுவது வழக்கம். இங்கே என்ன பேசலாமென்று நான் எண்ணிப் பார்க்கவே இயலாத அளவிற்கு ஓய்வற்ற ஒரு சூழலிலே நான் இருக்கிறேன்.

இன்று நாலரை மணி அளவில் சில புத்தகங்களை எடுத்துப் புரட்டி பார்த்தேன். அதிலே ஒன்று கம்பரும் அரசியலும் என்ற தலைப்பில் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் 94ஆம் ஆண்டு இதே மன்றத்திலே ஆற்றிய உரைநூல் வடிவிலே வெளிவந்துள்ளது. அப்போதே சந்தேகப்பட்டேன். இந்த உரையை படிக்காமலா பொன்னம்பல அடிகளார் வரப்போகிறார், அதைப் பற்றி பேசாமலா இருக்கப் போகிறார் என்ற ஐயப்பாடோடு வந்தேன். என்னுடைய சந்தேகம் உண்மை ஆயிற்று. வரிக்கு வரி குன்றக்குடி அடிகளார் அவர்கள் அன்றைய தினம் ஆற்றிய உரையிலிருந்து பல சான்றுகளை இங்கே அவர்கள் எடுத்துரைத்தபோது நான் வியந்தேன்.

அவர் உரையாற்றி விட்டு அமர்ந்ததும் அவரிடம் சொன்னேன். 94ஆம் ஆண்டு அடிகளார் அவர்கள் இங்கே பேசும்போது என்னென்ன கருத்துக்களைக் குறிப்பிட்டார்களோ அவைகள் எல்லாம் நூல் வடிவிலே வந்திருக்கிறது. அப்படியே அதையே பேசினீர்கள். பரவாயில்லை, அடிகளார் விட்டுச் சென்ற செல்வத்தை நீங்கள் நல்ல முறையிலே தொடர்ந்து பின்பற்றுகிறீர்கள் என்று அவரிடம் சொன்னேன். அவரும் புன்னகையோடு அதை ஏற்றுக்கொண்டார். ஏனென்றால் துறவிகள் உண்மையை ஒப்புக் கொள்ளக் கூடியவர்கள் என்ற காரணத்தால் ஏற்றுக்கொண்டார்.


### *குன்றக்குடி அடிகளார் அன்றைய தினம் குறிப்பிட்ட கருத்து*

கம்பனுடைய அரசியல் என்ன - கம்பன் கண்ட நாடு எப்படி இருந்தது - எப்படி இருக்க வேண்டுமென்று கனவு

கண்டான் - இப்போது எப்படி இருக்கிறது என்கின்ற இந்தக் கேள்விகளை அடிப்படையாக வைத்துத்தான் அன்றைய தினம் அடிகளார் அந்த உரையை ஆற்றியிருந்தார்.

அதிலே ஒன்று சொல்லியிருக்கிறார். 94ஆம் ஆண்டு சொன்னது - ‘‘இன்றைக்கு ஆட்சியிலே இருப்பவர்கள் அரசு சொத்துக்களையெல்லாம் தாங்களே வைத்துக் கொள்கிறார்கள்’’ என்ற ஒரு கருத்தை அடிகளார் அவர்கள் அன்றைக்கு மிகத் தைரியமாக இங்கே நடைபெற்ற விழாவிலே கம்பனும் அரசியலும் என்ற தலைப்பிலே குறிப்பிட்டிருக்கின்றாார்கள். அதை மாத்திரம் நம்முடைய பொன்னம்பல அடிகளார் அவர்கள் இங்கே விட்டுவிட்டார். இந்த நேரத்தில் இங்கே அரசியல் பேசக்கூடாது என்பதால் அவர் விட்டிருக்கக்கூடும்.

கம்ப ராமாயணத்தைப் பற்றி தமிழகத்தில் தந்தை பெரியார் அவர்களால் ஒரு பெரும் பிரச்சினை உருவாக்கப்பட்டு அவர் வழிநின்ற இன்றைக்கும் அவர் வழி நின்று கொண்டிருக்கின்ற நாங்கள் எல்லாம் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய தலைமையிலே அந்தப் பிரச்சினையிலே நாங்களும் ஈடுபட்டோம் என்ற உண்மையை மறைக்கத் தேவையில்லை.



ஆனால், அந்த நேரத்திலும் அண்ணா என்ன சொன்னார் என்றால், நாங்கள் கம்பராமாயணத்திலே இருக்கின்ற இராம்ன் யார், அவர் தெய்வீக வடிவமா, மனித வடிவமா, அவருடைய கதாபாத்திரம் எப்படி படைக்கப்பட்டிருக்கின்றது என்கின்ற ஆராய்ச்சிக்கெல்லாம் செல்ல விரும்பவில்லை. கம்பனிடத்திலே அன்பு கொண்டவர்கள் கம்பன் பாடிய ஆற்றோரம் பற்றிய சில செய்திகளை - வர்ணனைகளை ஒரு தனி ஏடாக வெளியிடலாம். நகரத்தைப் பற்றி, நகரத்தின் வளத்தைப் பற்றி கம்பன் எழுதியுள்ள அழகான பாடல்களை தனி ஏடாக வெளியிடலாம். அந்த இலக்கியத்தைப் பரப்ப நாங்கள் என்றைக்கும் தயாராக இருக்கிறோம் என்று குறிப்பிட்டார்.

### *இலக்கிய ரீதியாகத் தந்ததை எண்ணிப் பார்க்க வேண்டும்*

இன்றைக்குக் கூட ராமாயணத்தை - இராம அவதாரத்தைப் பற்றி நாம் எண்ணும்போது வால்மீகியை பல இடங்களில் கம்பர் மறுத்திருக்கிறார். கம்பர் சொல்லியிருப்பதை வால்மீகி பல இடங்களில் மறுத்திருக்கிறார். இவருக்குப் பிறகு அவர் மறுத்தாரா என்பதல்ல. இரண்டு நூல்களையும் வைத்து ஒப்பிட்டுப் பார்க்கும்போது அவருடையச் செய்திகளை இவர் மறுக்க, இவர் சொன்ன செய்திகளை அவர் மறுத்திருக்கும் நிலை அதிலே இருக்கின்றது. எனவே தான் அந்தப் போராட்டத்திலே இந்தக் காலத்திலே ஈடுபடத் தேவையில்லை. ஏனென்றால் நாடு, சமுதாயம் மிக வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கின்ற கால கட்டத்தில் அந்தப் பழைய விஷயங்களில் நம்முடைய கவனத்தைத் திருப்ப வேண்டிய அவசியமில்லை என்பதற்காகச் சொல்கிறேன். இலக்கிய ரீதியாக கம்பன் தமிழகத்திற்கு, தமிழுக்கு, இலக்கியத்திற்குத் தந்துள்ள செல்வம் எத்தகையது என்பதைத்தான் நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். அதை விட்டு கதையிலே நுழைந்தால் இராமாயணமே ஒவ்வொரு கட்டத்திலும் தொடராமல் நின்று போயிருக்கக்கூடிய பல கட்டங்கள் உண்டு.

இப்போது கூட மேடையிலே ஒரு புத்தகத்தை நான் படித்தேன். புதிய நூல் அது. அந்த நூலிலே கூட ஒரு இடத்தில் இராமன் சுக்ரீவனுக்குப் பதிலாக வாலியைச் சந்திந்திருந்தால் இராமாயணம் அங்கேயே முடிந்திருக்கும். சுக்ரீவனைச் சந்தித்த காரணத்தால்தான் இராமாயணமே நீண்டு கொண்டு போனது என்று ஒரு இடத்திலே குறிப்பிடுகிறார். இன்னும் ஐந்தாறு பக்கம் பின்னோக்கித் திருப்பிப் பார்த்தேன். அங்கே குறிப்பிடுகிறார் - கைகேயி மாத்திரம் அந்த வரத்தை நினைவுபடுத்தாமல் இருந்திருந்தால், இராமாயணம் அத்தோடு நின்றிருக்கும் கைகேயினுடைய பேச்சை இராமன் மாத்திரம் கேட்காமல் முடி சூட்டிக் கொண்டிருந்தால் இராமாயணம் அத்தோடு நின்றிருக்கும் என்கின்ற இந்தக் குறிப்புகளை அந்த நூலிலே இப்போதுதான் படித்துப் பார்த்தேன். அது உண்மை தான்.

### *வரங்கள் நிறைவேற்றாததால் ஆட்சி கவிழ்ந்த சூழ்நிலை*

கைகேயி அந்த வரங்களை நினைவுபடுத்திய காரணத்தால்தான் அன்றைக்கு அயோத்தியிலே ஒரு பிரளயமே ஏற்பட்டது. என்றைக்கோ கொடுத்த வரங்களை நினைவுபடுத்தி எனக்கு உறுதி அளித்திருக்கிறாய், அதை நீ நிறைவேற்றவில்லை என்று சுட்டிக்காட்டி அதன் காரணமாக அன்றைக்குத் தசரதனுடைய ஆட்சியே கவிழ்கின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டதை நாம் எண்ணிப் பார்க்கிறோம். எனவே கைகேயினுடைய அந்த நிலை அத்துடன் நின்றிருக்குமேயானால், இராமாயணம் அவ்வளவு நீண்டிருக்காது. இராவணனே கூட கதையிலே வந்திருக்க மாட்டான்.

இவைகளையெல்லாம் நாம் எண்ணிப் பார்க்கும் போது கதாபாத்திரங்கள் அல்ல, இதிலே முக்கியம். வேறு என்ன முக்கியம் என்றால் கம்பன் கையாண்டிருக்கின்ற தமிழ். அந்தத் தமிழிலே கூட என்னுடையப் பார்வையிலே பட்ட ஒன்று - ஒரு கட்டத்தில் இராமனும் இலக்குவணனும் சீதையைத் தேடி அலையும்போது ஒரு இடத்திலே இருவரும் தங்கியிருக்கின்ற நேரத்தில் அயோமுகி என்கிற ஒரு அரக்கப் பெண்மணி அல்லது அரக்க குணம் படைத்த ஒரு பெண் இலக்குவனை மயக்கி வெகு தொலைவு அழைத்துச் சென்று விடுகிறாள். தம்பி எங்கே சென்றான் என்று தெரியாமல் இராமன்

கவலைப்படுகிறான். ஏனென்றால் வேறு யாரும் துணைக்கு இல்லை. துணைக்கு இருந்த தம்பியையும் காணவில்லை. வேறு யாரோ மயக்கி அழைத்துச் சென்று விட்டார்கள். அந்த நேரத்தில் கம்பர் இராமனின் நிலையை விளக்குகிறார்.

### கம்பன் கற்பிக்கும் நாகரீகம்

*தள்ளா வினையேன் தனி ஆருயிராய்*
*உள்ளாய் ஒரு நீயும் ஒளித்தனையோ?*
*பிள்ளாய், பெரியாய், பிழை செய்தனையாய்*
*கொள்ளாது உலகு உன்னை இது ஓ கொடியதே!*

- என்று இராமன் மூலமாக கம்பன் சொல்லுகிறான். இதிலே ஒரு சொல் - "ஒரு நீயும்" ஒளித்தனையோ - ஒரு நீயும் என்ற சொல்லை புதிதாகத் தான் நாம் இராமாயணத்திலே பார்க்கிறோம். ஒரு நீயும் என்பது, "நீ ஒருவன் இருந்தால்" என்கின்ற பொருளைத் தருகின்றது என்று புலவர்கள் விளக்குகிறார்கள். நீ ஒருவன் தான் இருந்தாய், நீயும் மறைந்து விட்டாயே, இது மிகமிகக் கொடியது என்று சொல்கிறார். அங்கேதான் - ஒரு நீயும் - என்ற அந்தச் சொல் கம்பனால் கையாளப்படுகிறது. இங்கே ஒரு சோகச் சித்திரமாக கையாளப்படுகின்ற அந்தச் சொல் வேறொரு இடத்தில் உணர்ச்சிப் பிரவாகமாக கம்பரால் கையாளப்பட்டுள்ளது.

*"குற்றம் வீந்த குணத்தின் எம் கோமகன்*
*மற்றை வாள் அரக்கன்புரி மாயையால்*
*இற்று வீழ்ந்தனன் என்னவும், என் அயல்*
*நிற்றியோ? இளையோய், ஒரு நீ என்றாள்"*

மாரீசன் மான் வடிவமெடுத்து சீதையை ஏமாற்றி அந்த மானைப் பிடித்துத் தர வேண்டுமென்று மணாளனிடத்திலே சீதை கேட்டு இலக்குவன் எச்சரித்தும் கேட்காமல் இராமன் அந்த மானைப் பிடிக்க அதைத் துரத்திச் செல்ல - மான் வடிவிலே இருந்த மாரீசன் இராமனால் கொல்லப்படுகின்ற நேரத்தில் "இலட்சுமணா" என்று குரல் கொடுக்கிறான். அந்தக் குரல் இராமனுடைய குரலைப் போலவே இருக்கின்றது. இதைக் கேட்டதும் கணவனுக்கு ஏதோ ஆபத்து என்று சீதை கலங்குகிறாள். உடனே போய் பார்த்துவிட்டு வா என்று இலக்குவனிடம் கூறுகிறாள். அவன் அண்ணனின் கட்டளைப் படி அசையாமல் நிற்கிறான். அப்பொழுது சீதைக்குக் கோபம் வருகிறது. அங்கேதான் சொல்கிறாள்.

*"குற்றம் வீந்த குணத்தின் எம் கோமகன்*
*மற்றை வாள் அரக்கன்புரி மாயையால்*
*இற்று வீழ்ந்தனன் என்னவும், என் அயல்*
*நிற்றியோ? இளையோய், ஒரு நீ என்றாள்".*

இந்த இடத்திலும் "ஒரு நீ" பயன்படுத்தப்படுகிறது.

இங்கே அந்த ஒரு நீ என்ற சொல்லுக்கு என்ன பொருள் என்றால், நீ ஒரு மனிதன் தானா - நீயும் சகோதரன் தானா - என்று அந்தப் பொருளிலே வருகிறது. முதலிலே இந்த - ஒரு நீ - என்ற சொல் ஒருவன் இருந்தாய் நீ மறைந்தாய் என்ற பொருளிலே பயன்படுத்தப்படுகிறது. இங்கே அந்த ஒரு நீ என்ற சொல், உணர்ச்சி வேகத்திலே ஆத்திரத்தோடு பயன்படுத்தப்படுகிறது. இப்படி சொல்லச் சொல்ல அதைக் கேட்டுக் கொண்டிருக்கிறாயே, இராமனின் அவல ஓலத்தைக் கேட்டு கொண்டிருக்கிறாயே, நீயும் ஒரு மனிதனா, நீயும் ஒரு சகோதரனா என்ற பொருளில் பயன்படுத்தப்படுகிறது. இதைப்பற்றி விரிவுரை எழுதுகின்ற புலவர் அழகாகக் குறிப்பிடுகிறார். இந்தச் சொல் பாதியில் நின்று விடுகிறது. இப்படி நிறுத்தி ஒரு நாகரீகத்தை கம்பன் கற்பிக்கிறான் என்று குறிப்பிடுகிறார்.

எப்படியென்றால் ஒருவனைப் பார்த்து, ஏய் முட்டாள் என்று சொல்லும்போது - ஏய், முட் - என்று நிறுத்திக் கொண்டால் முழுப் பொருளையும் அவர்கள் உணர்ந்து கொள்வதைப் போல முழுவதையும் சொன்னால் அது நாகரீகமாக இருக்காது என்பதற்காக - ஏய், முட் - என்பதோடு நிறுத்திக் கொண்டால் எப்படி அது புரிகிறதோ? - எப்படி அது புரிய வைக்கப்படுகிறதோ அதைப் போல இந்த ஒரு நீ என்ற சொல் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது என்று புலவர் விளக்கம் அளித்திருக்கிறார்.

### இனிப்பாக இருக்கும் கற்பனைகளை விளக்கவேண்டும்

இப்படிப் பல விளக்கங்கள் கம்பனுக்குச் சொல்வதற்குப் பல புலவர்கள் இருக்கிறார்கள். நூற்றுக்கணக்கான புத்தகங்கள், கம்பனைப் பற்றிய ஆராய்ச்சி நூல்கள் - கம்பனுடைய தமிழுக்கு சிறப்பு செய்கின்ற வர்ணனைகள் - அதைப் போற்றுகின்ற கவிதைகள், பாடல்கள் எல்லாம் வந்து கொண்டிருக்கின்றன. ஆனால் தமிழகத்தைப் பொறுத்த வரையில் இன்றைக்கும் புலவர்கள் வால்மீகி இராமாயணம், கம்ப இராமாயணம் என்று பிரித்துப் பார்க்கிறார்கள். ஆனால் மக்கள் இரண்டு இராமாயணத்தையும் ஒன்றாகக் கலந்து எந்தெந்த கற்பனைத் தங்களுக்கு இனிப்பாக இருக்கிறதோ - இரண்டையும் சேர்த்து - அதைப்பற்றி மக்கள் இன்றைக்குப் பேசிக் கொண்டிருக்கின்றார்கள். அந்த இரண்டையும் பிரித்துச் சொல்கிற அந்த அரும்பணியை புலவர் பெருமக்கள் எடுத்துக் கொள்ளவேண்டும். அவைகள் புத்தகங்களாக வெளிவந்தால் மாத்திரம் போதாது. இதைப் போன்ற அவைகளில் அவற்றை விளக்க வேண்டும் என்று புலவர் பெருமக்களையெல்லாம் நான் இங்கே கேட்டுக் கொண்டு இந்த வெள்ளி விழா நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்து எனக்கு வேறுபணிகள் இருக்கின்ற காரணத்தினால் இந்த அளவில் என்னுடைய உரையை நிறைவு செய்து உங்கள் அனைவரிடமிருந்து விடைபெற்றுக் கொள்கிறேன்.

# தியாக வேள்வியில் சுதந்திரம்

**- முத்து. பார்த்திபன்**

நம் நாட்டுத் தலைவர்கள் விடுதலைப் போராட்டத்தைப் பொருளுக்காகவோ அல்லது கவுரவத்திற்காகவோ நடத்தவில்லை. தாய் மண் அன்னியரால் ஆளப்படுகிறது; அடிமைப்பட்டு உள்ளது என்கிற உள்ளக் கொதிப்பால் உண்டான வேள்விப் பயணம். நமது மண்; நாம் பிறந்த நாடு; இது நமக்குரியது என்கிற உணர்வுக் குழம்புகளின் உறுதிப்பட்டால் செயல்பட்ட மரணப் போராட்டம் வெற்றி பெற்றதனால் கிடைத்த உரிமைக்கனி.

ஒரு தேசத்து படையெடுப்பினால் அந்த தேசத்து அரசியல், பொருளாதாரம், பண்பாடு, சுதந்திரம் ஆகிய காரணிகள் பெருமளவில் திசை மாறி விடுகின்ற அபாயம் உண்டு. கி.மு. 326ஆம் ஆண்டில் அலெக்சாண்டர் என்ற மாவீரன் தான் பாரத நாட்டுக்கு எதிராக படையெடுத்தவர். பிறகு மத்திய ஆசியாவிலிருந்து சிற்சில வகுப்புகள் அவ்வப்போது படையெடுத்து வந்தனர். கி.பி.8 – ஆம் நூற்றாண்டின் மத்தியில் முஸ்லீம்களின் படையெடுப்புகள் ஆரம்பமாயின. இறுதியில் ஆங்கிலேயர்களும், பிரெஞ்சு நாட்டவர்களும், ஐரோப்பிய நாடுகளைச் சார்ந்தவர்களும் வியாபாரத்திற்காக இந்தியாவினுள் நுழைந்து நம்மவர்களின் ஒற்றுமையின்மையை தனக்குச் சாதகமாக்கிக் கொண்டு சூழ்ச்சி, வஞ்சனை, தந்திரம், மோசடி ஆகிய ஏவுகணைகளைப் பயன்படுத்தி நம் நாட்டை கைப்பற்றினர்.

### *தியாக மனப்பான்மை*

ஆங்கிலேயர்களின் அடிமைத்தளையை அகற்ற நம் நாட்டு தேசத்தலைவர்கள், தியாகிகள், கலைஞர்கள், இளைஞர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து தேச விடுதலைக்காகப் பாடுபட்டனர். இதற்காக உயிர்களைக் கொடுத்தவர்கள் அடக்கு முறைகளைச் சகித்துக் கொண்டவர்கள், சிறையிலே செக்கிழுத்தவர்கள். சொந்தம், பந்தம், சொத்து, சுகம் அனைத்தையும் இழந்தவர்கள் ஏராளம்.

தம் மக்கள், தம் இனம், தம் ஊர், தம் சமுதாயம் என்ற உந்துதலுடன் 'இந்தியா எனது நாடு' என்ற உணர்வு கொண்டு போராட காந்தியடிகளின் தலைமையின் கீழ் எண்ணற்ற படைகள் புறப்பட்டது. ஆனால் அவர்களுக்குக் கிடைத்ததெல்லாம் அடி, உதை, சவுக்கடி, சிறை, துப்பாக்கி தோட்டாக்கள் தான். நம் முன்னோர்களின் தியாக வேள்வியில் கிடைத்த சுதந்திர தியாகிகளின் வீரவரலாற்றை நினைக்கும் போது உடல் சிலிர்க்கிறது.

### *வீரபாண்டிய கட்டபொம்மன்*

புதுக்கோட்டை மன்னன் ராஜா விஜய ரகுநாத தொண்டைமான் வீரபாண்டிய கட்டபொம்மனை காட்டி கொடுத்ததில் பெரும் பங்கு கொண்டவன். 39 வயதே ஆன கட்டபொம்மனுக்குத் தூக்கு தண்டனை கொடுத்த போது தூக்குக் கயிற்றை தானே மாட்டிக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

*சின்ன மருது – பெரிய மருது*

வெள்ளையர்களோடு ஏற்பட்ட மோதலின் முடிவில் இருவருக்கும் தூக்கு தண்டனை கொடுத்து அவர்களின் தலையைக் காளையர்கோவிலிலும், உடல்களைத் திருப்பத்தூரிலும் புதைத்தனர். உடல்களையும், தலையையும் ஒரே இடத்தில் புதைத்து விட்டால் மறுபடியும் அவர்கள் உயிர்பெற்று விடுவார்களோ என்கிற பயம் வெள்ளையர்களுக்கு அதிகமிருந்ததை மறுக்க முடியாது.

*ராணா குமார சிங்*

கொரில்லாப் போர் முறையின் மூலம் ஆங்கிலேயர் களுக்குப் பீதி கொடுத்த மின்னல் வீரன் ராணா குமார சிங். இவன் ஒருமுறை தன் படை வீரர்களுடன் கங்கையை தோணியில் கடந்து கொண்டிருக்கையில் இவரது கையில் ஆங்கிலேயரின் தோட்டா பாய்ந்து விடவே, அதை பொருட்படுத்தாமல் தோட்டா பாய்ந்த கையை முழங்கை கீழே வெட்டி ''கங்கை மாதாவே உனக்கு என் வீர காணிக்கை'' என்று கூறி கையை கங்கையில் எறிந்து விட்ட தியாகி.

*சுயராஜ்யம்*

காங்கிரஸ் பேரியக்கத்தை உருவாக்கிய பெருந்தகை களில் தாதாபாய் நௌரோஜி என்பவர் தான் முதன் முதலாக சுயராஜ்யம் என்ற வார்த்தையை உருவாக்கினார்.

*பத்திரிகை*

அரவிந்தருடைய Doctrine of Passive Resistance என்ற நூலில் ''நமக்கு நீதி வேண்டி ஆங்கிலேயரின் தயவை நாம் நாடக்கூடாது'' என்று திடகார்த்தமாக கூறியுள்ளார். திலகர் மராட்டிய இதழ்களின் மூலம் விடுதலையின் அவசியத்தையும், லாலா லஜபதிராய் வங்காள கிளர்ச்சியினையொட்டி பஞ்சாபில் தேசிய உணர்ச்சியையும் பரப்பினார்கள்.

*திருமதி காமா*

1907ஆம் ஆண்டு ஜெர்மனியில் ஸ்டட்கார்ட் நகரில் நடைபெற்ற சர்வதேச சோஷலிஸ மகாநாட்டில் தீவிர தேசப்பற்று கொண்ட திருமதி. காமா உரை நிகழ்த்திய போது, நம் நாட்டிற்கு என தனிக்கொடி இல்லாததை விவாதிக்கும் போது அந்த இடத்திலேயே தான் அணிந்திருந்த பச்சை வர்ணத்தில் உள்ள காவிநிறப் புடவையின் ஒரு பகுதியை கிழித்து அந்த மகாநாட்டிலே பறக்கவிட்டார். 1931ஆம் ஆண்டு ஏப்ரல் 26ஆம் நாள் தேசிய கொடி நாளாகக் கொண்டாடப்பட்டது.

*தியாகிகள்*

முதன்முதலாக ''ஜெய்ஹிந்த்'' என்ற சொல்லை உருவாக்கி நாடு பூராவும் முழங்கச் செய்தவர் எட்டு வீட்டு பிள்ளைமார் என்ற சிறப்புப் பெற்ற செண்பகராமன் பிள்ளை ஆவார். ''வெள்ளையனே வெளியேறு'' என்னும் மாபெரும் இயக்கத்தை தமிழகத்தில் முதன்முதலில் வெற்றி பெறச் செய்தவர் வ.உ.சிதம்பரம் பிள்ளை ஆவார். பரலி ஷண்முக சுந்தரம் பிள்ளை அவர்கள் தான் பொதுமக்களை ''வந்தே மாதரம்'' என்னும் கோஷத்தை உச்சரிக்க செய்தவர். இதனால் இவரை 'வந்தே மாதரம் பிள்ளை' என்றழைத்தனர். 1942ஆம் ஆண்டு ஆகஸ்ட் புரட்சித் திட்டத்தை ஊருக்கு ஊர் பரப்பியவர்களில் முக்கியமானவர் பெருந்தலைவர் காமராஜ் அவர்கள். பலாத்காரம் கொண்டுதான் வெள்ளையனை இந்தியாவிலிருந்து வெளியேற்ற முடியும் என்று முழங்கியவர் சுபாஷ் சந்திரபோஸ். இவர் தான் அமைத்திருந்த படைப்பிரிவுகளுக்கு 'ஆஸாத் ஹிந்த் பௌஜ்', 'நேருஜி பிரிகேட்', 'காந்திஜி பிரிகேட்' என்று இந்திய தலைவர்களின் பெயரையே வைத்திருந்தார்.

உப்பு சத்தியாகிரகத்தின் (வேதாரண்யம்) வெற்றிக்குக் காரணமாக இருந்தவர் சர்தார் வேதரத்தினம் பிள்ளை. மக்கள் தங்குவதற்குத் தன்னுடைய பெரிய புகையிலைத் தோட்டத்தையே அழித்து கூடாரம் அமைத்துக் கொடுத்தார். பஞ்சாப் படுகொலையின் தீவிரவாதத்தை உணர்ந்த மோதிலால் நேரு மிதவாதியாக இருந்து போராட்டத்தில் குதித்தவர்.


*ஈ.வெ.ரா.*



கேரளாவில் 'வைக்கம்' என்ற ஊரில் இவரின் தலைமையில் அங்குள்ள சிவன் கோவிலில் தாழ்த்தப்பட்டவர்கள் பிரவேசம் செய்யக் கிளர்ச்சி மேற்கொள்ளப் பட்டது. அது முதல் இவரை 'வைக்கம் வீரர்' என்றே அழைத்தனர்.

தமிழகத்தில் கதர் பிரச்சாரத்தைத் தீவிரமடையச் செய்தவரும் இவரே. இன்றைய கதர் வஸ்திராலயங்கள் இவரால் தான் ஆரம்பித்து வைக்கப்பட்டன. கதர் மூட்டையினை தன் தோள்களில் சுமந்து கொண்டு ஊர் ஊராக விற்று கதர் பிரச்சாரம் செய்து வந்தார்.

### இராஜாஜி



இராஜாஜியின் முயற்சியில் காந்திஜி தன் ஒத்துழையாமை இயக்கத்திற்கான பிரச்சாரத்தை தமிழகத்தில் தான் முதலில் பிரச்சாரம் செய்ய துவங்கினார்.

1930ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இராஜாஜி தலைமையில் 80 பேர் அடங்கிய தியாகிகள் குழு சத்தியாகிரகப் போருக்குப் புறப்பட்டது. பம்பாயிலிருந்து நால்வர் தியாகிகளை குழுவில் வந்து சேர்ந்தனர். நால்வரில் ஒருவர் சிகரெட் பயன்படுத்தினார் என்பதற்காக இராஜாஜி அவரை விலக்கிவிட்டார். தியாகிகள் மத்தியில் ஒழுக்கக் கட்டுப்பாட்டை வளர்த்தவர்.

இரண்டாம் உலகப்போரில் இந்தியர்களின் சம்மதம் பெறாமல் இந்தியர்களை ஈடுபடுத்தியதைக் கண்டிக்கும் வகையிலும், தனிநபர் சத்தியாகிரகத்தில் கலந்து கொள்ளும் வகையிலும் அவர் முதன் மந்திரி பதவியை இராஜினாமா செய்தார்.

### அம்பேத்கர்

இந்திய வரலாற்றில் முதன்முதலாக மத்திய அரசின் அமைச்சகத்திற்கு ஒரு தாழ்த்தப்பட்ட இனத்தை சார்ந்தவர் சேர்த்துக் கொள்ளப்பட்டார் என்றால் அது அம்பேத்கர்



ஒருவர்தான். ஆனால் சாதி வேறுபாடு கருதாது பிராமண வகுப்பைச் சார்ந்த சாரதா கபீர் என்னும் பெண்மணியை மனைவியாக்கிக் கொண்டார்.

1931ஆம் ஆண்டு ஆகஸ்ட் 6ஆம் தேதி காந்திஜி அம்பேத்கரை சந்திக்க விரும்புவதாக கடிதம் எழுதினார். அதன்படி ஆகஸ்ட் 14ஆம் தேதி பம்பாய் மலபார் மலையில் உள்ள மணிபவன் மண்டபத்தில் முதலாவதாக சந்தித்துக் கொண்டனர்.

### பாரதி–சிவா



இந்த நாட்டில் உள்ள அன்னியர்களை நம் தேசத்திலிருந்து அவர்களின் மூட்டைகளுடன் வெளியேற வேண்டும் என்று பாரதியார் கொக்கரித்தார். இதை கேட்ட சுப்பிரமணிய சிவா, "வெள்ளையர்கள் எந்த மூட்டைகளையும் எடுத்துச் செல்லக்கூடாது. ஏனெனில் அந்த மூட்டைகளில் உள்ள பொருட்கள் யாவும் இந்த புனிதமான தேசத்திலிருந்து சுரண்டப்பட்டதாகத்தான் இருக்கும்" என்று கூறினார்.



தமிழகம் முழுவதும் நடந்தே சென்று சுப்பிரமணிய பாரதியார் பாடல்களைப் பரப்பிய பெருமை சுப்பிரமணிய சிவாவையே சாரும். இவர் நீண்ட காலம் சிறைவாசம் அனுபவித்த காரணத்தினால் தொழுநோய் ஏற்பட்டது. இந்த நிலையைக் காரணம் காட்டி ஆங்கில அரசு இவரை இரயிலில் பயணம் செய்வதைக் கட்டுப்படுத்தியது.

### காந்திஜி



இவரின் வாழ்க்கையில் அரிச்சந்திரன் நாடகமும், ரஸ்கினின் "unto the last" என்ற நூலும் இவரை மகாத்மாவாக உயர பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது. இவரது கொள்கை இந்தியர்களுக்கு ஆன்மாவாக விளங்கியது.

நேரு, வினோபா, படேல், இராஜேந்திர பிரசாத், ஜெய பிரகாஷ் ஆகிய இந்தியத் தலைவர்களை உருவாக்கியவர் காந்தி.

மார்டின் லூதர்கிங், நெல்சன் மண்டேலா போன்ற வெளிநாட்டு தலைவர்கள் காந்தியிசத்தால் உருவானவர்கள்.

ஆங்கிலேயர்களுக்குக் காந்தியைக் கண்டால் ஒரு மரியாதை ஏற்பட்டது. யுத்தம் வந்த நேரத்தில் நேருக்கு நேராக வெறுத்த வெள்ளையன், இவர் தென்னாப்பிரிக்காவுக்குப் போனதும் இராஜமரியாதை தந்துள்ளான். நீதிமன்றத்தில் நுழைந்தவுடன் வெள்ளைக்கார நீதிபதி எழுந்து நின்றது காந்தியின் கொள்கைக்குக் கிடைத்த புகழோவியமாகும்.

### சர் பட்டம்

சர். சுப்பிரமணிய அய்யரை 'சர்' பட்டம் கொடுத்ததற்காக பிரிட்டிஷாரின் போக்கை அனுசரித்து நடக்க வேண்டிய சூழ்நிலை தொடர வேண்டும் என்று கூறியதை கேட்ட உடனே அவர், "ஒருவரின் நியாயமான உரிமைகளைத் தடுக்க 'சர்' பட்டம் தடையாக இருக்குமானால் அப்பட்டம் தனக்குத் தேவையில்லை" எனக்கூறி அவ்வாறே செய்தார்.

அமிர்தசரஸ் நகரில் காங்கிரஸ் கட்சியின் மாநாடு நடைபெற்றது. அதில் சுமார் 20,000 பேர் பங்கு கொண்டனர். அது சமயம் ஜெனரல் டயர் என்பவன் 100 இந்திய போர் வீரர்களுடன் 50 வெள்ளைக்கார சிப்பாய்களுடன் வந்து கூட்டத்தை நோக்கி சுடச் சொன்னான். சிப்பாய்கள் இந்தியர்களைச் சுட மறுத்தால் அந்த சிப்பாய்களையும் சேர்த்து சுட உத்தரவிட்டிருந்தான்.

இப்படுகொலையின் தீவிரவாதப் போக்கைக் கண்டித்து ரவீந்திரநாத் தாகூரும் தன் 'சர்' பட்டத்தை உதறினார்.

### கலைஞர்கள்

இவ்வாறு மிதவாதத்தாலும், தீவிரவாதத்தாலும் தேசத்தை வெள்ளையனிடம் இருந்து கைப்பற்ற போராடிய தியாகத்தில் விளைந்த இந்த சுதந்திரத்திற்காக கலைஞர்களும் அரும்பாடுபட்டுள்ளனர். சமுதாய வாழ்க்கையிலும் தனி மனித வாழ்க்கையிலும் மனதில் தோன்றும் உணர்ச்சிகளைக் கண்—செவி வாயிலாகப் பாமர மக்களுக்குத் தெரிவித்தார்கள்.

சுதந்திரப் போராட்டத்திற்காக இசை வாயிலாகவும், பாடல்கள் வாயிலாகவும், நாடகங்கள், திரைப்படங்கள் மூலமாகவும், இசை சொற்பொழிவு வழியாகவும், மக்களை வீறுகொண்டு எழச்செய்தவர்களில் கே.எஸ்.அனந்த நாராயணய்யர், எஸ்.எஸ்.விசுவநாத தாஸ், தெ.பொ.கிருஷ்ண சாமிப் பாவலர், ராஜா சண்முகதாஸ், மதுரை பாஸ்கரதாஸ், ஜி.டி.தாராபாய், சி.ஏ.என்.ராஜ், எம்.ஆர்.வாசவாம்பாள், எப்.சி.நடேசய்யர், டி.பாலசுப்பிரமணியம், கே.பி.சுந்தரம்பாள், பைரவ சுந்தரம் பிள்ளை, கே.சாரங்கபாணி, டி.கே.எஸ். சகோதரர்கள் ஆகியவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

இவ்வாறு இரத்தத்தையும், கலையையும், தியாக வியர்வையையும் சிந்தி வாங்கிய புனித சுதந்திரத்தை இளைஞர்கள் புனிதமான வழியில் வழிநடத்திச் செல்ல வேண்டும். பாரதத் தாய்க்குப் புகழ் மாலைச்சூட வீறுக்கொண்டு எழவேண்டும்.



# அழகுக்கு அழகு சேர்க்கும் உவமைகள்

**டி.எஸ்.பாலு**

அழகுப் பொருட்கள் என்றைக்கும் மாறாத மகிழ்ச்சியை ஊட்டுவன என்பது கீட்ஸ் என்னும் கவிஞரின் கீர்த்தி மொழி. அந்த அழகைத் தெய்வமாகவே ஆராதித்தவர்கள் அக்காலத் தமிழர்கள். 'முருகன்' என்று பெயரிட்டுக் 'குறிஞ்சிக் கிழவன்' என்று கொண்டாடினர். 'முருகு' என்னும் சொல்லிற்கு அழகு, இளமை, மணம், கடவுள் தன்மை என்ற நான்கு பொருள்களும் உண்டு என்கிறார் 'முருகன் அல்லது அழகு' என்ற நூலைத் தந்த திரு.வி.க. அவர்கள். 'முருகு' என்னும் சொல்லிற்கு மட்டுமா அந்தச் சிறப்புகள் சேரும். 'தமிழ்' என்னும் எழில் சொல்லுக்கும் அல்லவா...!

'தமிழ், தமிழ்' என்று தொடர்ந்து சொல்லிக் கொண்டே இருந்தால், 'அமிழ்து, அமிழ்து' என்று இனிமையாக ஒலிப்பதைக் கேட்கலாம்.

*"தமிழுக்கு அமுதென்று பேர்; அந்தத்*
*தமிழ் எங்கள் உயிருக்கு நேர்"*

- என்பது புரட்சிக் கவிஞரின் புதுமை மொழி. அமுதாம் தமிழில் இனிய வசந்தங்களாய் எண்ணற்ற இலக்கியங்கள். அந்த இலக்கியங்களில் மண்டிக் கிடக்கும் உவமைகளின் அளவிற்கோ உவமையே இல்லை.

"மகளே! மலையின் உச்சியில் தேனடை ஒன்று-வா, வா என்று அழைக்கின்றது; அதைச் சுவைத்திட நாவும் மனமும் துடித்தெழவில்லையா?" என்று பாரசீகக் கவிஞன் ஒருவன் கூறியதைப் போல், இதோ...தமிழ் இலக்கியம் என்னும் மலையில் 'உவமை' என்னும் தேனடை...வாருங்கள் சுவைப்போம்!

*"நில்லாமையே நிலையிற் றாகலின்*
*நல்லிசை வேட்ட நயனுடை நெஞ்சின்*
*கடப்பாட்டாளன் உடைப்பொருள் போலத்*
*தங்கு தற்குரிய தன்று நின்*
*அங்கலுழ் மேனிப் பாய பசப்பே"*

- இது குறுந்தொகை வரைந்த உவமைச் செல்வம். இன்னொரு உவமை.

உயிர் நண்பன் பாரி மன்னன் உயிர் நீத்தான். அவன் ஆட்சி செய்த பறம்பு மலையைக் காண்கிறார் கபிலர். அவர் நெஞ்சம் கலங்கி உருகுகின்றது; கண்ணீரை உகுக்கின்றது. தன் ஆற்றாமையைக் கூட, அறிவுக்குப் பொருத்தமான அழகான உவமையால், கபிலர் எப்படிப் புறநானூற்றில் பாடியிருக்கிறார் காணுங்கள்:

*"அறையும் பொறையும் மணந்த தலைய*
*எண் நாள் திங்கள் அனைய கொடுங்கரைத்*
*தெண்ணீர்ச் சிறுகுளம் கீள்வது மாதோ*
*கூர்வேல் குவைஇய மொய்ம்பின்*
*தேர்வண் பாரி தண் பறம்பு நாடே"*

பாரியை இழந்த பறம்பு நாடு, குன்றாலும் குவட்டாலும் கட்டப்பெற்ற சிறுகுளம், காப்பில்லாமல் உடைந்தது போலக் காவலன் இல்லாமல் அழிந்து போய்விட்டதே என நெஞ்சம் நெகிழ்கிறார் கபிலர்.

செக்கர் வானத்தின் செந்நிற அழகைத் தருவதோ மாலை என்னும் மணிப்பொழுது. அவ்வழகுப் பொழுதின் நிகழ்ச்சிகளை உவமை அழகோடு இணைத்துப் பார்க்கிறார் 'கலித்தொகை'ப் புலவர். எப்படி என்கிறீர்களா...?

கிரணங்களே கதிரவனின் வாய். அவ்வாயினால் கதிரவன் காலையில், பகல் காலத்தைக் கக்கி, மாலையில் மீண்டும் அதை விழுங்கிக் கொண்டான் போலும். அதுதான், கதிர்கள் சுருங்கிக் கதிரவன் மலை வாயில் மறைந்துள்ளான்.

காரிருள் படர்கின்றது - கார்மேகவண்ணனின் மேனி நிறத்தைப் போல; வெண்ணிலவு எழுகின்றான் - அவ்விருளை விரட்டி வெற்றியைக் காண்பவர் போல; கமல மலர்கள் குவிந்துள்ள - கண் உறங்குவது போல; மரங்கள் கிளை தாழ்ந்து துயில்கின்றன - தம் புகழைத் தாமே கேட்ட பெரியோர், தலை தாழ்த்தி நிற்பதைப் போல...இப்படியெல்லாம் உவமைகளை உன்னதமாக அடுக்குகிறார் சங்கக் கவிஞர்.

கலித்தொகையின் பாட்டு வரிகள் இவை:

*"அகல்ஞாலம் விளக்கும் தன் பல்கதிர் வாயாகப்*
*பகல் நுங்கியது போலப் படுசுடர் கல்சேர*
*இகல்மிகு நேமியான் நிறம்போல இருள் இவர*
*நிலவு காண்பது போல அணிமதி ஏர்தரக்*
*கண்பாயல் பெற்றபோல் கணைக்கால் மலர் கூம்பத்*
*தம்புகழ் கேட்டார்போல் தலைசாய்த்து மரம்*
*துஞ்ச..."*

### வில்லிபுத்தூரார் உவமை

விண்ணகம் ஒரு மேடை; அதில் வெண்ணிலவு ஒரு நாயகி. வெங்கதிரோனோ ஒரு நாயகன். நீலக்கடல் நடுவே, நீள்சுடர் கதிரவன் எழும் தோற்றத்தை அழகிய உவமையால் கூறுகிறார் வில்லிப்புத்தூரார்.

*"அலை ஆழி முழுநீல உறை நின்றும்*
*மாணிக்க மணி ஆடி போல்*
*உலையாத ஒளி கொண்ட கதிர்*
*ஆயிரத் தோனும் உதயம் செய்தான்!"*

நீல நிறமான உறையிலிருந்து, மாணிக்கமயமான ஒரு கண்ணாடியைச் சிறுகச் சிறுக உருவி எடுத்ததைப் போல், நீலக்கடல் பரப்பிலிருந்து வெண்மைக் கதிரவன் உதயம் செய்கின்றதாம். என்னே அவர் கற்பனை! இயற்கையை வருணிக்கத் தொடங்கினால், கவிஞர்களுக்குச் சொற்களும் அணிவகுத்தன்றோ முறுவலிக்கின்றன...!

*சூளாமணியில் உவமை*

நள்ளிரவு மெல்ல மெல்ல அகன்று, நல்ல காலைப் பொழுது மலரும் வேளை, நள்ளிரவு எப்படிச் சிறுகச் சிறுக மறைந்தது என்று நினைத்துப் பார்க்கிறார் 'சூளாமணி' ஆசிரியர். உடனே, அவர் நெஞ்சத் தடாகத்தில் ஓர் உவமை மின்னலிடுகின்றது.

அறிவுத் தெளிவுடைய நல்லான் ஒருவன், அறியாது செய்த தீமை மெல்ல மெல்ல நீங்குவதைப் போல, அடர்ந்த இருளும் மெலிந்து நீங்கியதாம்.

*"தெள்ளிய மதியவன் செய்த தீமை*
*போல்*
*மெள்ளவே கனைமிருள் மெலிவு*
*சென்றதே"*

- இது சூளாமணி ஆசிரியர் கட்டிய சொல் தோரணம்.

*பரஞ்சோதியார் உவமை*

''தென்னாடு பெற்ற செல்வத் தென்றலே! உன் இன்பத்தைத் தென்னாட்டுக்கு அல்லாமல், வேறே எந்நாட்டில் தெரியச் செய்தாய்?'' என்று கேட்டவர்கள் நம் தமிழ்க் கவிஞர்கள். மலர்களில் படிந்து, மகரந்தத் தாதுக்களைக் குவிக்கும் அந்தத் தென்றலின் இயல்பைப் பரஞ்சோதி முனிவர், கருத்தாழம் மிக்க உவமை ஒன்றால் இப்படி விளக்குகிறார்:

*"பொங்கரில் நுழைந்து வாவி புகுந்து, பங்கயம் துழாவும் தென்றல் அங்கங்கே கலைகள் தேரும் அறிவன் போல் இயங்கும் அன்றே" என்றார். அறிவாலயங்கள் பலவற்றுக்கும் சென்று, பற்பல நூல்களை எல்லாம் ஆராய்ந்து உணர்ந்து, அறிவு மணம் பெற்றுவரும் மாணவனைப் போல், தென்றல் இயங்குகிறது* என்று அறிவான உவமையை அள்ளித் தெளிக்கிறார் பரஞ்சோதியார்.

*குமரகுருபரர் உவமை*

இவ்வுலகின் அனைத்து நிலையாமைத் தன்மைகளையும் ஒரே உவமையில் இணைத்துச் சொல்கிறார் குமரகுருபரர்.



*"நீரில் குமிழி இளமை;*
*நிறைசெல்வம்*
*நீரில் சுருட்டு நெடுந்திரைகள் —*
*நீரில்*
*எழுத்தாகும் யாக்கை"*

நீரில் எழுவன அலைகள்; குமிழிகள். அந்நீரில் எழும் அலைகளே - இவ்வுலகச் செல்வம். நீரில் வாழும் குமிழிகளே - இவ்வுலக இளமை. அந்த நீரில் எழுதப்பட்ட எழுத்தே - இவ்வுலகில் தோன்றி மறையும் மனித உடம்பு. இவை அனைத்தும் விரைவிலேயே அழிந்துவிடும் என்று அழியாத உவமைகளால் அடித்துச் சொல்கிறார் குமரகுருபரர். அழியாத செல்வம் எது என்னும் சிந்தனை வினாவையும் வடித்துச் செல்கிறார்.

*புரட்சிக் கவிஞரின் உவமை*

''மனிதனே! நீ அழகின் வசமாகு; உனக்குத் துன்பங்களே இல்லை'' என்று பிரகடனப்படுத்தினார் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன். ஆம்; அவர் படைத்த ஒரு நூலுக்குப் பெயரே 'அழகின் சிரிப்பு' என்னும் எழில் தலைப்பாகும்.

*"பசையுள்ள பொருளில் எல்லாம்*
*பசையவள் காண்!*
*பழமையினால் சாகாத இளையவள்*
*காண்!*
*நசையோடு நோக்கடா, எங்கும் உள்ளாள்!*
*நல்லழகு வசப்பட்டால், துன்பம் இல்லை!"*

இப்படியெல்லாம் அவர் எழுதுகோல் நமக்கு எழுச்சியூட்டும் நெம்புகோலாய் உதவுகின்றது.

"நீல நிறமான வான ஆடைக்குள், தன் கோல உடலை மூடி மறைத்தாளோ? தன் அழகு முகத்தை மட்டுமே வட்ட நிலவாக அகில உலகிற்கும் காட்டுகின்றாளோ" என்று வியப்படையும் புரட்சிக்கவிஞர். ஒரு பாடலில் இசை அளந்த சொற்களால், இன்னழகு சுமந்த உவமைகளால் நிலவைப் பற்றி இப்படிப் பாடுகிறார்:

*"முழுமை நிலா! அழகு நிலா!*
*முளைத்தது விண் மேலே — அது*
*பழமையிலே புது நினைவு*
*பாய்ந்தெழுந்தாற் போலே!*
*அழுத முகம் சிரித்தது போல்*
*அல்லி விரித்தாற் போல் — மேல்*
*சுழற்றி எறிந்த வெள்ளித் தட்டுத்*
*தொத்திக் கிடந்தாற் போல்*
*குருட்டு விழியும் திறந்தது போல்*
*இருட்டில் வான விளக்கு"*

பாமரருக்கும் புரியுமாறு பாடல் வடித்த பாரதிதாசனாரின் இந்தப் பாடலில், உவமைகள் இனிய கருத்துகளோடு கைகுலுக்கிக் கொள்கின்றன.

### நாமக்கல் கவிஞரின் உவமைகள்

காதலைப் பாடாத கவிஞர் இல்லை, காதலைப் பாடாதார் கவிஞர் இல்லை என்று கூறும் அளவிற்கு ஏராளமாகத் தமிழில் கவிதைகள். காதலின் தனித்துவத்தையும், மகத்துவத்தையும் குறிப்பிட விரும்பிய பாரதியார்,

*"தேனை மறந்திருக்கும் வண்டும் – ஒளிச்*
*சிறப்பை மறந்துவிட்ட பூவும்*
*வானை மறந்திருக்கும் பயிரும் – இந்த*
*வைய முழுதுமில்லை தோழி"*

என்று எளிய உவமைகளால் எடுத்துரைத்தார்.

நாமக்கல் கவிஞர் இராமலிங்கனாரோ 'அவனும் அவளும்' என்ற நூலில் 'அவளைப்' பற்றி வருணிக்கும்போது, உவமைகளால் ஒரு விந்தைக் கோலமே வரைகிறார்:


*'மான்' என அவளைச் சொன்னால்*
*மருளுதல் அவளுக் கில்லை!*
*'மீன் விழி உடையா' ளென்றால்*
*மீனிலே கருமை இல்லை!*
*'தேன்மொழிக் குவமை' சொன்னால்*
*தெவிட்டுதல் தேனுக் குண்டு!*
*'கூன்பிறை நெற்றி' என்றால்*
*குறைமுகம் இருண்டு போகும்*

*'மயிலெனும் சாய'லென்றால்*
*தோகை பெண் மயிலுக் கில்லை*
*'குயிலெனும் குரலாள்' என்றால்*
*ஏழிசை குயிலுக் கில்லை*
*'வெயலொளி மேனி' என்றால்*
*வெயிலிலே வெப்பம் உண்டாம்*
*'அமிலெனும் பார்வை' என்றால்*
*அழிவின்றி ஆக்க மில்லை.*

- அழகுக்கு அழகு சேர்க்கும் அழகான உவமைகளின் அணிவகுப்புதானே இந்தக் கவிதை.

### வாணிதாசன் உவமைகள்

"கவிஞர்கள் பிறக்கிறார்கள்; உருவாக்கப்படு வதில்லை என்பது இவர் வரையில் உண்மை. இவரது கவிதைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தால், நோபல் பரிசு பெறக்கூடும்" என்பது கவியரசு கண்ணதாசனால் புகழப் பெற்றவர் பாவலரேறு வாணிதாசன்.



'எழிலோவியம்' என்னும் நூலில் பாவலரேறு படைத்திடும் உவமைகள் சிலவற்றைப் படித்து மகிழ்வோம்.

"வானம் செல்லுண்ட குடை போல் தோன்றும்", "தூக்கிய கூடாரத்துத் துணிகளின் கிழிசல் வானம்", "உருக்கிய பொன் எங்கெங்கோ ஓடிப் பாய்வதைப் போல நீண்ட கருக்கலில் மின்னல்"

- இப்படிப் பல உவமை ஓவியங்கள் அந்த எழிலோவியத்தில்! முதிய பெண் ஒருத்தியைப் பற்றி வருணிக்க முற்பட்ட கவிஞருக்கு, எப்படிக் கன்னித்தமிழ் கைகொடுக்கிறது பாருங்கள் :

*"முற்றிய கருப்பம் பூவாம்*
*தலைமயிர்! முதுமை காட்டும்*
*நெற்றியின் சுருக்கம் புன்செய்*
*நிலந்தோன்றும் படைச் சாலாகும்*
*வற்றிய கன்னம் காய்ந்த*
*மாங்கனி! குழிந்த கண்கள்*
*முற்றிய பிரப்பங் காயின்*
*முழுநீல மஞ்சள் காட்டும்"*

சிறந்த உவமையானது பொருளின் தன்மையை விளக்குவதோடு அதனைச் சிறப்பிக்கவும் வேண்டும் என்ற அறிஞர் சான்சனின் மொழி, கவிஞர் வாணிதாசனின் உவமைகள் மூலம் உண்மையாகிவிட்டது; உறுதியாகிவிட்டது.

### கண்ணதாசன் உவமைகள்

*காளை மணி ஓசை களத்துமணி நெல்லோசை*
*வாழை இலை ஓசை வஞ்சியர்கை வளையோசை*
*தாழை மடலோசை தாயர் தயிர் மத்தோசை*
*கோழிக் குரலோசை குழவியர் வாய்த் தேனோசை*

என்றெல்லாம் 'தைப்பாவை'யில் சதங்கை வரிகளைச் சதிராட விட்டவர் கவியரசர் கண்ணதாசன்.

இடம், பொருள் அறிந்து அவர் பயன்படுத்திய உவமைகள் ஏராளம்...எடுத்துக்காட்டாகச் சிலவற்றைப் பாருங்கள்:

''மாங்கனியை வகிந்தாற் போல் சிவந்து வரும் புன்னகை'', ''பொய்யோடு வந்த பொருள் போல இளைத்தாயே", "மதயானை மனித உருக்கொண்டாற் போல'', ''வெள்ளிக்காசு ஒருபிடியைக் கீழே கொட்டி விட்டதுபோல் அலட்சியமாய்ச் சிரித்தே''

- இப்படி எளிய சொற்கால், கருத்து மணம் கமழும் உவமைகள் சந்தன மரத்தில் கட்டிய தேன்கூடு போல் கண்ணதாசன் கவிதைகளில் தித்திக்கின்றன.

*சுரதா உவமைகள்*

*உவமையில்லாத பாடல்*
*உப்பு சேராத பண்டம்*
*அவிழ்ந்திடாத தாமரைப் பூ*
*அழகு இல்லாத மங்கை*

- என்று உவமைகள் மூலமாகவே உவமையின் சிறப்பை உணர்த்தியவர் 'உவமைக் கவிஞர்' சுரதா. அவர் படைத்த பாட்டுப் பனுவல்களில், சில உவமை இன்பங்களைப் பருகுங்கள்.

கடலைப் பற்றிப் பாட வந்த கவிஞரின் கவிதையில், உவமைகளின் அலைகள் இப்படி:

*"கள்ளுண்ட சிற்றினத்தார் நடையைப் போலே*
*கருங்கடலின் மீது அலைகள்; சங்கத்தாரால்*
*தள்ளுண்ட பாடலைப் போல் நுரைகள்"*

புதிய புதிய உவமைகளை அல்லவா அடுக்கி அடுக்கி மகிழ்விக்கின்றார். மொழிக்காகவும் நாட்டுக்காகவும் தொண்டு செய்தோரைப் பாராட்ட வந்த கவிஞர்,

*"மொழிக்காக நாட்டுக்காக*
*முன்னோர் போல் தொண்டு செய்வோன்*
*விழிக்கொரு விழியைப் போன்றோன்*
*விதைக்கொரு விதையைப் போன்றோன்"*

- என அழகாகக் கூறுகிறார்.

சேமிப்பைப் பற்றியும் சிக்கனத்தைப் பற்றியும் கூறாதவர்கள் இல்லை. உவமைக் கவிஞரின் மொழியில், அந்தக் கருத்து எப்படி உருவம் சமைக்கின்றது என்பதை உணர்ந்தால் இன்பம்.

*"உருண்டோடிக் கொண்டிருக்கும் கூழாங் கல்லில்*
*ஒருபோதும் பாசிவந்து படிவதில்லை*
*வரவுக்குத் தக்கபடி செலவு செய்து*
*வருவோரைத் துன்பங்கள் தொடுவதில்லை"*

- கூழாங்கல்லைப் போன்றே இதமான கருத்து.

பாட்டிமார் சொல்லும் கதைகளிலும், பட்டிக்காட்டு ஏழை மக்கள் பாடும் நாட்டுப்புறப் பாடல்களிலும், படியாத தாய்மார் இட்டுக்கட்டிப் பாடும் தாலாட்டு, ஒப்பாரிப் பாடல்களிலும், பெண்கள் பொழுதுபோக்காகச் சொல்லி மகிழும் விடுகதைகளிலும், மாமியார்-மருமக்கள் சாடைப் பேச்சிலும் உவமைகள் மண்டிக் கிடப்பதைக் காணலாம்.

- இப்படிக் கூறுகிறார் 'சங்க இலக்கிய உவமைகள்' என்னும் நூலைப் படைத்த டாக்டர் அர.சிங்கார வடிவேலன் அவர்கள்.

இன்றைக்கும் மக்களின் அன்றாட உரையாடல்களில், உவமை என்னும் அந்த அழகு இடம் பெறத்தான் செய்கின்றது. வெயில் 'நெருப்பாய்' எரிக்கிறது; கோயிலில் கூட்டம் 'வெள்ளமாய்' இருக்கிறது; அவர் 'யானை' போல அசைந்து வருகிறார்; சோறு 'மல்லிகைப்பூ'ப் போல இருந்தது. இப்படிப் பல உவமைகள் எடுத்துக் காட்டலாம்.


உவமை என்பது இலக்கணத்துடன் மட்டும் தொடர்பு கொண்டதல்ல; அது வாழ்க்கையோடும் தொடர்பு கொண்டது. ஆம்; அழகு எங்கிருந்தாலும் அது வாழ்க்கையுடன் அறிமுகம் செய்து கொள்ளத்தானே வேண்டும்.

*"விழிகளின் வசந்தங்கள் காதல் கனவுகள்;*
*மொழிகளின் வசந்தங்கள் உவமை*
*இலக்கியங்கள்".*

- இயந்திர வாழ்க்கையின் கோரப் பிடியிலிருந்து அவ்வப்போது விடுபட, கவிதைகளைப் பயிலுவோம்; உவமை அழகுகளைச் சுவைத்திடுவோம்; மனசுக்குள் மகிழ்ச்சி மழையினை இறக்குவோம்!

**கைத்தொழில் ஒன்றைக்**
**கற்றுக்கொள்;**
**கவலை உனக்கில்லை**
**ஒத்துக்கொள்;**
**எத்தொழில் எதுவும் தெரியாமல்**
**இருந்திடல் உனக்கே சரியாமோ?**
**– நாமக்கல் கவிஞர்**

# எதிர்கால உலக உணவுச் சூழல் அதில் கால்நடைகளின் பங்கு



எதிர்வரும் இருபது ஆண்டுகாலத்தில் உலகம் மக்களின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யுமா? வறுமையைக் குறைத்து, சுற்றுப்புறச் சூழலையும் பாதுகாத்துக் கொள்ள இயலுமா? இன்றைய மற்றும் எதிர்கால உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதில் கால்நடைகளின் பங்கு என்ன?

பாதுகாப்பான உணவுச் சூழல் (Food security) என்பது உணவுப் பொருள் உற்பத்தி அளவு அடிப்படையிலானது மட்டும் அல்ல; மக்கள் அனைவருக்கும் எட்டும் விலையில். தொலைவில் அது உள்ளதா? உற்பத்திச் செய்யப்படும் உணவுப் பொருட்கள் முறையாகப் பயன்படுத்திக் கொள்ளப்படுகின்றனவா என்பனவற்றையும் பொறுத்தே அது அமைகின்றது.

ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண்மை நிறுவன (FAO) அறிக்கையின்படி, உலகில் தற்போது சுமார் 83 கோடி மக்கள் அதாவது உலகின் வளரும் நாடுகளின் மக்கள் தொகையில் 19 சதவிகிதத்தினர் போதுமான உணவின்றி வாடுகின்றனர். இதில் குறிப்பிடத்தகுந்தது பள்ளி செல்லும் வயதிற்கும் குறைந்த வயதுடைய குழந்தைகளிடையே இதனால் ஏற்படும் பாதிப்பே ஆகும். இந்தப் பிஞ்சு வயதில் போதிய உணவின்றி அவர்கள் தவிப்பதால் ஏற்படும் உணவுச்சத்துப் பற்றாக்குறையின் காரணமாக, அவர்களின் உடல்நலமும், மனவளர்ச்சியும் நிரந்தரமாகப் பாதிக்கப்படுகிறது. குழந்தைகளுக்குப் போதிய உணவுச்சத்துக்கள் கிடைப்பதை உறுதி செய்யாத அரசு அந்நாட்டில் எதிர்கால விஞ்ஞானிகள், கலைஞர்கள், திறமையான அரசியல் தலைவர்கள், திறமான உழைப்பாளிகள் உருவாகும் வாய்ப்பைக் கெடுத்துக் கொள்கிறது.

உலக சுகாதார நிறுவனத்தின் ஆய்வின்படி, வளர்ந்து வரும் நாடுகளில் ஐந்து வயதிற்குட்பட்ட 17 கோடி குழந்தைகள் இவ்வாறு உணவுச் சத்துப் பற்றாக்குறையால் பாதிக்கப்படுகிறார்கள். அவற்றில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் இந்தியா உள்ளிட்ட தெற்கு ஆசிய நாடுகளில் உள்ளனர். உலகம் முழுவதும் உணவுச்சத்துப் பற்றாக்குறையால் ஆண்டுதோறும் 50 இலட்சம் குழந்தைகள் செத்து மடிகிறார்கள் என்பதும் குறிப்பிடத்தகுந்தது.

உணவுச்சத்துப் பற்றாக்குறை பாதிப்பில் முக்கியமானவை அன்றாடம் உணவில் தேவையான எரிசக்தி மற்றும் புரதச்சத்துப் பற்றாக்குறை ஆகும். போதுமான அளவில் இச்சத்துக்கள் உணவு மூலம் உட்கொள்ளப்பட்டாலும், வைட்டமின், தாதுச்சத்துக்கள் மற்றும் நுண்தாதுச் சத்துக்கள் பற்றாக்குறைகளாலும் கூட கடும் பாதிப்புகள் ஏற்படுகின்றன. உலகில் சுமார் 200 கோடி மக்கள் இரும்புச்சத்துக் குறைவால் ஏற்படும் இரத்த சோகை நோயால் பீடிக்கப்பட்டுள்ளார்கள்; வளர்ந்து வரும் நாடுகளில் 59 சதவிகிதம் கர்ப்பிணிப் பெண்களிடையே இத்தகைய பற்றாக்குறை காணப்படுகிறது. இதன் காரணமாகத் தாய் மற்றும் பிறந்த குழந்தைகளிடையே இறப்பும், குழந்தைகளின் உடல் வளர்ச்சி பாதிப்பும் ஏற்படுகின்றன. மேலும், சுமார் 160 கோடி மக்கள் அயோடின் சத்துப் பற்றாக்குறையால் ஏற்படும் 'காய்டர்' கழுத்து வீக்க நோய், மூளைப் பாதிப்பு மற்றும் மனவளர்ச்சி குன்றி காணப்படுகிறார்கள்.

உணவுச்சத்துப் பற்றாக்குறை காரணமாக மக்களின் உழைப்புத்திறன் பாதிக்கப்பட்டு வளரும் நாடுகளில் 5 சதவிகிதம் உற்பத்தி இழப்பு தென்படுகிறது. அரசின் குறைந்த செலவிலான நலத்திட்டங்கள் மூலமாக இதனை எளிதில் சரி செய்து விடலாம்.

## கால்நடைகளின் பங்கு

கடந்த 1970-ஆம் ஆண்டு முதல் வளரும் நாடுகளில் கால்நடை உற்பத்திப் பொருட்களை உட்கொள்ளும் அளவு அதிகரித்து வருகிறது. இந்நிலை கி.பி.2020-ஆம் ஆண்டு வரை நீடிக்குமென எதிர்நோக்கப்படுகிறது. வளரும் நாடுகளில்

**பெர்பின்ஸ்டிரப் – ஆண்டெர்சன் மற்றும் மார்க் ஜே. கோகென்**

1970-1993-ஆம் ஆண்டுகளுக்கிடையே, இறைச்சி உட்கொள்ளும் அளவு இருமடங்காக அதிகரித்துள்ளது. கால்நடைப் பொருட்கள் மூலம் கிடைக்கும் எரிசக்தி அளவு மொத்த அளவில் 6லிருந்து 15 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. இந்நாடுகளில் 1980-ஆம் ஆண்டு முதல் இறைச்சி மற்றும் பால் உட்கொள்ளும் அளவுகள் ஆண்டுக்கு முறையே 5 மற்றும் 3 சதவிகிதம் வீதம் வளர்ச்சி அடைந்து வந்துள்ளன.

ஆனால், இந்தியாவில் 1982-1993-ஆம் ஆண்டுகளுக்கிடையே இறைச்சி உட்கொள்ளும் அளவு ஆண்டுக்கு 3.1 சதவிகிதமே உயர்ந்துள்ளது; கால்நடைப் பொருட்கள் மூலமான எரிசக்தி அளவு 1973-93-ல் 5-லிருந்து 7 சதவிகிதமாக மட்டுமே அதிகரித்தது.

எங்கள் மையத்தின் ஆய்வுப்படி, 1993-2020-ஆம் ஆண்டுகளில், வளரும் நாடுகளில் இறைச்சி உட்கொள்ளும் அளவு ஆண்டிற்கு 2.8 சதவிகிதம் வீதமும், பால் உட்கொள்ளும் அளவு 3.3 சதவிகிதம் வீதமும் அதிகரிக்கும். இவை வளர்ச்சி அடைந்த நாடுகளில் முறையே 0.6 மற்றும் 0.2 சதவிகித அளவுகளிலேயே காணப்படும். உலக இறைச்சித் தேவையில், வளரும் நாடுகளின் பங்கு இக்கால கட்டத்தில் 47-லிருந்து 62 சதவிகிதமாக உயரும்.

இந்தியாவில் இறைச்சி உட்கொள்ளும் அளவு 2020-ஆம் ஆண்டு வரை ஆண்டிற்கு 2.9 சதவிகிதம் என்ற அளவில் அதிகரிக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தியாவில் 1993-ஆம் ஆண்டில் தனி நபருக்குக் கிடைத்த இறைச்சி, முட்டை மற்றும் பால் அளவுகள் பாகிஸ்தான் நாட்டில் கிடைப்பதில் பாதியாகவும், சைனாவுடன் ஒப்பிடுகையில் அதில் 13 சதவிகிதமாகவும் மட்டுமே இருந்தன. எதிர்வரும் 2020-ஆம் ஆண்டில், இந்தியாவில் இவற்றின் அளவுகள், பாகிஸ்தான் நாட்டின் 1993-ஆம் ஆண்டு கிடைத்த அளவுகளுக்கு இணையாகவும், அதே ஆண்டில் சைனாவில் கிடைத்த அளவுகளில் மூன்றில் ஒரு பங்காகவும் இருக்கும்.

வளரும் நாடுகளில் 1993-2020-ஆம் ஆண்டுகளுக்கிடையே தனி நபருக்குக் கிடைக்கும் இறைச்சி அளவு 38 சதவிகிதமும், பால் உற்பத்தி 54 சதவிகிதமும் உயரும். இந்நாடுகளில் கூடுதலாக உற்பத்தி செய்யக்கூடிய இறைச்சியில் கோழி இறைச்சியும், பன்றி இறைச்சியுமே பெரும்பங்கு வகிக்கும்.

இறைச்சி மற்றும் பால், முட்டை உற்பத்திப் பெருக்கத்திற்கேற்ப, கால்நடைத் தீவனத்திற்கெனக் கூடுதலான தானிய உற்பத்தி தேவைப்படும். வளரும் நாடுகளில் கால்நடை உற்பத்திப் பொருட்கள் மற்றும் மக்காச்சோளம் நீங்கலாகப் பிற தானியங்களின் அடிப்படை விலையில் வீழ்ச்சியே காணப்படும். ஆனால் இந்தியாவில் மாறிவரும் சுவை காரணமாக கால்நடை வகை உணவுப் பொருட்களின் விலையில் ஏற்றம் காணப்படும். இந்தியாவில் கூடுதல் இறைச்சி உற்பத்தி காரணமாகத் தானியங்களின் இறக்குமதி அடுத்த இருபது ஆண்டுகளில் 10 மடங்கு அதிகரிக்கக்கூடும். கி.பி. 2020-ல் இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளின் தானிய இறக்குமதி அளவு உலக நாடகளில் மொத்த இறக்குமதி அளவில் 51 சதவிகிதம் இருக்கும். இதனால் இந்தியாவில் அதிகரிக்கும் இறைச்சித் தேவையின் அளவிற்கேற்ப, தானியங்களின் தேவையும் அதிகரிக்கும். எனவே, 2020-ஆம் ஆண்டில் தானியங்களின் சர்வதேச விற்பனை விலை இந்தியாவில் இறைச்சித் தேவையைப் பொறுத்தே அமையும்.

மக்கள் தொகைப் பெருக்கம், வருவாய் அதிகரிப்பு மற்றும் நகர்ப்புற வளர்ச்சி காரணமாகக் கால்நடை உற்பத்திப் பொருட்களுக்கான தேவை அதிகரிக்கும் என்றாலும், இறைச்சி, பால் மற்றும் தீவன உற்பத்தி அளவில் ஏற்படும் குறைந்தபட்ச முன்னேற்றமே இத்தகையத் தேவையை ஈடுகட்டப் போதுமானதாக அமையும்.

வளரும் நாடுகளில் கால்நடைப் பொருட்களின் தேவை அதிகரிப்பதால் கிராமப்புற ஏழைகளின் வருவாய் பெருக வாய்ப்புள்ளது. நிலமற்ற ஏழைகளும் கூட கால்நடைகள் மூலம் வருவாய் பெறும் வாய்ப்புள்ளது. சிறு விவசாயிகளின் நிலத்திற்குத் தேவையான இயற்கை உரமும் கால்நடைகள் மூலம் கிடைக்கும். ஆனால், பெரும் எண்ணிக்கையிலான கால்நடைகளைக் கொண்ட பண்ணைகளால் கால்நடை உற்பத்தி அதிகரிக்குமேயானால், அது ஏழை மக்களைப் பாதிப்பதாக அமையலாம்.

வளரும் நாடுகளில் கால்நடை உணவுப் பொருட்கள் உட்கொள்ளப்படும் அளவு அதிகரிப்பதன் மூலம் எதிர்காலத்தில் வைட்டமின் ஏ, இரும்புச்சத்து மற்றும் புரதச்சத்துப்பற்றாக்குறை நிகழ்வுகள் குறைந்து விடும். உலக வர்த்தக ஒப்பந்தம் நிறைவேற்றப்படவுள்ள நிலையிலும் கூட. பல வளர்ச்சியடைந்த நாடுகள் இறைச்சி, பால் பொருட்கள் ஆகியவற்றை வளரும் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யத் தயங்குகின்றன. ஆனால், அவை உபரியாக உற்பத்தி செய்யும் உணவுப் பொருட்களின் ஏற்றுமதிக்கு மானிய உதவி அளிக்கின்றன. எனவே, உருகுவே ஒப்பந்தம் செயல்படுத்தப்படும் போதும், 1995-2005-க்கு இடையே சர்வதேசச் சந்தையில் தானியங்களின் விலையில் 2 சதவிகிதமும், கால்நடை உற்பத்திப் பொருட்களின் விலையில் 5 சதவிகிதமுமே அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

பொதுவாக வளரும் நாடுகளில் வேளாண்மைத் துறைக்கான அரசு நிதி ஒதுக்கீடு மொத்தச்

செலவினத்தில் 7.5 சதவிகிதமாக மட்டுமே உள்ளது. இது அதிகரிக்கப்பட வேண்டும். வேளாண் துறையிலும் தனியார் ஈடுபாட்டை அதிகரிக்கும்வண்ணம் கிராமப்புறக் கட்டமைப்பு வசதிகள், வேளாண் இடுபொருட்கள் மற்றும் உற்பத்திப் பொருள்களுக்கான வணிகச் சந்தைகள், வேளாண் மற்றும் கால்நடைத் துறையில் ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கம் போன்றவற்றிற்குக் கூடுதல் நிதி ஒதுக்கப்பட வேண்டும்.

நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கான முயற்சிகளில் சிறுவிவசாயிகளையும், குறைந்த வருவாய்ப் பிரிவினரையும் தீவிர பங்கேற்கச் செய்ய வேண்டும். குறைந்த எண்ணிக்கையில் கால்நடை வளர்ப்போரைக் கூட்டுறவு அல்லது ஒப்பந்த அடிப்படையில் இணைத்து, உற்பத்திப் பொருள்களுக்கான பதப்படுத்தும் வசதிகளை ஏற்பாடு செய்ய வேண்டும். அத்தகைய முயற்சிகளுக்குத் தேவையான தொழில்நுட்ப மற்றும் விற்பனை வசதிகளை அரசு உறுதி செய்ய வேண்டும். வளரும் நாடுகளில் வேளாண்மை மற்றும் கால்நடைத் துறைகளில் ஆராய்ச்சிப் பணிகளைத் தனியார் நிறுவனங்கள் மட்டுமே மேற்கொள்ளும் நிலை கி.பி. 2020-ஆம் ஆண்டு வரை தோன்ற வாய்ப்பில்லை; அரசே இதற்கான முயற்சிகளைத் தொடர வேண்டியிருக்கும். வேளாண் உற்பத்தி மதிப்பில் அரை சதவிகிதம் அல்லது ஒரு சதவிகிதத்திற்கும் குறைவாகவே இந்நாடுகள் ஆராய்ச்சித் திட்டங்களுக்காகச் செலவிடுகின்றன. இது குறைந்தபட்சம் இரண்டு சதவிகிதமாக உயர்த்தப்பட வேண்டும். பன்னாட்டு ஆராய்ச்சி நிறுவனங்களும் வளரும் நாடுகளில் வேளாண் மற்றும் கால்நடை ஆராய்ச்சித் திட்டங்களுக்கான நிதி உதவியைச் சற்றே அதிகரிப்பதன் மூலம் அவற்றின் உற்பத்தி அளவுகளில் பெரும் மாறுதலை ஏற்படுத்த இயலும்.

அனைத்து வளரும் நாடுகளிலும், தனிநபருக்கான இயற்கை வளங்களின் அளவு குறைந்து கொண்டே வருவதால், அவற்றின் மூலமான உற்பத்தித் திறனை அதிகரிக்கும் நோக்கத்திலேயே ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படவும், திட்டங்கள் தீட்டப்படவும் வேண்டும்.

இவ்வாறான திட்டங்களின் மூலமே பாதுகாப்பான உணவுச் சூழலை நோக்கி முன்னேற இயலும். இதற்கு அந்தந்த நாடுகளின் அரசாங்கங்களின் முயற்சிகளும், மேலும் மக்களின் ஒத்துழைப்பு, பன்னாட்டு நிறுவனங்களின் ஆதரவு ஆகியவையும் தேவை.

நன்றி : **கால்நடைக்கதிர்**

# வெற்றிலை பாக்கு

**- முனைவர் க.சௌந்தரபாண்டியன்**

**நம் பழைய சாத்திர நூற்களில் வெற்றிலை பாக்கு பற்றி கூறியுள்ளனர்.**

**வெற்றிலை, பாக்குப் போடலாம் என்று கூறியதோடு, அதற்கு விதியையும் அவர்கள் வகுத்துள்ளனர்.**

**வெற்றிலையில், அடிப்பகுதியும், நுனிப்பகுதியும் நீங்காதவை. எனவே இவற்றைக் கிள்ளிப் போட்டு விட்டுத்தான் பயன்படுத்தவேண்டும்.**

**சுண்ணாம்பு மடித்து வைத்திருந்த வெற்றிலை வெந்து போயிருக்கும். எனவே சுண்ணாம்பைச் சுருட்டி வைப்பதற்காக வைத்திருந்த வெற்றிலையைப் பயன்படுத்தக் கூடாது என்றனர்.**

**பாக்கை வாயில் போடுமுன், முதலில் வெற்றிலையைத்தான் மெல்ல வேண்டும். பிறகுதான் பாக்கைப் போடவேண்டும்.**

**சுண்ணாம்பை, வெற்றிலையின் உட்புறத்தில் தடவாது, வெளிப்பக்கத்தில் (நரம்புப்பக்கத்தில்) தடவ வேண்டும்.**

**காலை நேரமானால், பாக்கைச் சிறிது அதிகமாகப் போட்டுக்கொள்ளவேண்டும். பகற் பொழுதில், சுண்ணாம்பைச் சிறிது அதிகமாகப் போடவேண்டும். இரவில், வெற்றிலையின் அளவைக் கூட்டிக் கொள்ளவேண்டும்.**

**வெற்றிலை பாக்குப் போடுவதால், கிருமிகள் அழியும் என்றும், சளி போக்கப்படும் எனவும், மனமகிழ்ச்சி ஏற்படும் என்றும், பெண்களுடன் இன்ப உரையாடல் புரிவதற்கு ஏற்றதாகும் என்றும் பழங்காலத்தில் கருதினர்.**

**ஆனால், எப்போதும் பாக்கை வாயில் போடுவதால், பல நீங்குகள் நேரிடும் என்றும் சாத்திரங்களில் மொழிந்தனர்.**

**அடிக்கடி வெற்றிலை பாக்கு போட்டபடி இருந்தால் உடம்பு வலுக்குறையும் என்றும், விந்து உற்பத்தி தடைப்படும் என்றும் எழுதியுளர்.**

**இவ்வாறு வடமொழியில் எழுதப்பட்ட நமது சாத்திரங்கள் உரைக்கின்றன. எடுத்துக்காட்டாக, ஸ்மிருகி முக்தாபலம் என்ற ஒரு வடமொழி சாத்திர நூலைச் சுட்டலாம். வைத்தியநாத தீட்சிதர் என்பாரின் பழைய சாத்திர நூல் இது.**

**நூல் வடமொழியில் இருப்பினும், மேலே சொன்ன வெற்றிலைபாக்கு விதிமுறைகள் தமிழர்கள் முறைகளே எனல் வேண்டும். சிலப்பதிகாரத்தில் அடைக்காய் (கொலைக்.55) என்று வெற்றிலை பாக்கே கூறப்படுகிறது.**

**நம்மாழ்வாரின் திருவாய் மொழியிலும் வெற்றிலை பேசப்படுகிறது.**

***நன்றி* : கண்ணியம்**

# மேல்மருவத்தூர் மருத்துவமனை - ஆராய்ச்சி நிலையத் திறப்பு விழா

ஆதிபராசக்தி நிலையம் இது. எனக்கும் 'பராசக்தி'க்கும் உள்ள தொடர்பு நீங்கள் எல்லாம் அறிந்த ஒன்றேயாகும். நீண்ட காலமாக நம்முடைய அடிகளாரை நான் மிக நன்றாக அறிவேன். அவர்கள் இங்கே ஆற்றி வருகிற தொண்டும், அருள் பணியும் என்னை மிகவும் கவர்ந்தவைகளாகும். அத்தகைய தொண்டும், தூய பணியும்தான் இந்த நிகழ்ச்சியை நான் நடத்தி வைக்க வேண்டுமென்று இந்த நிறுவனத்தின் சார்பாக அவர்கள் கேட்டபோது - அட்டியின்றி நான் உடனடியாக ஒத்துக்கொண்டு இந்த விழாவிலே கலந்துகொண்டு அவர்களின் அரும் முயற்சியினால் இங்கே எழுப்பப்பட்டுள்ள இந்த மருத்துவமனைக் கட்டடத்தை திறந்த வைக்கின்ற அந்த வாய்ப்பினை நான் பெற்றிருக்கிறேன். இது எனக்குக் கிடைத்த வாய்ப்பு என்று சொல்வதைவிட - மனித நேயத்தோடு செய்யப்பட்டுள்ள இந்தக் காரியத்தின் தொடக்க விழாவில் நான் கலந்து கொள்வது "நான் பெற்ற பேறு" என்று சொல்வதுதான் மிகமிகப் பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன்.




இந்த நிகழ்ச்சியில் கார்கில் போராட்டத்தில் வீரமரணமடைந்த தமிழ்நாட்டுப் போர் வீரர்களுடைய குடும்பத்தைப் பராமரிக்கின்ற பொறுப்பை இந்த மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி நிறுவனம் ஏற்றுக்கொள்கிறது என்ற இந்தச் செய்தி வீரத்திற்கு மாத்திரமல்ல - நாட்டுப் பற்றிற்கு - நாட்டின் மேன்மைக்கு - நாட்டின் பாதுகாப்பிற்கு - தங்களுடைய உயிரைத் திரணமாக மதித்து - தியாகம் செய்த தீரர்களின்

குடும்பத்திற்கு இந்த நிறுவனம் காட்டுகின்ற நன்றிக்கடன் என்று சொன்னால் அது மிகையாகாது.

அது மாத்திரமல்லாமல் கார்கில் போர் வீரர்களுடைய குடும்ப நிதிக்காகத் திரட்டப்படுகின்ற நிதிக்கு அடிகளார் அவர்களுடைய கரங்களால் ஐந்து இலட்சம் ரூபாயும், திருமதி பங்காரு அடிகளார் அவர்களுடைய கரங்களால் ஒரு இலட்சம் ரூபாயும் வழங்கப்பட்டிருக்கின்றது. அதற்கும் நான் என்னுடைய நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

### கார்கில் நிவாரண நிதி ரூ.45 கோடியை தாண்டியுள்ளது

கார்கில் போராட்ட வீரர்கள் நிதி கடந்த வாரம் தமிழக அரசின் சார்பிலே அறிவித்தவாறு நாற்பது கோடி ரூபாயைத் தாண்டியிருந்தது. நீங்கள் அவசரப்பட்டு கை தட்டக்கூடாது. இன்றைய தினம் அந்தத் தொகை 45 கோடி ரூபாயைத் தாண்டியிருக்கின்றது என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். இந்தியாவிலேயே நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்காகப் பல தியாகச் செம்மல்களைத் தந்த பகுதி தமிழகம். எத்தனை எத்தனை வீரர்கள் பல்லாண்டு காலம் சிறைச்சாலையிலே நாட்டு விடுதலைப் போராட்டத்தின் போது அடைக்கப்பட்டார்கள் என்பதும், செக்கிழுத்த சிதம்பரனாருடைய வரலாறும், திருப்பூர் குமரன் கொடி காப்பதற்காக தன்னுடைய இன்னுயிரையே வழங்கிய சரித்திரமும், உத்தமர் காந்தியடிகளோடு தென்னாப்பிரிக் காவிலே நடைபெற்ற இனவெறி எதிர்ப்புப் போராட்டத்திலே கலந்து கொண்டு இன்னுயிர் ஈந்த தில்லையாடி வள்ளியம்மாள் இந்தத் தென்னகத்தைச் சேர்ந்தவர். குறிப்பாகத் தமிழகத்தினைச் சேர்ந்தவர். இன்னும் சிறப்பாக நான் பிறந்த தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்பதை எண்ணுகின்ற நேரத்தில் எல்லாவகையிலும் நம்முடைய தமிழ் நிலம் இந்திய நாட்டின் விடுதலைக்காக - அடிமைத்தனத்தை வீழ்த்துவதற்காகத் தியாகம் செய்த நிலங்களோடு போட்டியிடுகின்ற நிலமாகும். அத்தகைய வீர மண்ணில் இன்றைக்கு ஈர நெஞ்சத்தோடு ஏழையெளியவர்களுக்கு, பாட்டாளி மக்களுக்கு, பிற்படுத்தப் பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு - தாழ்த்தப்பட்ட மக்களுக்கு - நலிவுற்ற மக்களுக்கு நன்மைகள் செய்ய வேண்டுமென்ற பரந்த உள்ளத்தோடு தொடங்கப்பட்டு, பல ஆண்டுக்காலமாக நடைபெற்று வருகின்ற நிறுவனம்தான் இந்த ஆதி பராசக்தி நிறுவனமாகும்.

இங்கே வரவேற்புரையாற்றிய அம்மையார் மிக அழகாக அடிகளார் ஏன் இந்த நிறுவனத்தை நடத்திக் கொண்டிருக்கிறார் என்பதையும், இதனுடைய தாத்பரியம் என்ன என்பதையும், இதனுடைய அடிப்படை என்ன என்பதையும் விரிவாக எடுத்துச் சொன்னார். மனிதன் மதத்தை உருவாக்குகிறான், மதம் மனிதனை உருவாக்கவில்லை, இந்த அடிப்படை அம்சம் இந்த நிறுவனத்தின் குறிக்கோள், கொள்கை, கோட்பாடு என்பதை எடுத்துக் கூறினார்கள். இந்த உண்மையை மனித வர்க்கத்திலே இருக்கின்ற எல்லா பிரிவினரும் உணர்வார்களேயானால் மதப் பூசலுக்கே இடம் இல்லை. சாதிச் சண்டைக்கே இடம் இல்லை. இந்த அடிப்படை உண்மையை உணரச் செய்ய வேண்டும் என்பதற்காகத் தான் இந்த நிறுவனம் பல ஆண்டுக் காலமாக தொண்டாற்றி வருகிறது என்பதை நான் மிக மிக நன்றாக அறிவேன்.

### அரசுக்கு ஈடாக தொண்டாற்றுகின்ற நிறுவனம்

அது மாத்திரமல்ல, பெண்களுக்குச் சம உரிமை இங்கே வழங்கப்படுகிறது என்றும் வரவேற்புரையிலே அம்மையார் குறிப்பிட் டிருக்கிறார். இதை நான் வரவேற்பதற்குக் காரணம்- இந்தச் செய்தி கேட்டு நான் மகிழ்வதற்குக் காரணம்- இன்றைக்கு நடைபெறுகின்ற இந்த அரசு மாத்திரமல்ல, ஈடு இணையற்ற தலைவர் பேரறிஞர் அண்ணா, அந்த அண்ணாவை எங்களுக்குத் தந்த ஈரோட்டு வள்ளல் தந்தை பெரியார், இவர்கள் எல்லாம் பாடுபட்டது, பணியாற்றியது பெண்களின் சமத்துவத்திற்காகத்தான். அதனை இன்றைக்குச் செயல்படுத்திக் காட்டுகின்ற அரசாக இந்த அரசு இருக்கின்றது. அதற்கீடாக அதனைச் செயற்படுத்திக் காட்டுகின்ற ஒரு நிறுவனமாக இந்த ஆதிபராசக்தி நிறுவனம் இன்றைக்கு இருக்கின்றது என்பதை எண்ணும் நேரத்தில் எங்களுக்குத் துணையாகத் தொண்டாற்றுகின்ற நிறுவனத்தை நான் வாழ்த்தாமல், நிறுவனத்தின் செயற்பாடுகளை வரவேற்காமல் இருக்க முடியாது என்பதற்காகத்தான் இந்த நிகழ்ச்சியிலே நான் கலந்து கொண்டு உங்களையெல்லாம் காணுகின்ற இனிய சந்தர்ப்பத்தைப் பெற்றிருக்கிறேன்.

இந்த நல்ல விழாவிலே நான் திறந்து வைத்திருக்கின்ற இந்த மருத்துவக் கூடத்தின் கலை அமைப்பைப் பற்றி அவர்கள் தந்துள்ள குறிப்பைப் படித்துப் பார்த்தேன். அதிலே ஒரு மையத்திலிருந்து வெளிப்படும் ஒளிக்கதிர்கள் போல ஐந்து கட்டடங்கள் அமையும். இவை ஐந்து (Wings) சிறகுகள் என்று அழைக்கப்படும். இயற்கையின் கூறுகளாகிய நீர், நிலம், தீ, காற்று, ஆகாயம் இந்த ஐந்தையும் குறிக்கும் வகையிலே இந்தக் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது. இந்தச் சிறப்பைப் பாராட்டி, போற்றிப் புகழ்ந்து உங்களுக்கெல்லாம் வணக்கம் கூறி விடை பெறுகிறேன்.

*– மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிலையத்தை 11–8–99 அன்று திறந்துவைத்து முதலமைச்சர் கலைஞர் ஆற்றிய உரையிலிருந்து..* ★

# அருங்காட்சியகமாகும் சிறைச்சாலை

வீரபாண்டிய கட்டபொம்மனின் தம்பி ஊமைத்துரை சிறை வைக்கப்பட்ட இடம் அமைச்சர் தமிழ்குடிமகன் முயற்சியால் அருங்காட்சியகமாக மாற்ற தமிழக அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

ஆங்கிலேயருக்கு சிம்மசொப்பனமாக விளங்கியவர் வீரபாண்டிய கட்டபொம்மன் ஆங்கிலேயரை எதிர்க்கும் போராட்டம் தொடங்கியது பாஞ்சாலங்குறிச்சி என்று சொன்னால் மிகையாகாது.

ஆங்கிலேயரை தீவிரமாக எதிர்த்த வீரபாண்டிய கட்டபொம்மனை ஆங்கிலேயர் தங்களது குள்ளநரி தந்திரத்தை பயன்படுத்தி நயவஞ்சமாக பிடித்து 1799ஆம் ஆண்டு கயத்தாறில் தூக்கிவிட்டனர்.

கட்டபொம்மனுக்கு எல்லாவிதத்திலும் உதவியாக இருந்தவர் அவரது தம்பி ஊமைத்துரை. அவரையும் ஆங்கிலேயர் பிடித்து பாளையங்கோட்டை சிறையில் அடைத்தனர்.

பாளையங்கோட்டையானது (சிறை) 17ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. சதுரமான கருங்கல்லால் கட்டப்பட்ட இந்த பாளையங்கோட்டை (சிறை)யின் நீளம் 2700 அடி. அகலம் 2520 அடி. உயரம் 15 அடியாகும்.

அதில் எதிரிகளை வேவு பார்க்க 52 கொத்தளங்களும் அமைக்கப்பட்டு இருந்தன. கோட்டையின் கிழக்கு வாசல் திருச்செந்தூர் வாசல் என்றும், தெற்கு வாசலுக்கு திருவனந்தபுரம் வாசல் என்றும் மேற்கு வாசலுக்கு திருநெல்வேலி வாசல் என்றும் வடக்கு வாசலுக்கு மதுரை வாசல் என்றும் பெயர்.

இந்த நுழைவாயில்கள் இன்னும் அழிந்த நிலையில் காணப்படுகின்றன. இந்த கோட்டைக்குள் பலத்த பாதுகாப்புடன் கூடிய சிறை ஒன்றும் அமைக்கப்பட்டது. அந்த சிறை தற்போது பாளையங்கோட்டை மேல்நிலை நீர்தேக்க தொட்டி அருகே அமைந்துள்ளது. முற்றிலும் கருங்கல்லினால் ஆன இச்சிறையின் நுழைவாயிலே நம்மை பிரமிக்க வைக்கிறது. சிறிய நுழைவாயிலில் நுழைந்து சென்றால் அடுத்தாக 2 அறைகள் இருக்கின்றன.

இதில் ஒன்றில்தான் கட்டபொம்மனை தூக்கிலிட்ட பிறகு அவரது தம்பி ஊமைத்துரையை வெள்ளையர்கள் சிறையில் அடைத்தனர்.

இந்நிலையில் பாஞ்சாலங்குறிச்சியை சேர்ந்த பாளையகாரர்கள். தந்திரமாக வந்து ஒருநாள் ஊமைத்துரை அடைக்கப்பட்டிருந்த சிறையை உடைத்து அவரை மீட்டு சென்றனர். இந்த சம்பவம் ஆங்கிலேயரை பிரமிக்க வைத்தது.

இந்தியாவில் எந்த பகுதியிலும் இதுபோன்ற சம்பவம் ஆங்கிலேயரின் ஆட்சி காலத்தில் நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இந்தியா விடுதலை அடைந்த பின்பு இந்த சிறை எவ்வித பயனும் இல்லாமல் இருந்துவந்தது.

இந்த நிலையில் ஊமைத்துரையை அடைக்கப்பட்ட இடத்தில் அருங்காட்சியகம் அமைத்தால் 'புராதன நினைவு இல்லத்தில் அருங்காட்சியகம்' இருக்கும் என்று அருங்காட்சியக அதிகாரிகள் அமைச்சர் தமிழ் குடிமகனுக்கு வேண்டுகோள் விடுத்தனர்.

இதை ஏற்றுக்கொண்ட தமிழ் பண்பாட்டுத்துறை அமைச்சர் தமிழ்குடிமகனின் தீவிர முயற்சியால் அந்த சிறைச்சாலையை பழுதுபார்க்க ரூ.5 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு சீரமைக்கும் பணி முடிந்துள்ளது. மின் இணைப்பும் கொடுக்கப்பட்டது.

பாளையங்கோட்டை அரசு அருங்காட்சியகம் 1992இல் தொடங்கப்பட்டு வாடகை கட்டடத்திலே இயங்கி வந்தது. இனிமேல் ஊமைத்துரை சிறை வைக்கப்பட்ட கட்டடத்திற்கு மாற்றப் பட இருக்கிறது. இது தமிழ் நாட்டில் 17வது அருங்காட்சியகமாகும். இங்கு நெல்லை, குமரி, தூத்துக்குடி மாவட்டத்தில் இருந்து கண்டு பிடிக்கப்பட்ட புதை பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

முதுமக்கள் தாழி, நடுகல், குதில், டைனோசர் மாதிரி, கட்டபொம்மன் கால வாள் உள்ளிட்ட பல புராதன பொருட்கள் இங்கு உள்ளன.

நம் நாட்டின் சுதந்திர போராட்ட நினைவு சின்னமான அந்த இடத்தில் அரசு அருங்காட்சியகம் அமைக்க உத்தரவிட்ட கலைஞர் அரசை பலரும் பாராட்டுகின்றனர்.

# இந்தியாவின் மீன் பொருள் ஏற்றுமதி

நமது நாட்டின் இயற்கை வளவாய்ப்புகளைப் பயன்படுத்தி, பல்வேறு வகையான பொருட்கள் பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இத்தகைய ஏற்றுமதி வணிகத்தால், பிற நாடுகளுடன் தேவையானதோர் இணையற்ற தொடர்பு ஏற்படுவதோடு, மதிப்புமிக்க அந்நியச் செலவாணியையும் நம் நாடு பெற இயலுகின்றது.

முப்பக்கமும் கடல் உள்ளதால் கடல்வளம் கொண்ட நம்நாடு. உலக நாடுகளுடன் மீன் வணிகத்தால் இணைக்கப்பட்டுள்ளது இயற்கையே! நமது நாட்டின் மீன் ஏற்றுமதி வாணிபம், 1953-ஆம் ஆண்டு துவங்கியது. கடந்த 46 வருடங்களில், கடல் மீன் பொருட்களின் ஏற்றுமதி வாணிபம், வியக்கத்தக்க அளவுக்கு வளர்ச்சி அடைந்துள்ளது.

இந்தியாவின் மீன் பொருள் ஏற்றுமதி, இன்று ரூ.4500 கோடியைத் தாண்டியுள்ளது. நமக்கிருக்கும் இயற்கை மீன் வளத்திற்கு அது நிகரானதா என்று ஆராய்ந்து அறிவது அவசியம். நமது வளமான கடல்களையும், அவற்றின் செழிப்பையும், அவற்றிலிருக்கும் ஏராளமான மீனினங்களையும் மனக்கண் முன்னிருத்திக் காண்கையில், நமது வளர்ச்சி, நம் வளத்திற்கும் வாய்ப்புக்கும் நிகரானது அல்ல என்பதே உண்மையாகும். ஏற்றுமதித் தொழில் மேலும் சிறக்க, வணிக நுட்பங்களை, மீன்வள அறிவியல் சிறக்கப் பின்பற்றுவது அவசியம். மேலும், இத்தோடு தொடர்புடைய பல காரியங்களிலும் கவனமுடன் செயல்பட வேண்டும்.

நமது நாட்டில், 402 மீன்பதனத் தொழிற்சாலைகள் தற்பொழுது செயல்பட்டு வருகின்றன. ஏறத்தாழ 625 மீன்பொருள் ஏற்றுமதியாளர்களும் உள்ளனர். மீன்பதனத் தொழிலகங்களில், கேரள மாநிலம் நமது நாட்டில் முதலிடம் வகிக்கிறது. (124 தொழிலகங்கள்). தமிழகம் 48 தொழிலகங்களைப் பெற்று நான்காவது இடத்தில் உள்ளது. தூத்துக்குடியிலுள்ள மீன்பதனத் தொழிலகங்களின் மொத்த உறை பதனத்திறன், நாளொன்றுக்கு 7,500 மெட்ரிக் டன்கள் ஆகும். ஆனால், தற்பொழுது உறைபதனம் செய்யப்படும் மீன்களோ மொத்தம் 1050 மெட்ரிக் டன்கள். இது, மொத்த உற்பத்தித் திறனில் 14 விழுக்காடு மட்டுமே. இக்குறையை நிறை செய்ய, மீன் பிடிப்பை முறை செய்ய வேண்டும்; குறைகளைக் களைய வேண்டும். அண்மைக் கடலில் மட்டும் மீன்பிடிப்பதைவிட ஆழ்கடலிலும் மீன்பிடிப்பதைத் துவங்க வேண்டும். மேலும், மீன் பிடிப்பு முயற்சிகளை நாம் மேம்படுத்திய பின்னும் மீன் பிடிப்பு அதிகரிக்காததால், ஏற்றுமதிக்கான மீனினங்களைப் பெறுவதற்குக் கடலிலிருந்து அவற்றைப் பிடிப்பதை மட்டுமே நம்பியிராமல், அவற்றை வளர்ப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அது முற்றிலும் சாத்தியமே; அதற்கான வழிசொல்ல மத்திய கடல்வள ஆராய்ச்சி நிறுவனம் காத்திருக்கிறது. மேலும், இதற்கென மீன்வளக் கல்லூரிகளும் நம் நாட்டில் உள்ளன. இவற்றைப் பயன்படுத்தித் தொழில் முனைவோர் கடல் மீனினங்களின் உற்பத்திப் பணியில் இறங்க வேண்டும். இவற்றை, விரும்பி வரும் மீன் வளர்ப்பாளர்கள் பயன்படுத்தினால் (அதற்கான திட்டங்கள் மூலம்), ஏற்றுமதிக்கான மீனினங்களின் உற்பத்தி, தானாக உயரும். அவ்வாறானால் மீன்பதனத் தொழிற்கூடங்கள், முழு அளவில் செயல்படும். மேலும், உற்பத்தி உயர்வதால் மூலப்பொருட்கள் மிகுந்து கிடைப்பதால், உறைபதனத் தொழில் நிறுவனங்களில், முழுமையான அளவு வேலை நடக்கும்.

இந்தியாவில் மீன் பொருட்களின் ஏற்றுமதியில் முக்கிய பங்கேற்பவை, உறைபதனம் செய்யப்பட்ட இறால் (69.97%), கணவாய் (16.72%) மற்றும் பலவகை மீன்கள் (7.44%) ஆகும். மற்றவை, உறைபதனம் செய்யப்பட்ட மீன் பொருட்கள் (3.44%) ஆகும். இவற்றுள், உலர்மீன் (மீன் கருவாடு), மீன் உபரிப் பொருட்கள், உயிருள்ள சிங்கிறால்கள், நண்டுகள் போன்றவை அடங்கும்.

நமது நாட்டின் மீன்வளப் பொருட்கள், முக்கியமாக ஜப்பானுக்கும் (18%), மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் (31.58%), அமெரிக்கா (8.2%) மற்றும் மத்திய கிழக்காசிய நாடுகளுக்கும் (3.34%) ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

தற்பொழுது கடல் மீன் பொருட்களின் ஏற்றுமதி வாணிபத்தில், ஏக்கம் தரும்படியானதோர் தேக்கநிலை ஏற்பட்டுள்ளது. இதற்கான காரணங்களுள் முதன்மையானது, போதிய அடிப்படை வசதிகள் இல்லாமையாகும். இதனைத் தொடர்ந்து, தரம் பேணாமை, கடலோர இறால் வளர்ப்புக்கான இடையூறு மற்றும் போதிய கடன்வசதி இல்லாமை போன்றவையும் ஏற்றுமதி வளர்ச்சிக்குத் தடையாக உள்ளன. இத்தேக்க நிலையைப் போக்க, நாம் கீழ்க்கண்ட அணுகுமுறைகளை மேற்கொள்ளுதல் அவசியம்:

★ நமது கடற்பொருள் ஏற்றுமதித் தொழில், சில குறிப்பிட்ட கடல்வாழ் மீன் இனங்களையே சார்ந்துள்ளது. இந்நிலையை மாற்ற வேண்டும். இதுவரை அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்படாத மீனின வகைகளுள் முக்கியமான அலங்கார மீன்கள், ஆளி, மட்டி போன்றவற்றையும் மீன் உபரிப் பொருட்கள், மதிப்பேற்றம் செய்யப்பட்ட

– வெ.சுந்தரராஜ்

மீன் பொருட்கள் மற்றும் இதர கடற்பொருட்களையும் ஏற்றுமதி செய்வதற்கு முற்பட வேண்டும். அதற்கான முயற்சிகளை மேற்கொண்டு, தொடர்புடையோரை ஊக்கப்படுத்த வேண்டும். கடலின் வள வாய்ப்புகளை அதிகம் அறிந்த கடல்வாழ் உயிரின அறிவியலார், அவைபற்றித் தெரியாத ஏற்றுமதியாளர்களுக்குத் தெரிவிக்க வேண்டும். அறிவியல் அறிந்தோரைப் பெரிதும் பயன்படுத்த வேண்டும். நமது கடல்வளப் பொருட்களை இன்னும் பல நாடுகளுக்கு அறிமுகம் செய்து, வணிக வாய்ப்புகளை விரிவாக்கிக் கொள்ள வேண்டும்.

★ நம் நாட்டில் முறையான பதனமின்மையால், மீன்கள் கெட்டுப் போவதைத் தவிர்க்க, அறிவியல் முறையிலான சரியான பதன முறைகளைப் பின்பற்றி மீன் ஏற்றுமதியை மேம்படுத்தலாம்.

★ ஏற்றுமதியிலுள்ள முக்கியமான குறை, தரமுடன் இருக்கும் பொழுதே, பிடிக்கப்பட்ட மீன்கள் மீன்பதனத் தொழிலகங்களுக்குக் கொண்டுவரப் படாமை ஆகும். மீன்கள் எளிதிலும், விரைவிலும் கெட்டுவிடக் கூடியவை. எனவே, அவை புதுமை மங்காத நிலையில் இருக்கும்போதே பனிக் கட்டியால் பக்குவம் செய்துவிட வேண்டும். மேலும், மீன் பிடித்தளங்கள், மீன்பிடித்துறை முகங்கள் போன்றவற்றில் சுத்தமும் சுகாதாரமுமான சூழ்நிலையை உருவாக்க வேண்டும். அதற்கெனத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் வழங்க வேண்டும். நித்தமும் சுத்தமாகவும், சூழல் சிதைவின்றி சுகாதாரமான முறையிலும் மீன்களைக் கையாளுவதின் அவசியத்தை, விழிப்புணர்வு முகாம்கள் மூலம் மீனவர்களுக்கு வலியுறுத்தி, மீன்களின் தரம்காத்து மேம்படுத்தி, ஏற்றுமதி வாய்ப்பை நம்பிக்கை முனைக்குக் கொண்டு செல்லலாம்.

★ இந்தியாவில் மீன் ஏற்றுமதியில் மிக முக்கியமானவை கடல் இறால்களாகும். 1998-ஆம் ஆண்டு வரை, இறால் பண்ணைகளில் கிடைத்த அதிக உற்பத்தியின் காரணமாக, ஏற்றுமதியில் முன்னேற்றம் ஏற்பட்டது. ஆனால் அதன் பின்னர் தொடர்ந்து வைரஸ் நோயின் தாக்குதலாலும், வேறு சில பிரச்சினைகளாலும், சீரான இத்தொழில் தற்போது தளர்ந்த நிலையிலுள்ளது. குறிப்பாக, தூத்துக்குடி முதல் மண்டபம் வரையான கடலோர பகுதி இறால் வளர்ப்புக்கு இணையற்றதாகும். இங்குதான், உலகிலேயே அதிகமான இரண்டாவது உற்பத்தித் திறன் எட்டப்பட்டுள்ளது. இறால் வளர்ப்பு நுட்பத்தில், உற்பத்தித் திறத்தால் நாம் இணையற்று நிற்கிறோம். ஒரு கிலோ இறாலின் இந்திய விலை ரூ.200 முதல் 400 வரை ஆகும். இறால் வளர்ப்புத் தொழிலை ஊக்கப்படுத்தி வளங்குன்றாமல் இறால் வளர்க்கலாம். அதற்கான நுட்பங்கள் உள்ளன. அறிவியலைப் பின்பற்றிச் செய்யப்பட்டால், இறால் உற்பத்தியை மேலும் உயர்த்தலாம். அதனால் ஏற்றுமதியும் இணையற்று வளர்ச்சியடையும்.

★ மீன் ஏற்றுமதித் தொழில், பண முதலீடு அதிகம் தேவையான ஒன்றாகும். ஆகையால், இத்தொழிலுக்குத் தேவையான, பெருமளவான கடன் வசதியை, நிதி நிறுவனங்கள் வழங்க வேண்டும். நிதித் தேவையை நியாயமான முறையில் நிறைவு செய்துகொள்ள, தொடர்புடைய பிற நாட்டு நிறுவனங்களுடன் இழப்பற்ற ஒப்பந்தங்கள் செய்து, இத்தொழில் தழைக்க வழி காணலாம். நிதி நெருக்கடி என்ற காரணத்தால், மீன்பதனத் தொழில் பாதிக்கப்படும் நிலை முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டும். நமது நாட்டின் கடற்பொருள் ஏற்றுமதிக்கெனக் கடற்பொருள் ஏற்றுமதி வளர்ச்சி அதிகாரக்குழு (ஙஹசுகூஙூக் டசுச்கூஷஞிஷஞ்கூ உஙூசிச்சுஞ் ஈக்ஞீக்ஙிச்சிஙுக்ஙூஞ் அஞிஞ்குச்சுகூஞ்ட்) ஒன்று, கொச்சியில் செயல்படுகின்றது. ஏற்றுமதியாளர்கள் இத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டு, இணைந்து செயல்பட்டு மீன்களின் ஏற்றுமதியை மேம்படுத்தலாம்.

மீன் உறைபதனத் தொழில் மற்றும் கடற்பொருள் ஏற்றுமதியால் எண்ணற்ற நபர்களுக்கு வேலை வாய்ப்புகள் பிறக்கின்றன. குறிப்பாக மகளிருக்குப் பாதுகாப்பான நிலையில் பணி செய்ய வழிபிறக்கின்றது. கற்றோரும் மற்றோரும் வேலைவாய்ப்பு பெறுவது கவனிக்கத்தக்கது. இது குறித்து மேலும் அறிவுரை பெறவும்; பயிற்சிகள் பெறவும் மீன்வள விரிவாக்கக் கல்வி இயக்குநர், மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தூத்துக்குடி என்ற முகவரியை அணுகவும்.

*- நன்றி : கால்நடைக்கதிர்*

## இன்னுமோர் சமத்துவபுரம்

*எல்லைக் கோட்டைத் தாண்டி வந்த*
*எதிரிகளை வெளியேற்ற*
*வீரச்சமர் புரிந்து வீழ்ந்து மடிந்திட்ட*
*மறவர்தம் பட்டியலிது*
*நடராசன், பாஸ்கரன், இதயதுல்லா,*
*ஜெயவேலு, பிலிப் மாத்யூஸ்,*
*அப்தல் சத்தார்,காஷ்மீர் சிங் என*
*நானூறுக்கும் மேற்பட்டோர் பட்டியலில்!*
*சாதிப் பாகுபாடில்லை! சமய வேறுபாடில்லை!*
*எக்காளமிட்ட எதிரிநாட்டவரை*
*இணைந்து நின்று இந்திய மக்கள்*
*விரட்டியடித்தனர்! வெற்றிக் கொடி நாட்டினர்!*
*கார்கில் எல்லையில் சிந்திய இரத்தத்தால்*
*அமைக்கப்பட்டது அங்குமோர் சமத்துவபுரம்!*

**– இரா. பிரபாகரன்**

# காற்றுக்கு வேலி

அண்மைக்காலமாக வாகனங்களால் உருவாகும் சூழல்கேடு தொடர்பான செய்திகள் அதிகளவில் வெளிவரத் தொடங்கி உள்ளன. டெல்லியிலிருந்து செயல்படும் அறிவியல், சுற்றுச்சூழல் மையமானது நீண்டகாலமாகவே காற்று மாசுபாடு குறித்து எச்சரித்துக்கொண்டே இருக்கிறது. ஏதோ மாசுபாடு என்ற அளவில்தான் அது கவனத்தை ஈர்ப்பதாக இருந்தது.

ஆனால், அண்மையில் கார்களால் ஏற்படும் மாசுபாடு அதனால் நேரும் சூழல் கேடுகள் குறித்து வெளிவரும் செய்திகள் அதிர்ச்சியூட்டுபவையாகவும் கவலை தருவனவாகவும் உள்ளன. இந்தியாவின் பெருநகரங்களான டெல்லி, மும்பை, கல்கத்தா, சென்னை ஆகியவை காற்று மாசுபாட்டால் பாதிக்கப்படுவது குறித்து அறியவரும் செய்திகள் (குறிப்பாக : தலைநகர் டெல்லி) இவை 'மாபெரும்' நகரங்களா அல்லது 'மரண' நகரங்களா என்ற ஐயப்பாட்டை எழுப்புபவையாக உள்ளன.

நகரங்களில் காணப்படும் போக்குவரத்து நெரிசல் என்பது புன்னகை மன்னர்களையும் சிடுமூஞ்சியாக்கும் மகா ஆற்றல் மிக்கது. புகைக்கடலில் வாகனங்கள் நீந்திச் செல்வதுபோல காணப்படும் நிலை. குறைந்தபட்சம் முகமூடித் திருடர்களைப் போல கைக்குட்டை யையாவது மூக்கில் கட்டிக் கொண்டால்தான் மூச்சை உள்ளிழுக்கவே முடியும்.

அதிகரித்துவரும் போக்குவரத்து நெரிசலானது. கார்கள் வசதியானவைதானா என்று வினா எழுப்புபவையாக உள்ளன. அலுவலக நேரம் / நெருக்கடி நேரங்களில் சில கி.மீ. தொலைவு செல்லவே பல மணி நேரங்களாகும் நிலை உலகின் பல்வேறு நகரங்களில் காணப்படுகிறது.

இவ்வாறு வாகனங்கள் அதிகரிப்பதற்குப் பல காரணங்கள் உள்ளன. கார் வைத்திருப்பது பலருக்கும் கௌரவத்தின் அடையாளமாக இருப்பதால், நடுத்தர வர்க்கம் எப்படியாவது வாகனங்களை வாங்கிட முயல்கிறது. முன்பு, எரிபொருள் விலை அதிகம் என்பதால் தயங்கியவர்கள் கூட டீசல் கார்களால் கவரப்பட்டுள்ளனர். அதோடு பல நிறுவனங்கள் கார்களைத் தவனை முறையில் விற்கவும் தொடங்கியுள்ளன.

இப்போது இந்த டீசல் வாகனங்களில் இருந்து வெளிப்படும் மாசு பெரும் ஆபத்தாக எழுந்துள்ளது. குறிப்பாக டெல்லியில் பெரும் உயிர்க்கொல்லி என்று சொல்லும் அளவுக்கு டீசல் வாகனங்களின் மாசுபாடு உள்ளது. இன்றைய நிலையில் டெல்லியானது உலகிலுள்ள மிக மோசமாக மாசுபட்டுள்ள 5 நகரங்களில் ஒன்று என்ற நிலையை அடைந்துள்ளது. டெல்லியில் சுமார் 40 இலட்சம் வாகனங்கள் உள்ளன. இது பிற 3 பெரு நகரங்களான சென்னை, மும்பை, கல்கத்தா ஆகியவற்றில் ஓடும் வாகனங்களின் ஒட்டுமொத்த எண்ணிக்கையைவிட அதிகமாகும்


டெல்லியின் காற்றில் மட்டும் வாகனங்களால் நாள்தோறும் 2,000 டன் அளவுக்கு மாசு சேருகிறது. இதில் கார்பன்மோனாக்சைடின் அளவு 810 டன் ஆகும். ஹைட்ரோ கார்பன் 310 டன், நைட்ரஜன் ஆக்சைடு 160 டன், மிதக்கும் நுண்துகள்கள் 15 டன், கந்தக டை ஆக்சைடு 12 டன் என பிற நச்சு மாசுக்களும் நாள்தோறும் வெளியாகின்றன என்று இது தொடர்பாக நடத்தப்பட்ட ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இந்த மாசுபாட்டின் விளைவாகப் பெருமளவு நோய்கள் உருவாகின்றன. மரபியல் கோளாறுகள், சுவாசக் கோளாறுகள் ஏற்படுகின்றன. டீசல் புகையிலிருந்து வெளியாகும் நுண்துகள்களால் இருமல், தொண்டை கமறல், நுரையீரல் புற்றுநோய் போன்றவை உருவாகின்றன. இதுபோல பெட்ரோல் வாகனங்களில் இருந்து வெளியாகும் பென்சீன் போன்ற கரிம கூட்டுப் பொருட்கள் இரத்த சோகையை உருவாக்குகின்றன. மைய நரம்பு மண்டலத்தின் செயல்பாட்டைப் பாதிக்கின்றன.

டீசல் வாகனங்களின் மாசுபாடு 100 விழுக்காடு என்கிறது மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியம். இந்த வாகனங்களில் இருந்து வெளியேறும் மாசில் உள்ள மிதக்கும் நுண்துகள்களின் அளவு அனுமதிக்கப்பட்ட

– அசுரன்

அளவைவிட 7-8 மடங்கு அதிகமாகும். வாகனங்களால் காற்றில் கலக்கும் நைட்ரஜன் ஆக்சைடுகளில் 95 விழுக்காட்டிற்கும் கந்தக வெளியீட்டில் 96 விழுக் காட்டுக்கும் டீசல் வாகனங்களே காரணம் என்கிறது மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியம்.




உலக சுகாதார அமைப்பு (WHO) ஆய்ந்து வெளியிட்டுள்ள பல விவரங்கள் சூழலுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியை எடுத்துரைப்பவையாக உள்ளன. டீசல் வாகனங்களின் மாசால் வெளியாகும் மிதக்கும் நுண்துகள்களால் (SPM) மட்டும் உலகளவில் ஆண்டுக்கு 4,60,000 சாவுகள் நிகழ்கின்றனவாம். இந்த மிதக்கும் நுண்துகள்கள் அனைத்தும் சமமாகக் கேடு விளைவிப்பதில்லை. 10 மைக்ரான் அளவுக்கும் சிறிய துகள்களே அதிகளவில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. அதிலும், 2.5-3.5 மைக்ரான் அளவுள்ள துகள்கள் மிகமோசமான விளைவுகளை உருவாக்குகின்றன. இச்சிறிய துகள்கள் சுவாசிக்கும்போது உள்ளே நுழைந்து, மூச்சுக்காற்று மூலம் வெளியாகாமல் நுரையீரலில் தங்கிவிடுகின்றன. இதனால் நுரையீரல் புற்றுநோய் ஏற்படுகிறது. அண்மையில் இங்கிலாந்தில் மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆய்வில் டீசல் வாகனங்களில் வெளியாகும் நுண்துகள்களில் 90 விழுக்காடு 1 மைக்ரானுக்கும் சிறிய அளவில் வெளிப்படுவது கண்டறியப்பட்டுள்ளது.

இதுபோல உடல்நலனுக்குப் பெரும் தீங்கு விளைவிப்பது ஓசோன் காற்று ஆகும். நைட்ரஜன் டை ஆக்சைடானது சூரிய ஒளியில் ஹைட்ரோ கார்பனுடன் வினை புரியும்போது ஓசோன் வெளியாகிறது. இந்த ஓசோனானது இரத்தத்தில் ஆக்சிசன் கலப்பதைத் தடுக்கிறது. இந்த நச்சுக் காற்றானது மூச்சிளைப்பை (ஆஸ்துமா) ஏற்படுத்துகிறது. நுரையீரலின் செயல்பாட்டைக்குறைக்கிறது. இதனால் குழந்தைகளும், இளையோரும் முதியோர்களைவிட அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர். ஏற்கெனவே மூச்சிளைப்பால் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகள் கடுமையாகக் பாதிக்கப்படுகின்றனர். ஓசோன் காற்று உருவாவது மழைக்காலத்தில் குறைவாகவும் வெயில் காலத்தில் அதிகமாகவும் இருக்கிறது. ஆனால், காற்றில் கலக்கும் ஓசோனை இன்றுவரை மாசுகட்டுப்பாட்டு வாரியம் அளவிடவே இல்லை.

டீசல் வாகனங்களிலிருந்து வெளியாகும் மாசால் இவ்வளவு கேடுகள் வரும் என்பதை நேற்றுவரை நாம் சிந்தித்திருப்போமா? 1995ஆம் ஆண்டு மட்டும் 36 இந்திய நகரங்களில் காற்றுமாசுபாட்டால் இறந்தோரின் ("கொல்லப்பட்டோரின்") தொகை 52,000-க்கும் மேல் என்கிறது வாசிங்டனில் உள்ள உலகக் கவனிப்பு நிறுவனத்தின் அறிக்கை. இது 1990ஆம் ஆண்டோடு ஒப்பிடுகையில் 28 விழுக்காடு அதிகமாகும்.

இந்தக் காற்று மாசுபாட்டால் டெல்லியில் ஒருமணி நேரத்துக்கு ஒருவர் உயிரிழக்கிறார் என்பது எவ்வளவு கொடிய செய்தி. இப்போது டெல்லியிலுள்ள நிலை நீடிக்குமானால் 2009-2010இல் டெல்லியிலுள்ள வாகனங்களின் எண்ணிக்கை சுமார் 24 இலட்சம் ஆகும். இது 1998 மார்ச் மாதத்தில் உள்ளதைப் போல 3 மடங்கு ஆகும். இது இப்போது நாட்டிலுள்ள மொத்த வாகனங்களின் எண்ணிக்கைக்குச் சமமாகும். இப்போதே நிலைமை இப்படி என்றால், அப்போது...?

1975 முதல் 1995 வரையான 20 ஆண்டுகளில் இந்தியப் பொருளாதாரம் 2.5 மடங்கு வளர்ச்சி அடைந்துள்ளது. தொழிற்சாலை மாசுபாடு 3.47 மடங்கு வளர்ச்சி அடைந்துள்ளது. வாகன மாசுபாடோ 7.5 மடங்கு அதிகரித்துள்ளது. தலைநகரின் இன்றைய சூழல்கேடு குறித்து 17 புகழ்பெற்ற மருத்துவர்கள், நச்சியல் வல்லுநர்கள் அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

தலைநகரில் தடையற்றுப் பெருகிய காற்று மாசுபாட்டுக்கு எதிராக அறிவியல், சுற்றுச்சூழல் மையம் தூய காற்றுக்கான இயக்கத்தைத் தொடங்கியது. இந்தச் சிக்கல் நீதிமன்றப் படிக்கட்டுகளையும் தொட்டது. ஆம் புகழ்பெற்ற சுற்றுச்சூழல் வழக்கறிஞரான எம்.சி. மேத்தா உச்சநீதிமன்றத்தில் பொது நல வழக்கொன்றை தொடர்ந்தார். இந்த வழக்கில் கடந்த ஏப்ரல் 29ஆம் நாள் தீர்ப்பளித்த உச்சநீதிமன்றம் கார்களைப் பதிவு செய்வது முதல் எந்திரங்களை மாற்றியமைப்பது வரை பல கட்டுப்பாடுகளை விதித்தது.

இதனால் 2001ஆம் ஆண்டுதான் யூரோ - I தரம் நடைமுறைப்படுத்தப்படும் என்றிருந்ததற்குப் பதிலாகக் கடந்த சூன் முதல் நாளுக்குள் நடைமுறைப்படுத்தவும் யூரோ II தர அளவுகோலை ஏப்ரல் 2000ஆம் ஆண்டிற்குள் நடைமுறைப்படுத்தவும் வழிவகை செய்யப்பட்டது.

இதனால் யூரோ - II தரத்தைக் கொண்டுள்ள வாகனங்களை எவ்விதக் கட்டுப்பாடுகளும் இன்றி பதிவு செய்யவும், யூரோ - I தரமுடைய கார்களுக்குக் குறித்தகாலக் கெடுவுக்கே அனுமதியளிக்கவும், ஏப்ரல் 2000 வரை தேசியத் தலைநகர வட்டாரத்தில் (National Capital Region) ஒவ்வொரு மாதமும் அதிகபட்சம் 1250 பெட்ரோல் வாகனங்களையும் 250 டீசல் வாகனங்களையும் மட்டுமே பதிவு செய்யவேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டது.

இந்தச் சிக்கல் குறித்து உச்சநீதிமன்றம் தெரிவித்த கருத்த என்னவென்றால், மாசுபடுத்துவதில் டீசல், பெட்ரோல் கார்களே முக்கிய பங்கு வகிக்கின்றன.

அனைத்து கார் ஏற்றுமதியாளர்களும் ஏற்றுமதிச் சந்தைக்கென யூரோ-II தர நிர்ணயத்துடன் கார்களைத் தயாரிக்கின்றனர். அப்படியிருக்கும்போது உள்நாட்டுச் சந்தைக்கு மட்டும் ஏன் முடியாது?

கார் உற்பத்தியாளர்கள் தரமற்ற தொழில்நுட்பத்தை இந்தியாவில் கொண்டு வந்து தள்ளுகின்றனர்.



கார் தயாரிப்பு நிறுவனங்களுக்கு இடையேயான வியாபாரப் போட்டியானது இந்தியாவிலும் யூரோ தர நிர்ணயத்தை எட்ட உதவும்.

கார் தயாரிப்பாளர்களோ இந்த மாசுபாட்டுக்கு இரு சக்கர வாகனங்களும், மூன்று சக்கர வாகனங்களுமே 60 விழுக்காடு காரணம் என்கின்றனர். அனைத்து தயாரிப்பாளர்களுமே யூரோ தர நிர்ணயத்தை வரவேற்கின்றனர். ஆனால் கால அவகாசம் கேட்கின்றனர். மேலும் இத்தொழில் நுட்பத்திற்காக அதிகம் செலவிட வேண்டியிருப்பதால் சராசரியாக ஒரு காரின் விலை 12,000 ரூபாய் வரை அதிகரிப்பதால் தமது சந்தை வாய்ப்புகள் குறுகிவிடும் எனவும் நம்புகின்றனர். ஆனால் உண்மையில் வியாபாரம், பொருளீட்டல் என்பது தவிர எள்ளளவும் சமூக அக்கறையோ, பொறுப்புணர்வோ இந்த வாகன தயாரிப்பு நிறுவனங்களுக்குக் கிடையாது என்பதே உண்மை. இதை தாவூ நிறுவன அதிகாரியே உறுதி செய்கிறார்.

வாகனப் போக்குவரத்தால் ஏற்படும் காற்று மாசுபாட்டைத் தடுப்பதில் இந்த நீதிமன்ற ஆணைகள் பெரிதும் பயன்படும் என்பது உண்மை. இது முற்றிலும் தீவிரமாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய தீர்ப்பு என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது.

மிக முக்கியமான இத்தகைய அவசர, அவசிய சிக்கல்களில் சரியான நடவடிக்கை மேற்கொள்ளப் படாவிட்டால்...இன்று,

'1992ஆம் ஆண்டு உலக வங்கியால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், உலக சுகாதார நிறுவனம் நிர்ணயித்த அளவை விட அதிக மாசுபாட்டால் பாதிக்கப்பட்டுள்ள 36 இந்திய நகரங்களில் மட்டும் 40,351 பெண்களுக்குக் காற்று மாசுபாட்டால் குறைபிரசவம் ஏற்பட்டுள்ளது'

- என்று படிப்பதைப் போலவே நாளையும் ஏதேனும் மிக மோசமான புள்ளி விவரங்களை நாம் படிக்க வேண்டியிருக்கும்.

*நன்றி : புதிய கல்வி*

ஆசிரியரும் வெளியிடுபவரும் : **க.முத்துசாமி**, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை–தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி:5368926/5368927/5364906



# கோ-ஆப்டெக்ஸின் வண்ணங்கள் உங்கள் எண்ணங்கள்.



<u>கோ-ஆப்டெக்ஸ் ரகங்கள்:</u>

- பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
- பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
- பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்
- லுங்கிகள், துவாலைகள், வேட்டிகள்
- படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி

★ இன்றே அருகில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்திற்கு வருகை தாரீர்.

பதிவு எண். M.8676
Licence No.TN/MS(C)/PP-23

